

நாட்டுக் குடிகளுக்குப் பொருந்தாத மேட்டுக்குடித் தலைமை



03



அரசியல் நெருக்கடியில் சர்வதேசத்தின் வகிபங்கு

06






# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 407 • 23 நவம்பர் 2018 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1440 • விலை 40.00







# அரசியல் கலவரம்: அதளபாதாளத்தை நோக்கிப் பொருளாதாரம்

நாட்டின் உயர் தலைமைகளான ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உயர்பீடங்களான பாராளுமன்றம், உயர்நீதிமன்றம் என அனைத்துமே கலவரத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் நாட்டின் பொருளாதாரம் வேகமாக அதளபாதாளத்தை நோக்கி வீழ்ந்து வருவதாக பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## சர்வதேச நாணய நிதி நிதியுதவிக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டுள்ளது



நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் கலவரத்தின் காரணமாக சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதற்கான கூட்டத்தை ஒத்திப் போட்டுள்ளது. (பக். 15)

## மூடி முதலீட்டுச் சேவை இலங்கையை தரமிறக்கியது



இலங்கையின் அந்நியச் செலாவணி விவகாரத்தை வைத்து, மூடி முதலீட்டுச் சேவை இலங்கையை B1 தரத்திலிருந்து B2 தரத்துக்கு கீழிறக்கியதன் ஊடாக இலங்கை ஸ்திரமான நிலையில் இருந்து பாதகமான நிலைக்கு (Negative) விழுந்துள்ளது. (பக். 15)

## இலங்கை நாணயம் மேலும் மதிப்பிழக்கிறது



அரசியல் கலவரம் காரணமாக இலங்கையின் நாணயம் சர்வதேச அளவில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் நாணயமான ரூபாவின் பெறுமதியும் வரலாறு காணாத அளவுக்கு மதிப்பிழந்திருக்கிறது.

(பக். 02)

## 1 பில்லியன் வெளிநாட்டுக் கடனை செலுத்த முடியாத நிலை



2019 ஜனவரி 10 இல் இலங்கை 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதாகவும் நிலையான அரசொன்று இல்லாமையினால் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை (பக். 15)

## 30 பில்லியன் வெளிநாட்டு முதலீடுகள் திரும்பிச் செல்கின்றன



அக்டோபர் 26 முதலான மூன்று வாரங்களுக்குள் 30 பில்லியன் ரூபா பெறுமதியான முதலீடுகள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (பக். 15)

## வெளிநாட்டுத் தலையீட்டைக் கோருகிறார் சம்பந்தன்



இலங்கையின் நெருக்கடியை சரியான வழியில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முடியுமான செல்வாக்கினைப் பயன்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் நடந்த கலந்துரையாடலின் போது கேட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் பணிமனையில் நடைபெற்ற இந்தச் சந்திப்புக்கு பதினைந்து நாடுகளின் ராஜதந்திரிகள் (பக். 15)

## பாராளுமன்றச் சிறப்புரிமை குற்றச் செயல்களை மறைப்பதற்கான கேடயமல்ல



அண்மைய பாராளுமன்ற செயற்பாடுகளை அதிர்ச்சியுடனும் திகிலுடனும் அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ள ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா, பாராளுமன்றச் சிறப்புரிமை என்பது குற்றச் செயல்களை மறைப்பதற்கான கேடயமல்ல என்றும் தெரிவித்துள்ளது.

சட்டத்தை நிலைநாட்டுவோருடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம், தண்டனையிலிருந்து (பக். 15)

## திகன வன்முறைகள் தொடர்பில் சுயாதீன அறிக்கை வெளியீடு



திகன பிரதேசத்தில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் பொதுஜன கமிஷன் ஒன்று அறிக்கை தயாரித்துள்ளது. கண்டி மதங்களுக்கிடையிலான கமிட்டி (Kandy Inter Religious Committee) தயாரித்துள்ள இந்த அறிக்கை இன்று வெள்ளிக்கிழமை (23) கண்டி புஷ்பதான அரங்கில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது என இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் காமினி ஜயவீர தெரிவித்தார். (பக். 15)

## பாராளுமன்றத்தை அசிங்கப்படுத்தியதற்கு மக்கள் கொடுத்த விலை 8 கோடி



அரசியல் கலவரத்தின் போது அசிங்கமாக நடந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டு மக்களின் பணத்தையே வீணடித்துள்ளார்கள் என்பது தொடர்பிலும் இதற்குத் தாம் கொடுத்த விலை என்ன என்பது தொடர்பிலும் எதுவும் தெரியாத அப்பாவிகளாக மக்கள் இருப்பதுவே இந்த அடாவடித்தனங்களுக்கு எதிராக மக்கள் திரண்டு எழாமைக்கு முக்கிய காரணம் எனப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

(பக். 14)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பொது அறிவு வினாக்கள்
## (நிர்வாகத் துறை)

1. உலகில் முதல் முதலில் மிளகாய்த் தூள் போர் நடந்த பாராளுமன்றம் எது?

★ இலங்கை பாராளுமன்றம்.

2. சபாநாயகருக்கு தண்ணீர் ஊற்றி வரவேற்கும் நிகழ்வு எங்கு நடை பெற்றது?

★ இலங்கை

3. பாராளுமன்றத்தில் கத்தி என்னும் கதாயுதம் பயன்படுத்திய வீரன் யார்?

தேவ மன்னப் பெரும

4. முதன் முதலில் எத்தனை பொலிசார் பாராளுமன்ற சமரில் படுகாயமடைந்தனர்?

★ 7 பேர்

5 . ஒலிவாங்கியை முறித்து சாதனை படைத்த பாராளுமன்ற வீரரின் பெயர் என்ன ?

★ சாமர பண்டார

6. ஒரே பாராளுமன்றத்தில் இரு பிரதமர் உள்ள நாடு ?

★ இலங்கை

7. மனநோயாளிகள் கூட ஜனாதிபதி ஆக முடியும் என்பதை ஜனநாயம் மூலம் உலகிற்கு உணத்திய நாடு?

★ இலங்கை

8. 24 மணித்தியாலத்தினுள் இரண்டு கட்சியில் அங்கத்துவம் பெற்ற ஜனநாயக தொண்டன் யார்?

★ வடிவேல் சுரேஷ்

9. வந்திட்டேன்னு சொல் என தன்னுடைய சொந்த இடத்திலேயே வந்து காமடி காட்டிய அமைச்சர் யார்?

★ டக்ளஸ் தேவானந்தா

10. இலங்கை பாராளுமன்ற செல்பி புள்ள யார் ?

★ விஜயகலா

11. விஜயகலாவுடன் செல்பிக்கு எப்போதும் துணைபோபவர் யார்?

★ அமீர் அலி

- சப்ரினா ஹஸன்




**சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை**

**cartoon of the week**



# குரங்கின் கையில் பூமாலை



இலங்கை காப்புறுதி நிறுவனத் தலைவராக நாலக்க கொடஹேவ நியமனம். இவர் முன்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் Securities and Exchange Commission இன் தலைவராக இருந்தார். இவர் தலைவராக இருந்த காலத்தில் கொழும்பு பங்குச் சந்தையில் ஒரு போதும் இல்லாதவாறு முறைகேடான வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றன.

திலித் ஜயவீர (தெரன மற்றும் ட்ரை எட் நிறுவனங்களின் தலைவர்), தம்மிக்க பெரேரா (இலங்கையிலுள்ள பெரிய பணக்காரர்களில் ஒருவர், சம்பத் வங்கி, ஹேலீஸ், ரொசல்ஸ், PABC, LB Finance உட்பட இருபதுக்கு மேற்பட்ட பெரிய தனியார் நிறுவனங்களின் தலைவர்), நிமல் பெரேரா (தம்மிக்க பெரேராவின் நெருங்கிய நண்பர், பங்குச் சந்தை Manipulation இல் பழுத்த அனுபவம் உள்ளவர்) போன்றவர்கள் குழுவாக இணைந்து பங்குச் சந்தையில் முறைகேடாக கோடி கோடிகளில் உழைத்தனர். இவர்களது பின்னணியில் ராஜபக்ஷவின் கருப்புப் பணம் இருந்ததாக அப்போது சந்தேகிக்கப்பட்டது.

இப்போது அதே நாலக்க கொடஹேவ இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## படித்த பண்பாடானவர்கள் மாத்திரம்



சகல தேர்தல்களிலும் படித்த பண்பாடானவர்கள் மாத்திரம் தான் வேட்பாளராக வரவேண்டும் என தேர்தல் ஆணையாளர் நிபந்தனையிட வேண்டும்

- ஹமீம் அஸ்ஹாரி

## அரசியல்

அரசியல் ஒரு சாக்கடைதான்
நீங்களே அதை சுத்தம்
செய்யாதவரை

சட்டம் ஒரு இருட்டறைதான்
நீங்களே அதற்கு ஒளியூட்டாத
வரை.

- முஹம்மட் ஜவாஸ்

## ஜும்ஆ தொழுகை?



வெள்ளிக்கிழமை பாராளுமன்றம் கூட்டுவதால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஜும்ஆ தொழுகை திட்டமிட்டு பாழாக்கப்படுகிறதா..?

என்று இதுவரை யாரும் ஒரு ஆய்வுக்கட்டுரை எழுதவில்லை.

- ஜனூஸ் சம்சுதீன்

## தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி



'நீங்கள் ஒற்றுமையானது சந்தோசம், தமிழ் கட்சிகளும் ஒன்றாக, ஒருமித்த தமிழ் பேசும் அணியாக, அணிவகுத்துச் செல்வது மிகப்பெரிய சந்தோசம், முயற்சி செய்தால் பெரும்பான்மை அரசியல் வாதிகளிடம் கெஞ்சவேண்டி வராது, அவர்கள் காலடிக்கு வருவார்கள்.

தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி உருவாக இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

- நஜாத் கே.எல்

## பிழையானோராய் இருக்கின்றனர்



பிழை (X) அடையாளமிட்டு தானே தெரிவு செய்தோம்!! அதனால் தானோ என்னவோ, பாராளுமன்றத்தில் பெரும்பாலானோர் பிழையானோராய் இருக்கின்றனர்!! - மஹ்பிஊ

# உயன்வத்தை நூரானியா பாடசாலையிலிருந்து உதயமாகும்
# 'நகரும் மின்குமிழ்'

• அனஸ் அப்பாஸ்

மூன்று வகையான விஷேட அம்சங்களுடனான 'நகரும் மின்குமிழ்' ஐக் கண்டு பிடித்து மாவனெல்லை -உயன்வத்தை நூரானியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் சாதனை படைத்துள்ளனர். அப்துல் கப்ரீபார்- சித்தி நிஸா தம்பதிகளின் புதல்வர் A.G.M. முஷர்ரப் மற்றும் அப்துல் ரவூப் - ஐனுல் பரீதா தம்பதிகளின் புதல்வர் A.R.M. ரஸீன் ஆகியோரே இந்தக் கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளனர்.

சந்தையில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமான எளிமையான பொருட்களைக் கொண்டு இம்மின்குமிழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. மிகவும் குறிப்பாக, இம் மின்குமிழை தொலைகட்டுப்படுத்தி (Remote) அல்லது கைபேசி (Mobile phone) மூலம் கட்டுப்படுத்தவும் முடிகின்றது.

2017 ஆம் ஆண்டு நூரானியா முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு தேசிய புத்தாக்குனர் போட்டிக்கான விண்ணப்பம் கிடைக்கப் பெறவில்லை. மாணவர்கள் மனம் தளராமல் ஆசிரியர்கள் தொடர் ஊக்கமளித்தலை மேற்கொண்டனர். வலய மட்ட, மாகாண மட்ட போட்டிகளில் பங்குபெற மாணவர்களுக்கு தொடர் வழிவகைகளைச் செய்தனர். குறிப்பாக, விஞ்ஞான பாட ஆசிரியை A.L.A. நிஸா அவர்களின் வழிகாட்டலால் தரம்-11 இல் கல்வி பயிலும் இவ்விருவரும் தேசிய மட்ட போட்டிக்குச் செல்ல வாய்ப்புக் கிட்டியது. தேசிய மட்டத்தில் வரவேற்பை வென்ற இவர்களது கண்டுபிடிப்பு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.



இந் நகரும் மின்குமிழின் மூன்று வகையான விஷேட அம்சங்கள் இதோ,

**1. சக்தி விரயத்தை தவிர்த்து, உச்ச பயனைப் பெறல்.**

பாடசாலை மாணவர்கள் அல்லது அலுவலகத்தில் வேலை செய்வோர் தமது அறையில் நடுவில் அல்லது பக்கங்கள் இரண்டில் பொருத்தப்பட்டிருக்கும் மின்குமிழால் பலபோது அசௌகரியங்களை எதிர்நோக்குவதுண்டு. எழுத்து வேலைகளின்போது, நிழல் விழுதலால் தடைகள் ஏற்படுவதுண்டு. மேலும், இவ்வேலைகளுக்கு பிரத்தியேகமாக ஒரு மேசை மின்குமிழை (Table Lamp) பயன்படுத்துவதானால், அதற்கு பிரத்தியேகமாக ஒரு இடம் ஒதுக்கப்பட வேண்டி இருக்கின்றது. அதில் மின்சாரக்கசிவுகள் காணப்படின் அதுவும் ஆபத்தாக அமைகின்றது.

மேசை மின்குமிழ் பாவித்தாலும், அதன் ஒளி மேசையின் மேல் மாத்திரம் படுவதால் அறையின் இதர பகுதிகள் இருள் சூழும், அதனால் ஒரு அறையில் இரு குமிழ்கள் ஒளிர்கின்றன. மின்சார விரயமும் ஏற்படுகின்றது. இவற்றை இந்த புதிய கண்டுபிடிப்பு நிவர்த்திக்கின்றது. தேவையான அளவு ஒளியை கூட்டிக் குறைக்க, எந்தவொரு இடத்திலும் தேவைக்காக பயன்படுத்த முடிகின்றது.

**2. அலங்கார விளக்காகப் பயன்படல்**

வீட்டின் முன்பகுதி பாதை இரு மருங்கிலும் அழகுக்காக இதனை அலங்கார விளக்காகப் பயன்படுத்த முடியும். வீட்டின் அழகை இது மேலும் மெருகூட்டும்.

**3. பாதுகாப்புக் கருவியாகத் தொழிற்படல்**

இந்நகரும் மின்குமிழை பாதுகாப்பிற்காகவும், கண்காணிப்பிற்கு உதவியாகவும் பயன்படுத்த முடியும். அதாவது இம்மின்குமிழில் ஒரு கேமராவைப் பொருத்துவதன் மூலம் WiFi மூலம் வீட்டிலிருந்தவாறே வெளிப் பரப்புக்களை கைபேசி மூலம் இலகுவாக அவதானிக்க முடியும். சாதாரணமாக ஒரு பாதுகாப்புக் கேமரா (CCTV) மூலம் ஒரு சிறிய பரப்பையே அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக பல கேமராக்களை வலது, இடது, பின் பகுதி, முன் பகுதி என பல இடங்களுக்கு பொறுத்துவதுண்டு. ஆனால், இந்நகரும் மின்குமிலைப் பொறுத்துவதால் அப்பகுதியின் அனைத்துத் திசைகளினதும் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள முடிகின்றது என இக் கண்டுபிடிப்பு குறித்த அவர்களது விவரணம் அமைகின்றது.



எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளர்களாக உருவாகி இன்னும் பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு, அபிவிருத்தித் துறையில் இலங்கைத் தாய் நாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதை தமது இலட்சியமாக இவர்கள் முன்வைக்கின்றனர்.

"புகழனைத்தும் இறைவனுக்கே அல்ஹம்துலில்லாஹ்!" அடுத்து பெற்றோர்க்கும், பாடசாலை அதிபர், உப அதிபர் விஞ்ஞான பாட ஆசிரியர்களான A.L.A. நிஸா, M.S.F. ஜெஸ்மின், A.H.F. ருஷ்தா, யஸ்மினா ஆகியோர்க்கும், ஆசிரியர் இஸ்மத் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாவனெல்லை வலய ஆங்கில் பாட ஆசிரிய ஆலோசகரான திருமதி M.F.F. முனீரா, கேகாலை புத்தாக்குனர் கழகங்களுக்கு பொறுப்பான திரு.ஜெய் திலக, பதுரியா மத்திய கல்லூரியின் ஆய்வுகூட பொறுப்பாசிரியர் திருமதி ஸீனா ஆகியோர்க்கும், ஜனாப் அதாஉர் ரஹ்மானுக்கும் நன்றிகளை இவர்கள் தெரிவிக்கின்றனர்.

"உங்களின் பொழுதுபோக்கை பயன் தரும் ஒன்றாகச் செலவிடுவதுடன், உச்சபட்ச திறன்களை அதன்போது வெளிப்படுத்துங்கள்" என சக மாணவர்களுக்கு இவர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

வெறும் கண்டுபிடிப்பாக மாத்திரம் இதனை நோக்கி, அடுத்த கண்டுபிடிப்புக்கு நகர்வதுடன் மாத்திரம் இராமல், இக் கண்டுபிடிப்பை வணிகமயப்படுத்தும் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு இவர்களுக்கு வழிகாட்டல்களை பாடசாலையும், தொடர்புடைய தரப்பினரும் வழங்க வேண்டும்.

அதிகரித்துச் செல்லும் வாழ்வாதார சிக்கல்களால் நாளுக்கு நாள் அல்லலுறும் குடும்பங்களுக்கு இவ்வாறான கண்டு பிடிப்புக்கள் விமோசனமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## இலங்கை...

(01 ஆம் பக்கத் தொடர்)

மூடியின் அறிக்கைக்குப் பின்னர் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக ரொய்ட்டர் சுட்டிக் காட்டுகிறது.

கடந்த புதன்கிழமை (21) அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கையின் ரூபா 178.00 ஆகக் காணப்பட்டது. இது இதுவரையான காலப்பகுதியில் அடைந்த மோசமான பெறுமதியாகும். Refinitiv Eikon data தரவுகளின்படி இந்த வருடத் தில் இது வரை இலங்கையின் ரூபா 15.9 வீதத்தால் மதிப்பிழந்திருக்கிறது.

## அளவுக்கு அதிகமான ஆசை கண்ணை மறைத்து விட்டது



மஹிந்த ராஜபக்ச கொஞ்சம் பொறுத்து இருந்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அமோக வெற்றி ஈட்டிப் பெருமையுடன் பிரதமராக ஆகி இருப்பார். அளவுக்கு அதிகமான ஆசை கண்ணை மறைத்து விட்டது. மைத்திரியின் அநியாயத்திற்குத் துணை போனார். ஒரு யுத்த வீரன் தலை குனிந்து அவமானப்பட்டு நிற்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது.

முஹம்மத் நஜ்முதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• பியாஸ் முஹம்மத்

# நாட்டுக் குடிகளுக்குப் பொருந்தாத மேட்டுக்குடித் தலைமை





கால் நூற்றாண்டுகளாக முயற்சித்தும் பதவிக்கு வர முடியாமல் போன, கிடைத்த அவகாசங்களிலும் நிலைத்து நிற்க முடியாமல் போன ஒரு அரசியல் வரலாற்று நாயகனாக ரணில் விக்கிரமசிங்கவை, நடந்து முடிந்த யாப்புச் சதிப் புரட்சியோடு நாடு பதிந்து வைத்து விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியே தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கும் வகையில் ஜே.ஆர். ஜயவர்தன உருவாக்கி வைத்த அரசியல்யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியை 17 வருடங்கள் ஆட்சியில் இருத்தியது. பிரேமதாசவின் கொலையோடு இடையில் டி.பி.விஜேதுங்க போன்ற ஒருவரிடம் ஆட்சி கைமாறியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைப்பதற்குத் தோதாக அமைந்தது.

1994 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி நடந்தேறியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விஜேதுங்க வாய்த்தது போல தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சிக்கு மைத்திரிபால சிரிசேன வாய்த்திருப்பது வரலாறு ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெற்றுத் தந்த அவகாசமாக அமைந்திருக்கிறது. ஆனாலும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத அளவுக்கு 25 வருடங்களாகத் தோல்வியைத் தழுவி வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அதற்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது.

ஜேஆர் ஜயவர்தனவின் பிடிவாதமான மேட்டுக்குடி அரசியலை விட பின்னர் வந்த பிரேமதாசவினுடைய ஏழையின் தோழன் (துப்பத்தாகே ஹிதவத்தா) அரசியலே நாட்டுக்குப் பிடித்தமாக இருந்தது. அதனால் தான் ஜேஆர் வழி ரணில் விக்ரமசிங்கவை விட பிரேமதாச வழி சஜித்தினை ஆட்சியில் அமர்த்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்தவர்கள் பலரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சஜித் பிரேமதாச நாட்டில் எப்பகுதியில் இருந்து யார் அழைத்தாலும் பதிலளிக்கக் கூடியவர். எந்த மந்திரியினதும் பெயரைச் சொல்லி அழைக்கக் கூடியவர். எந்தப் பிரச்சினையிலும் தலையிடக் கூடியவர். அதனால் நாங்கள் அவரையே தலைவராக்க விரும்புகிறோம். இதற்காகவே நாங்கள் பேரணியில் கலந்து கொள்கிறோம். ரணிலைப் பாதுகாப்பதற்கு அல்ல. அவர் விடுத்த வேண்டுகோளின் பேரில் தான் சிரிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கான ஆதரவை எமது தொகுதியில் பெற்றுக் கொடுத்தோம். அதற்குப் பின்னரான இந்த மூன்றரை வருடங்களில் ஐதேகவின் தலைமை எம்மை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என என மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ பண்டார ஹேரத் தெரிவித்திருந்தார்.

உள்ளூரில் கால் பதித்திருந்தாலும் வெளிநாடுகளிலேயே தனது விசுவாசத்தை வைத்திருக்கின்றவர் என்கிற இந்தப் பதிவு தான் நாட்டுக் குடிகளிடம் இருக்கிறது. இதனால் தான் அவர்கள் ரணிலை விட சஜித்தை தமது தலைவராக்க விரும்புகிறார்கள்.

இதே கருத்தினை ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாப்பதற்கான அமைப்பும் வெளியிட்டிருக்கிறது. நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் ஐதேகவின் எழுச்சிக்காகவும் ஐதேகவின் தலைவர் பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட வேண்டும் என இந்த அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.ஆர்.எம். விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஐதேகவின் தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்க 25 வருடங்களாக வகித்து வருகிறார். கட்சியின் தலைவர் என்ற வகையில் கிடைக்கப் பெற்ற ஐதேக அரசாங்கத்தை சரிவர முன்னெடுத்துச் செல்ல அவரால் முடியாத நிலையிலேயே நாட்டில் இந்த நிலை தோன்றியிருக்கிறது எனவும் அவர் கூறியிருக்கிறார். (வீ 13. 11.18)

25 வருட காலத் தோல்வி ரணில் ஒரு வெற்றிகரமான தலைவர் அல்ல என்ற கருத்தை ஐதேகவினர் மத்தியில் ஆழமாகப் பதித்திருக்கிறது. எமது கட்சிக்கு புதிய தலைவர் ஒருவர் தேவை. அது வேறு யாருமன்றி சஜித் பிரேமதாசவாகவே இருக்க வேண்டும். அவருடைய தலைமையில் எந்தத் தேர்தலையும் எங்களால் வெற்றி பெற முடியும் என களுத்தறை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அஜித் பி. பெரேரா பண்டாரகமையில் நடந்த பேரணியில் தெரிவித்திருக்கிறார். (ல 13.11.2018)

ஐதேக.வின் குருநாகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷோக் அபேசிங்க தனது இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், எதிர்வரும் பொதுத் தேர்தலை வெல்வதற்கு ஐதேகவின் பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை முன்னிறுத்துவது தான் முழு நாட்டினதும் ஐதேக அங்கத்தவர்களின் எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்துள்ள அவர், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒட்டப்பட்டுள்ள வெளிநாட்டுக் கட்சி என்ற லேபலை நீக்கி, தேசியவாதத்துக்கு முன்னுரிமை அளிக்கும் கட்சியாக நாங்கள் முன்னே செல்வதற்கு எங்களுக்கு கட்சித் தலைமையில் மாற்றம் தேவைப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார். (ல 13.11.2018)

அலரி மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐதேக உறுப்பினர் நளின் பண்டார கருத்து வெளியிடுகையில், கட்சியினைப் பொறுத்தவரையில் கட்சியின் தலைமைத்துவத்தை சஜித் பிரேமதாசவுக்கு பெற்றுக் கொடுப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது என்று தெரிவித்த அவர், இதுவரையிலும் கட்சியின் ஒவ்வொரு நடவடிக்கையின் பின்னணியிலும் அவரே (ரணில்) காரண கர்த்தாவாக அமைந்துள்ளார். எதிர்காலத்திலும் அவர் உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுப்பார். இந்த விடயம் தொடர்பிலும் கட்சியின் தலைவர் சரியான தீர்மானத்தை எடுப்பார் என்று கூறியுள்ளார். (வீ. 12.11.2018)

இப்படிப் பலரும் தற்பொழுது கட்சிக்குள்ளிருந்தே தமது கருத்துக்களை வெளியிடுவதில் துணிச்சல் காட்டி வருவதில் இருந்து ரணிலை தலைமையில் இருந்து நீக்குவது என்ற கருத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளால் மேலோங்கியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. இது ஐக்கிய தேசியக் கட்சியினரின் கருத்தாக மட்டுமன்றி ஏனைய பல இடங்களிலும் கூட பேசுபொருளாக மாறியிருக்கிறது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது, சஜித் பிரேமதாசவை தலைமைத்துவத்தில் அமர்த்தினால் மட்டுமே ஐதேக இந்தத் தேர்தலில் தலைதூக்க முடியும் எனத் தெரிவித்திருக்கிறார். அதேபோல ரணில் ஏன் பொருத்தமற்றவர் என்பதற்கான நியாயங்களையும் அவர் முன்வைத்திருக்கிறார். நல்லாட்சி அரசு தொடங்கி இரண்டு மாதத்திலேயே வெளிநாட்டவருடன் இணைந்து மத்திய வங்கி பிணைமுறை மோசடி இடம்பெற்றது. ஜனாதிபதி தலையிட்டு ஆணைக்குழு நியமிக்கும் வரை இதனை மூடி மறைப்பதற்கே பிரதமர் முயற்சித்தார்.


உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதை விட்டு விட்டு அனைத்துப் பொருட்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவே முயற்சிகள் எடுக்கப்பட்டன. சீருடைகளுக்கு வவுச்சர் வழங்கும் திட்டத்தினால் உள்நாட்டு ஆடைத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டன. தன்னிச்சையாக முடிவெடுப்பவராக ரணில் இருந்தார். இப்படித் தான் அர்ஜுன் மகேந்திரன் விடயத்தில் நடந்து கொண்டார். அர்ஜுன் மகேந்திரன் விடயத்தில் அனைத்தையும் பொறுப்பெடுப்பதாக ரணில் கூறினாலும் அவரை நாட்டுக்கு அழைத்து வர எந்த முயற்சியையும் அவர் எடுக்கவில்லை.


இந்த நிலையிலேயே பாரிய கூட்டணி அமைத்து பொதுத் தேர்தலுக்கு முகங்கொடுக்க ரணில் தயாராகி வருகிறார். அவர் ஐதேகவின் தலைமையில் இருந்து நீங்கும் வரை எந்தக் கூட்டணியும் சாத்தியமாகாது. கூட்டுச் சேர்வதற்கு யாரும் வரவும் மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவை உள்நாட்டு அரசியல்வாதியாகப் பார்ப்பதை விட வெளிநாடுகளின் முகவராக அவரைப் பார்ப்பது தான் நாட்டு மக்களுக்கு வசதியாக இருக்கிறது.

கடந்த அக்டோபர் 31 இல் இடம்பெற்ற ஒரு ஊடக சந்திப்பில் உரை நிகழ்த்திய சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் ராஜா குணரத்ன ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் பதவிக்கு கொண்டு (பக்.14)

• லத்தீப் பாரூக்

# தற்போதைய அரசியல் குழப்ப நிலைக்கு மைத்திரியும் ரணிலுமே காரணம்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே இன்று ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைக்கு மூல காரணமானவர்கள் ஆவர். நாட்டில் நிலவும் அரசியல் பொருளாதார ஸ்திர நிலையற்ற நிலைமையின் நடுவே நாட்டை அரசியல்சாசன நெருக்கடி நிலைக்குள் தள்ளி ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நிலை தற்போது ஏற்படுத்தப் பட்டுள்ளது.

ரணில் மைத்திரி ஆகிய இருவரும் 2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டு மக்களுக்கு பெரும் வாக்குறுதிகளை அளித்தனர். நாட்டைச் சூறையாடியவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவோம் என்பது அவர்கள் அளித்த முக்கிய வாக்குறுதி. குற்றங்கள் புரிந்து ஜனநாயகத்துக்கு மெல்ல மெல்லச் சாவுமணி அடித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று அவர்கள் அளித்த வாக்குறுதியை அன்று இந்த நாட்டு மக்கள் நம்பினர்.

நாட்டில் அமைதியும் சமாதானமும் நல்லிணக்கமும் மீண்டும் நிலைநிறுத்தப்படும் என்று உச்சபட்ச நம்பிக்கையோடு சகல இன மக்களும் அவர்களுக்கு வாக்களித்தனர். ஆனால் இருவருமே இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதோடு மட்டுமன்றி இந்த நாட்டையே மோசமான நிலைக்கு கொண்டு சென்றனர்.

குற்றமும் ஊழலும் புரிந்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக ரணில் மைத்திரி அரசு சம்பந்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தது. மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச குற்றவாளியாகப் பிரகடனம் செய்யப்படவிருந்ததைத் தடுத்துக் காப்பாற்றியவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று ஒரு மாதத்துக்கு முன்னர் மங்கள சமரவீர அறிவித்திருந்தார். இதுதான் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த விடயம். நாட்டை சூறையாடிக் கொண்டு அவர்கள் ஒருவரையொருவர் காப்பாற்றி வந்தனர்.

தமிழ் மக்கள் தமது பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வேண்டி நிற்கின்றனர். சமாதானமும் நல்லிணக்கமும் மலரும் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு வாக்களித்த முஸ்லிம்கள் சிங்கள இனவாத சக்திகளிடம் இருந்து வன்முறைகளைச் சந்தித்தனர். பொலிஸும் விஷேட அதிரடிப் படையும் அதற்கு உடந்தையாக இருந்தன.

ஜனாதிபதி மைத்திரி மீதும் பிரதமர் ரணில் மீதும் நம்பிக்கை கொண்ட சிறுபான்மையினர் தங்களுக்கு இருவரும் துரோகம் இழைத்து விட்டதாகவே இன்று நம்புகின்றனர். மஹிந்த ஆட்சிக் காலத்தில் நடந்த பேருவளை, அளுத்கமை மற்றும் தர்காநகர் சம்பவங்களையும், தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் இடம்பெற்ற கிந்தோட்டை, அம்பாறை, அக்குறணை, திகணை சம்பவங்களையும் முஸ்லிம்கள் மறக்கவில்லை.

தங்களுக்குள்ள சிங்கள மக்களின் வாக்குகளைத் தக்கவைத்துக் கொண்டு ஆட்சியில் நிலைத்திருப்பதற்காக இந்தச் சம்பவங்களை ஆட்சியில் இருந்த எவருமே பொருட்படுத்தவில்லை.

உள்நாட்டில் கொழுந்து விட்டெரியும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அப்படியே இருக்க ஜனாதிபதியும் பிரதமரும் மாறிமாறி உலக நாடுகளைச் சுற்றி வந்தனர். ரணில் விக்கிரமசிங்க இதுவரை பிரதமர் என்ற ரீதியில் 30 க்கும் அதிகமான வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

இன்று அமெரிக்க ஐரோப்பிய மற்றும் இஸ்ரேல் யுத்த வெறியர்களின் கைக்கூலி நிலையமாகிவிட்ட ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடர் போன்ற பயணங்களுக்குக் கூட ஜனாதிபதி தனக்குத் துதி பாடும் ஒரு கூட்டத்தையும் அழைத்துச் சென்று பெருமளவு பணத்தை வீண் விரயம் செய்துள்ளார்.

இவற்றுக்கு அப்பால் நல்லாட்சி என்று சொல்லப்பட்ட இந்த ஆட்சியில் ஊழலும் மோசடியும் தலை விரித்தாடத் தொடங்கின. இதனால் இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை கரைந்தோடத் தொடங்கியதோடு மக்கள் தமக்குத் துரோகம் இழைக்கப்பட்டு விட்டதாகவும் கருதத் தொடங்கினர். இந்த தேசம் இவ்வாறு அரசியல் ரீதியாக நோயுற்றுக் கிடந்த ஒரு நிலையில் தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மத்திய வங்கி பிணை முறி மோசடியைக் காரணம் காட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து விலகுவார் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். இந்த எதிர்பார்ப்பில் மக்கள் தான் களைத்துப் போய்விட்டனர். ஆனால் தார்மீக விழுமியங்களை விட பதவியும் வசதிகளும் தான் கவர்ச்சிமிக்கவையாகத் [illegible] விலை கொடுத்தேனும் தங்களது நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்க ஐரோப்பிய இஸ்ரேல் சக்திகள் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் தக்க வைக்க நடவடிக்கை எடுத்தன.

இவற்றின் நடுவேதான் ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையிலான முறுகல் நிலையும் உச்சத்துக்கு வந்தது. இந்த முறுகல் நிலை நாட்டை மேலும் முன்னேற்றப் பாதையில் செல்ல விடாமல் தடுத்தது.

மக்களின் விரக்தி ஆழமாகிக் கொண்டே போன நிலையில் அரசாங்கம் சகல ஐரோப்பிய யுத்த வெறியர்களுக்கும் இந்த நாட்டின் கதவுகளைத் திறந்து விட்டது. அமெரிக்கா, ஐரோப்பா, இஸ்ரேல் என எல்லா யுத்த வெறியர்களும் இங்கே வந்து சேர்ந்தனர். அவர்களின் விளையாட்டுத் திடலாக இந்த நாடு மாறியது. 1979 இல் சோவியத் யூனியன் சிதைவடைந்தது முதல் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் ஆப்கானிஸ்தான், பொஸ்னியா, கொசோவோ, செச்னியா, சோமாலியா, ஈராக், லிபியா, சிரியா தற்போது யெமன் என பல நாடுகளை நாசமாக்கிய இந்தச் சக்திகள் பத்து மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொன்று குவித்துள்ளன. 50 மில்லியனுக்கும் அதிகமான மக்களை அடித்து விரட்டியுள்ளன. அவர்கள் இப்போது பல்வேறு நாடுகளில் மிக மோசமான நிலையில் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

இந்த நாடுகளிடம் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு பொதுவான வேலைத் திட்டம் உள்ளது. இந்தப் பின்னணியில் இவை எமது நாட்டுக்குள்ளும் நுழைந்துள்ளமை இங்கு முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத பதற்றத்தைத் தூண்டிவிடும் சக்திகளுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் சக்திகளும் இங்கு பிரவேசித்து தங்களது கிளைகளையும் திறந்துள்ளன. உதாரணத்துக்கு 2002 பெப்ரவரியில் குஜராத் மாநிலத்தில் 2000 முஸ்லிம்களைக் கொன்று குவித்த நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி இந்து பேரினவாத சக்தியான ஆர்.எஸ்.எஸ். இன் அடையாளச் சின்னமாகத் திகழ்கின்றது. பசுக்களைப் பாதுகாப்போம் என்ற போர்வையில் முஸ்லிம்களைக் கொலை செய்வதற்கு தனது கூலிப்படையினருக்கு மோடி பூரண அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த வி.எச்.பி அமைப்பு வவுனியாவில் கிளை ஒன்றைத் திறந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இன்னும் சில தமிழ் கூலிப்படையினர் மட்டக்களப்பில் இஸ்ரேலிய கொடிகளை ஏந்திய வாறு முஸ்லிம்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில் ஊர்வலம் சென்றுள்ளனர். அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் உட்பட சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் முஸ்லிம்களுக்கு எதிராக மூளைச்சலவை செய்யும் பணியையும் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

ஒரு காலத்தில் இந்த நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட இஸ்ரேல் இப்போது மீண்டும் சகல வசதிகளுடனும் இங்கு வந்துள்ளது. இன்று அவர்கள் சிங்களப் புத்திஜீவி சமூகம் உட்பட எல்லாப் பிரிவுகளிலும் ஊடுருவியுள்ளனர். அதன் கொலைகார இயந்திரமான மொஸாட் பற்றிய ஒரு நூலை சிங்களத்தில் மொழி பெயர்த்து அவர்கள் வெளியிட்டுமுள்ளனர். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# சிறப்புரிமை யாருக்கு?

நாறிப் போன நாடாக நாட்டை மாற்றியமைத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரங்கேற்றிய அசிங்கங்களை உலகமே கண்டு களித்துவிட்டது. எந்தச் சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்காக உள்நாட்டு அடையாளங்களை எல்லாம் நாடு இழந்து வருகிறதோ அந்தச் சர்வதேச சமூகத்தின் முன்னாலேயே அது உடுப்பிழந்து நிர்வாணமாகியிருக்கிறது. சொல்லப்படும் சர்வதேச சமூகத்துக்கு வேண்டுமென்றால் இந்த நிர்வாணம் கலாச்சாரமாக இருக்கலாம். ஆனால் பாரம்பரியமாக விழுமியங்களைப் பேணி வரும் இலங்கைக் கலாச்சாரத்துக்கு இது பொருந்துவதாக இல்லை.

இதற்குக் காரணமான பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்து தற்பொழுது பரவலாக எழத் தொடங்கியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் இதற்கான பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

ஜனநாயக நாட்டில் மக்களே இறைமையைத் தீர்மானிப்பவர்கள். மக்களால் தெரிவுசெய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட பின்னர் அவர்கள் மக்களை விடச் சிறப்பு வாய்ந்தவர்களாக மாறுவதில்லை. பாராளுமன்றத்துக்கென ஒரு சிறப்புரிமை இருக்கிறதேயொழிய பாராளுமன்ற அங்கத்தவர்களும் நாட்டு மக்களுக்கான சட்டத்தினாலேயே ஆளப்படுகிறார்கள். இந்த வகையில் பாராளுமன்றத்தில் குற்றம் விளைவித்த இலங்கைக் குடிமகனாயினும் தண்டிக்கப்பட வேண்டும் என நீதியை விரும்பும் பொதுமக்கள் எதிர்பார்ப்பது நியாயமானது.

கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோத்தரைத் தாக்கியது குற்றம். பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தது குற்றம். தனது கடமையைச் செய்ய விடாமல் அரச அதிகாரியைத் தடை செய்தது குற்றம். இவையெல்லாம் ஒரு பொதுமகன் செய்யும் போது அவனுக்குத் தண்டனை வழங்குபவர்கள் ஏன் இந்த நாறிப்போன அரசியல்வாதிகள் விடயத்தில் விட்டு வைக்கிறார்கள்? சட்டம் என்பது சகலருக்கும் சமம் என்றிருந்தால் பாராளுமன்றமத்தில் கலகம் விளைவித்த குண்டர்கள் ஏன் தண்டிக்கப்படாமல் இருக்கிறார்கள்? அவர்கள் ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது காரணமா? அப்படியென்றால் அவர்களைத் தூண்டி விடுவது அரசாங்கமா? இது தான் நிலைமை என்றால் நாட்டில் ஜனநாயகத்தை எங்கு போய்த் தேடுவது?

குற்றம் செய்தவர் பிரதமராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கும் போது அரசியல்வாதி என்ற அனுதாபத்தில் இவர்களை சும்மா விட்டுவிடும் போக்கு நாட்டுக்கு ஆரோக்கியமானதாக இருக்கப் போவதில்லை. பாராளுமன்றத்தின் கௌரவத்தைக் குலைத்து, அரசியல் யாப்பு மற்றும் புனிதமான நூல்களையெல்லாம் வீசியெறிந்து அகௌரவப்படுத்தி அட்டகாசம் புரிந்தவர்களையெல்லாம் எதுவும் செய்யாமல் விடுவதென்றால் நீதிமன்றத்தை அவமதித்தார் என்பதற்காக ஞானசார தேரருக்கு சிறைத் தண்டனை வழங்கியிருப்பது வெறும் நாடகம் என்பதையே தெளிவுபடுத்துகிறது.

ஞானசார தேரரை விடுவிக்கும்படி பொதுபலசேனா மற்றும் சிங்ஹலே அபி பௌத்த மதகுருக்கள் உள்ளிட்ட பலர் முன் அனுமதியின்றி ஜனாபதி செயலகத்துக்கு முன்னர் ஆர்ப்பாட்டம் செய்து, வீதித் தடைகளைத் தள்ளி பலவந்தமாக உள்ளே நுழைய முயற்சித்த போது பொலிசார் கலகம் மூளுவதைத் தடுப்பதற்காக கண்ணீர்ப் புகையும் நீர்த்தாரையும் அடித்துக் கலைத்திருக்கிறார்கள். பின்னர் இவர்களை அழைத்துப் பேசிய ஜனாதிபதி இதற்காக பௌத்த பிக்குகளிடம் வருத்தம் தெரிவித்ததுடன் இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் பணித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களின் போதெல்லாம் ஓட ஓட பௌத்த பிக்குகள் விரட்டியடிக்கப்பட்ட போதும் பொதுபல சேனா என்று வரும்போது மட்டும் ஜனாதிபதிக்கு வருத்தம் வருவது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

ஜனாதிபதி என்றாலும், ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றாலும் ஜனாபதி ஊட்டி வளர்க்கின்ற யாராக இருந்தாலும் சட்டம் என்பது யாவருக்கும் சமம் என்ற நம்பிக்கை குடிமக்களிடம் இருந்து இல்லாமல் போனால் நாட்டில் சட்டத்தை யாரும் கையில் எடுக்கலாம் என்ற நிலை தோன்றி நாடு அராஜகத்தை நோக்கித் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதனை மக்கள் சக்தி ஒன்றால் மட்டுமே தவிர்க்க முடியும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# யாப்பினை மீறுவது சாதாரண தவறொன்றாகவே கருதப்படுகின்றதே ஒழிய, மன்னிப்புக் கொடுக்க முடியாத அளவு பாரதூரமான தவறாகக் கருதப்படுவதில்லை

• விக்டர் ஐவன்

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு நவம்பர் 4ஆம் திகதி ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானியை இடைநிறுத்துவதற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவானது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார நிகழ்ச்சித் திட்டத்தை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை எடுத்திருக்காவிடின் ஜனாதிபதியின் அரசியலமைப்புக்கு முரணான சர்வாதிகார நிகழ்ச்சித் திட்டம் எவ்விதத் தடங்கலுமின்றி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, நாடு மிகப்பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும். அத்துடன் நீதித்துறைக்கான அங்கீகாரமும் முற்றாக வீழ்ச்சி கண்டிருக்கும்.

## நாடு மிகப்பெரும் நெருக்கடியில்?

இதுவரை காலமும் நாட்டில் வளங்களை கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் கொள்ளை உரிமையை தம்வசப்படுத்திக் கொள்வதற்கான அமைதிப் போராட்டமே நிலவி வந்தது. தற்பொழுது அது இரு கட்சிகளுக்கிடையேயான பகிரங்க அதிகாரப் போராட்டமாக மாறியிருக்கிறது. தற்போதைய இந்நெருக்கடியை உருவாக்கியவர் ஜனாதிபதியாவார்.

தான் இழைத்திருக்கும் தவறின் பாரதூரம் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய அழிவின் தன்மையை தற்போதேனும் புரிந்துகொண்டு இந்நெருக்கடிக்கு உடனடித் தீர்வினை பெற்றுக் கொடுப்பது ஜனாதிபதியின் பொறுப்பாகும். முப்படையினர் இன்னும் பக்கச்சார்பாக நடந்துகொள்ளாதது நாட்டின் அதிஷ்டமாகும். அவர்களது பக்கச்சார்பின்மை இன்னும் பாதுகாக்கப்பட வேண்டும்.

பொதுமக்களும் குறுகிய அரசியல் சிந்தனைகளிலிருந்து விலகி மோதல் ஏற்படக் காரணமாக அமைகின்ற விடயங்களை விட்டும் ஒதுங்கியிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தலைவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும். நீதித்துறையும் இப்பிரச்சினையை நியாயமான முறையில் தீர்ப்பதற்கான உத்தரவினை வழங்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்படுவதை விட்டும் தடுப்பது இச்சலகலரினதும் பொறுப்பாகும்.

19 ஆம் திருத்தத்திற்கு பிறகுள்ள ஜனாதிபதி அந்தத் திருத்தத்திற்கு முன்பிருந்த ஜனாதிபதிகளை காட்டிலும் பலம் குறைந்தவராவார். அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்தாலோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் தோல்வியடைந்தால் மாத்திரமே அவருக்கு பிரதமர் முதலான அமைச்சரவையை மாற்ற முடியும். இல்லாவிட்டால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு உறுப்பினர்களுக்கு அதிகமானவர்கள் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரிக்கை விடுக்கின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே அதனைச் செய்ய முடியும்.

மஹிந்த அணியிருக்கு ஆளும் அதிகாரத்தைக் கொடுக்கும் வேளையில் அவ்வணியினருக்கு பாராளுமன்றப் பெரும்பான்மை இருக்கவில்லை. பெரும்பான்மையை சரிசெய்து கொள்ள குறைபாடாகவுள்ள எம்பிக்களை சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பமாகவே பாராளுமன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எனினும் மஹிந்தவால் அக்குறிக்கோளை நிவர்த்தி செய்ய முடியவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தரப்புக்கு காணப்பட்ட ஆளும் அதிகாரத்தை நீக்கி, பெரும்பான்மையற்ற மஹிந்த அணிக்கு அவ்வதிகாரத்தை பெற்றுக் கொடுத்தமையானது அரசியலமைப்புக்கு முரணானதொரு விடயம் என்பதோடு பெரும்பான்மை பலமின்றி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ஏற்றதும் யாப்புக்கு முரணானதொரு விடயமாகும். பெரும்பான்மை அதிகாரத்தை பெற்றுக்கொள்ள ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு எம்.பிக்களைப் பெறுவதும் யாப்புக்கு முரணனாதாகும்.

பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்ததன் பின்னர் புதிய பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவி விலகி பெரும்பான்மை பலமிருந்த முன்னைய அரசாங்கத்திடமே ஆளும் அதிகாரத்தை ஒப்படைக்கும் கொள்கையை பின்பற்றியிருப்பின் இந்நெருக்கடியை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள முடிந்திருக்கும். இதற்குப் பதிலாக பெரும்பான்மை இல்லாமலேயே அதிகாரத்தில் அமர்த்தப்பட்ட அரசாங்கத்திற்கு தேர்தல் முடியும் வரையில் ஆட்சியில் இருப்பதற்கு இடமளிக்கும் வகையில் யாப்புக்கு முரணான வகையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார். இதுபற்றும் அவர் உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் [illegible]


முடிவுகளை எடுத்துச் செயற்படுவாராயின் முழு நாட்டையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ள அது காரணமாக அமையும்.

அரசியல் ரீதியில் ஜனாதிபதியை முகவரியில்லாமல் செய்வதற்கு இது காரணமாக அமையும் என இந்நெருக்கடியின் ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டிருந்தேன். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவுக்கான அங்கீகாரமும் மிகப் பாரியளவில் இல்லாமல் போவதற்குக் காரணமாக அமையும். ஜனாதிபதி நீதிமன்றத் தீர்ப்பை மீறி தொடர்ந்தும் தன்னிச்சையாகச் செயற்படுவாராயின் நாடு பேரழிவை சந்திக்கும் என்பதுடன், நாட்டின் சகல அரசியல் தலைவர்கள் மாத்திரமல்லாமல் மக்கள் மற்றும் நாட்டின் செயற்பாடுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

## சட்டமா அதிபரும் தேர்தல்கள் ஆணையாளரும்

இந்நெருக்கடியில் சட்டமா அதிபர் பின்பற்றிய நடைமுறையானது சட்டத்திற்கு முரணானதும் சட்டத்தை அவமதிப்பதாகவும் உள்ளது. இது அப்பதவியின் கௌவரத்திற்குக் களங்கமாகவும் உள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பான பிரதான அதிகாரியாகவும் காவல் தேவதையாகவும் சட்டமா அதிபரே உள்ளார். இந்நெருக்கடியை மக்கள் இறைமையுடன் தொடர்பான பிரச்சினையாகவே பார்க்கப்பட வேண்டும். கருணா திலக்க மற்றும் இன்னுமொருவர், தயானந்த திசாநாயக்க, தேர்தல் ஆணையாளர் மற்றும் இன்னுமொருவருக்கு எதிராக விசாரிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பில் வாக்குரிமை கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் மிக முக்கிய பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் என்கின்ற அத்தியாயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிக்கும் உரிமையை அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்ட அதிகாரத் துறைக்குள் உள்ளடக்கப்பட்டது.







அரசியலமைப்பின் படி, மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு வாய்ந்த பிரதான அரச அதிகாரியாக சட்டமா அதிபரே உள்ளார். எனினும் இந்நெருக்கடியின் போது சட்டமா அதிபர் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக அல்லாமல், மக்களது உரிமைகளை மிக மோசமான முறையில் மீறிய ஜனாதிபதியின் பாதுகாப்பாளராகவே செயற்பட்டார். சட்டமா அதிபர் ஜனாதிபதியின் சட்டவிரோத உத்தரவினை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை ரத்துச்செய்யுமாறு நீதிமன்றில் கோரியது மாத்திரமல்லாமல், ஜனாதிபதியின் அரசியலமைப்பை மீறிய செயற்பாடானது சட்டத்திற்கு உட்பட்டது என்பதாகவும் தெரிவித்திருந்தார்.

சட்டமா அதிபர் வெட்கமுள்ள, அச்சப்படும் நபரொருவராக இருந்தால் தான் வகிக்கும் பதவியை இராஜிநாமா செய்திருக்க வேண்டும். இன்றேல் பதவிக்குரிய பொறுப்பை சட்டரீதியான முறையில் மேற்கொள்ளவில்லை என்பதாக அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும்.

தேர்தல்கள் ஆணையாளரும் இவ்விவகாரத்தில் உறுதியானதொரு கொள்கையில் நின்று [illegible] இல்லை. நீதிமன்றுக்குச் செல்வது தனது பொறுப்பல்ல என்று அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றினை தாக்கல் செய்திருந்த போதிலும் அவர் இதனை தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் தாக்கல் செய்தாரா? அல்லது தனிநபரொருவராக தாக்கல் செய்தாரா? என்பது தெளிவில்லை. சட்டத்திற்கு முரணான வகையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தை களைத்து தேர்தலொன்றை அறிவிப்புச் செய்த பிறகு தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நீதிமன்றத்திடம் சென்று ஆலோசனைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

வாக்குரிமையை அடிப்படை உரிமையாக மாற்றிய மேற்குறிப்பிட்ட வழக்கில் (இத்தீர்ப்பினை சட்டமா அதிபர் ஜீ.ஜீ.எஸ். த சில்வா, மார்க் பிரணாந்து மற்றும் குணசேகர ஆகிய நடுவர் குழாமினால் வழங்கப்பட்டது) நிறைவேற்றதிகாரத்தின் சட்ட விரோத விதிமுறை ஒழுங்குகளை தேர்தல்கள் ஆணையாளர் பின்பற்றக் கூடாது என்றும், இது தொடர்பில் அவருக்கு தேவையான அதிகாரம் மற்றும் பாதுகாப்பு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஜனாதிபதிக்கான தற்காப்பு அதிகாரம் தனிப்பட்ட முறையிலேயே அன்றி அவர் அல்லது அவள் செய்யும் செயற்பாடுகளுக்காக அல்ல என்றும், அப்படியான சந்தர்ப்பங்களில் சந்தேகம் காணப்படுமாயின் நீதித்துறையை அணுகி தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வரலாற்று முக்கியத்துவமிக்க இந்தத் தீர்ப்பில் மிக முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியொரு வழக்குத் தீர்ப்பு இருக்கும் பட்சத்தில் அதைக் கருத்திற் கொள்ளாமல் தேர்தலை நடாத்துவதற்கு செயற்படுவதின் மூலம் இந்நெருக்கடியில் தேர்தல்கள் ஆணையாளர் மிகப்பெரும் தவறை இழைத்திருக்கிறார் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

## பண்பாடான அரசியல்

ஜனாதிபதி சிறிசேன அரசியலமைப்பை மீறுவதற்கு முன்பும் நாடு பெரும் நெருக்கடியிலேயே காணப்பட்டது. ஜனாதிபதி சிறிசேன அரசியலமைப்புக்கு முரணான வகையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை காணப்பட்ட கட்சியிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றி பெரும்பான்மையற்ற கட்சியிடம் அதிகாரத்தை ஒப்படைத்ததனாலும் இறுதியில் பாராளுமன்றத்தைக் கலைத்ததாலும் நெருக்கடியின் தன்மை மாறி யாப்பு ரீதியான நெருக்கடியாக மாற்றடைந்தது. இதனால் நாடு அராஜக நிலையை நோக்கிச் செல்லும் பயணம் வேகமடைந்தது.

இலங்கை அரசு முறைமை பலமான, ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசு முறையொன்றல்ல. ஜனநாயகம் பற்றிய அறிவு தொடர்பிலும் பொதுமக்கள் மாத்திரமல்லாமல் அரசியல் தலைவர்களும் கூட எப்பொழுதும் வறுமை நிலையிலேயே இருந்தார்கள். இலங்கையில் அப்போதிருந்த பிரபல அரசியல் தலைவர்கள் எல்லோரும் மக்களுக்கு சர்வஜன வாக்குரிமையை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சுதந்திரத்தின் பின் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிய தலைவர்கள் ஆட்சியதிகாரத்தை மக்கள் வாக்குகளால் பெற்றுக் கொண்டாலும் நாட்டை சர்வாதிகார மன்னர்கள் ஆட்சி செய்ததைப் போன்றே ஆட்சி செய்தார்கள்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிசேனவின் ஒக்டோபர் புரட்சி

# ஜனநாயகப் படுகொலைக்குக் குடைபிடிக்கும் குருட்டு ஊடகங்கள்

• மாலிக் பத்ரி



ஒக்டோபர் 26, 2018 சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு கறுப்பு தினமாகும். அன்றைய நாள் புதிய பிரதமர் ஒருவரை எதிர்பார்த்திராத நிலையில் ஜனாதிபதி சிறிசேன நியமித்ததிலிருந்து இக்கட்டுரை எழுதப்படும் வரை நாட்டின் அரசியல் கொந்தளிப்பான நிலைக்கு வந்துள்ளது. வரலாற்றில் என்றென்றைக்கும் இல்லாத அரசியலமைப்புக் குழப்பங்களும் பாராளுமன்ற அமளிதுமளிகளும் எல்லை மீறிச் சென்றுள்ளன.

மஹிந்தவுக்கு பாராளுமன்றப் பெரும்பான்மையை விலை கொடுத்தேனும் பெறலாம் என்ற ஜனாதிபதியின் ஊகம் தோற்றுப் போனது. இதனால் நவம்பர் 14 இல் பாராளுமன்றத்தைக் கூட்டுவதாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட ஜனாதிபதி, மஹிந்தவுக்குப் பெரும்பான்மை கிடைக்காது என்ற புலனாய்வுப் பிரிவின் அறிக்கையைப் புரிந்துகொண்டு 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தைக் கலைப்பதாக புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

உச்சநீதிமன்றத்திற்கு இவ்விவகாரம் கொண்டு செல்லப்பட்டபோது, ஜனாதிபதியின் அறிவிப்பை நீதிமன்றம் கேள்விக்குள்ளாக்கியது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் அரசியலமைப்பு சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என்பதை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு உணர்த்தியது.

இதனையடுத்து நவம்பர் 14 ஆம் திகதி ஒன்றுகூடிய பாராளுமன்றம் புதிய பிரதமர் மஹிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை 122 வாக்குகளால் நிறைவேற்றியது. அடுத்த நாள் 15 ஆம் திகதி மஹிந்த ஆற்றிய உரைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை லக்ஷ்மன் கிரியெல்ல கொண்டு வந்தபோது மஹிந்த ஆதரவாளர்கள் பாராளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியதை அடுத்து பாராளுமன்றம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை 16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடந்த அருவருப்பான, கீழ்த்தரமான காட்சிகளை இலங்கைப் பிரஜைகள் அனைவரும் ஒருபோதும் மறந்துவிட மாட்டார்கள்.

இலங்கையின் அரசியலமைப்பு சட்ட நிபுணர் லயனல் போப்பகே கூறுவது போல் இன்றைய அத்தனை அரசியல் நெருக்கடிகளுக்கும் விதை ஊன்றியவர் ஜனாதிபதியே. ஏனெனில், அரசியலமைப்பு சட்டத்தில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையை வென்ற ஒருவரையே ஜனாதிபதி பிரதமராக நியமிக்க முடியும். (Who in his opinion is most likely to command the confidence of parliament) என்ற அரசியலமைப்பின் வாசகத்தை ஜனாதிபதி அர்த்தம் தெரிந்து கொண்டே பிழையாகப் பிரயோகித்துள்ளார்.

'அவரது கருத்தில்' எனும் விடயத்தை வெற்று ஊகத்தின் அடிப்படையில் தீர்மானிக்க முடியாது. பாராளுமன்றத்தில் எந்தக் கட்சிக்குப் பெரும்பான்மை உண்டு என்பது தரவுகளின் மூலம் நிறுவப்பட வேண்டும். மஹிந்தவை நியமித்து விட்டு, பாராளுமன்றத்தை ஒத்தி வைத்து விட்டால் இடைப்பட்ட 14 நாட்களுக்குள் எதிர்க்கட்சியிலிருந்து சிலரை உள்ளீர்த்து விடலாம் என்ற கணக்கு மஹிந்த அணியினருக்குத் தப்பி விட்டது. அதனால் மைத்திரியின் ஊகமும் பிழைத்து விட்டது.

இதைச் சரிக்கட்டும் நோக்கில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை ஜனாதிபதி எடுத்தார். இது 19 ஆவது திருத்தத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும். அதனையே உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உணர்த்தியுள்ளது. அதன் முதல் அமர்வு இடம்பெற்ற திகதியிலிருந்து பாராளுமன்றத்தை அடுத்து வரும் நான்கரை ஆண்டுகளுக்கு முன்பாக ஜனாதிபதியினால் கலைக்க முடியாது என்பதே அரசியலமைப்பிலுள்ள தெட்டத் தெளிவான விடயம்.

முன்னாள் ஆட்சியாளர் மஹிந்தவும் அவருடன் இருக்கும் அணியினரும் தமக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள் என்ற உற்சாகமே இந்த அசாதாரண துணிச்சலை ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கக் கூடும். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியலமைப்பின் அந்த ஷரத்தை ஜனாதிபதியால் மீற முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட்டது. அரசியலமைப்பு சட்டம் குறித்த நிபுணர்களான ஜயம்பதி, லயனல் போப்பகே, ஜயதேவ உயன்கொட போன்ற முன்னணி அறிஞர்கள் இந்தக் கருத்தையே வலியுறுத்தி வருகின்றனர்.

அதிஷ்டவசமாக கரு ஜயசூரிய தலைமையிலான பாராளுமன்றமும் நீதித் துறையும் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் செயல்படுவது இலங்கை அரசியலில் ஓரளவு நம்பிக்கையைத் தருகின்றது. அதேவேளை, இக்கொதிப்பான நிலையிலும் இராணுவம் அரசாங்க விடயங்களில் நேரடியாகத் தலையிடாமல் இருப்பதும் இலங்கையின் ஜனநாயகம் பற்றிய ஒரு மெல்லிய நம்பிக்கையை தக்கவைத்துள்ளது.

பாராளுமன்றம் மக்கள் ஆணையைப் பெற்ற பிரதிநிதிகளின் சபை. அது மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கிறது. பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் வாக்களிக்கும் மக்கள் ஐந்தாண்டுகளுக்கான தமது பிரதிநிதிகளையே தெரிவு செய்கின்றனர். அந்த மக்கள் ஆணையை இடையில் மீறிச் செல்லும் அதிகாரம் இந்நாட்டில் எவருக்கும் இல்லை. அப்படியிருந்தால் அது ஜனநாயக விரோதமாகும்.

உள்ளூராட்சித் தேர்தலில் ரணில் அரசாங்கம் பெரும்பான்மை பெறவில்லை என்பதனால் ஏற்கனவே மக்கள் வழங்கிய ஆணையை இடையில் உதறித் தள்ள முடியாது. தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்போர் அதிகாரம் மோகம் பிடித்தவர்கள். தமது குற்றங்களையும் மோசடிகளையும் மூடி மறைப்பதற்கான ஒரே வழி அதிகாரத்தை மீளக் கைப்பற்றுவதுதான் என்று அவர்கள் முடிவு செய்துவிட்டனர்.

நான்கரை ஆண்டுகள் பொறுத்திருந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கலாம் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் 16 ஆம் திகதி பாராளுமன்ற அமளி துமளியை அடுத்து கூறியுள்ள கருத்து முக்கியமானது. அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக அவசரப்பட்டு பிரதமர் பதவியை மஹிந்த ஏற்றுக் கொள்ளக் காரணம் என்ன என்ற கேள்விக்கு கோத்தபாயவின் நிலைப்பாட்டுக்குள்ளேயே விடை இருக்கின்றது.

எதிர்வரும் ஒன்றரை வருடங்களுக்குள் இருக்கும் பாராளுமன்றம் பெரும்பான்மை ஆதரவு பெற்ற பிரதமரோடு நீடிப்பதுதான் ஜனநாயகம். இரண்டு முறை கூடிய பாராளுமன்றம் சட்டப்படியான பிரதமர் மஹிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தது. அதில் வெற்றியும் பெற்றது.



ஆனால், நடத்தப்பட்ட வாக்கெடுப்பு முறை ஏற்க முடியாதது என்ற ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பாராளுமன்றம் வெள்ளி 16 அன்று முறையான எழுத்து மூல நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானித்திருந்த போதே முற்கூட்டியே திட்டமிட்ட களேபரம் மஹிந்த அணியினரால் நடத்தப்பட்டது. அமைதியான முறையில் அன்றைய தினம் பாராளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்குமானால் மூன்றாவது முறையாகவும் பிரதமர் மஹிந்தவிற்கு எதிரான முறையான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்கும். இதனைத் தடுக்கவே தெவரப் பெருமவின் கத்தி விவகாரம் நாடகமாக்கப்பட்டு பாராளுமன்றத்தில் வன்முறைகளும் அருவருக்கத் தக்க காட்சிகளும் அரங்கேற்றப்பட்டன. இது இலங்கைக்கு மட்டுமன்றி, சர்வதேச நாடுகளிலும் பெரும் தலைக் குனிவை ஏற்படுத்தியுள்ளது. இதே விடயத்தை ரணில் தரப்பு நிகழ்த்தியிருந்தால் ஜனாதிபதி எப்படி பதிலளித்திருப்பார் என்பதை எளிதாக ஊகிக்கிலாம்.

நவம்பர் 18 இல் சிறிசேன அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார். இந்த சர்வ கட்சிக் கூட்டத்தை சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் ஜேவிபியினர் நிர்தாட்சண்யமாய் நிராகரித்தனர். ஜேவிபி இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கை நாட்டின் தற்போதைய அரசியல் கொதி நிலைக்கு ஐந்து காரணங்களை முன்வைத்ததோடு, அக்காரணங்களுக்குப் பொறுப்பானவர் ஜனாதிபதியே எனவும், அவற்றை நீக்கும் சக்தி ஜனாதிபதிக்கு இருக்கின்ற நிலையில், சர்வ கட்சித் தலைவர்களுடன் பேசுவதில் எந்த அர்த்தமுமில்லை என்றும் பகிரங்கமாகவே அறிவித்தது. கூட்டத்தின் முடிவில் ஜேவிபி சொன்னதுதான் உண்மை என்பது உறுதியானது.

பாராளுமன்றமும் நீதித் துறையும் சுயாதீனமாக செயல்பட வேண்டும் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒற்றை ஜனாதிபதியை விட 225 மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானோரின் கோரிக்கை ஏற்கப்பட வேண்டும். அதுதான் பாராளுமன்ற ஜனநாயகமாக இருக்க முடியும். அந்த வகையில் நான்கரை ஆண்டுகளுக்கு முன்பாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு சொல்வது போல் அரசியலமைப்புக்கு முரணானதே.

நாட்டில் இத்தனை அரசியல் அமளிதுமளிகளும் குழப்பங்களும் நீடிக்கும் நிலையில், இங்கே என்ன நடக்கின்றது என்பதை சாதாரண இலங்கையர்கள் புரிந்துகொள்வது சவாலாகவே உள்ளது. காரணம், நாட்டில் இன்று செயல்படும் ஊடகங்களின் பொறுப்பற்ற தன்மையாகும். ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகங்கள் தாம் விரும்பும் கட்சிக்கு அல்லது தனிநபர்களுக்கு ஜால்ரா போடும் ஒரு அருவருக்கத் தக்க ஊடகக் கலாச்சாரமே இன்று மேலோங்கி நிற்கின்றது.

ஒரு கட்சி அதிகாரத்தைக் கையேற்கப் போகிறது என்று ஊகம் கிளம்பிய வுடனேயே அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் அதிரடியாக அடிக்கும் பல்டி நமது அரசியலில் ஆச்சரியத்திற்குரியதல்ல. வரலாறு நெடுகிலும் இது நிகழ்ந்தே வருகிறது. மாற்றுக் கருத்து உள்ளவர்கள் ஊடகங்களின் உயர் பதவிகளிலிருந்து வெளியில் தூக்கி வீசப்படுவதும் வழக்கமாகவே இருக்கின்றது. இதனால், அரச ஊடகங்களிலிருந்து நாட்டில் நடைபெறுவதைப் புரிந்து கொள்வது மிகச் சவாலானது.

நாட்டின் அரசியல் கொந்தளிப்பு தொடர்பான வெவ்வேறு பக்கங்களை பல்வேறு தரப்பினரை அவர்களின் நிலைப்பாடுகளை மக்கள் பார்வைக்குக் கொண்டு வருவதே பொறுப்பு வாய்ந்த ஊடகங்களின் பணியாக இருக்க வேண்டும். ஆனால் வாய்ப்புக் கேடாக இன்று இலங்கையின் அனைத்து ஊடகங்களும் விதிவிலக்கின்றி பக்கச் சார்புக்குப் பலியாக்கப்பட்டுள்ளன. தனியார்த் துறை இலத்திரனியல் ஊடகங்கள் கடந்த ஒரு மாதமாக அறிக்கைப்படுத்தும் செய்திகள், அதன் உள்ளடக்கம் என்பவற்றை உற்று நோக்கினால் இந்த உண்மை புலனாகும்.

சுவர்ணவாஹினி, தெரன, சிரச, சக்தி போன்ற தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலமாகவேனும் நாட்டின் அரசியல் களநிலவரத்தை அறிவது சவால் நிறைந்தது. ''நாடே முதன்மையானது'' என்று கோஷம் எழுப்பப்படுகின்றது. ''தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்'', ''உண்மை, நடுநிலை, உடனுக்குடன்'' என்றெல்லாம் வாய்வழி உச்சாடனம் செய்யும் இந்த ஊடகங்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள், சண்டித்தனமானவர்கள், ஜனநாயக விரோத செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களின் செய்திகளுக்கு கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவுக்கு முன்னுரிமை வழங்குகின்றன.

உண்மைச் செய்திகளை எல்லாத் தரப்பின் நிலைப்பாடுகளுடனும் நடுநிலையோடும் பேசும் எந்தவொரு இலத்திரனியல் ஊடகமும் இலங்கையில் இல்லை என்பதுதான் உண்மை. ஏனெனில் தமது நிறுவன நலன்களுக்கும் தனிப்பட்ட நன்மைகளுக்கும் ஏறப இவ்வூடகங்கள் செய்திகளை தணிக்கை செய்து தாம் தேவையென்று கருதுபவற்றை மாத்திரம் ஒளிபரப்புகின்றன.

அரச ஊடகங்கள் சுயாதீனமாகச் செயல்படுவதற்கு மண்ணளவும் வாய்ப்பில்லை. அவை ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் ஊது குழல்கள். அதிகாரத்திலுள்ளவர் சொல்வதை திரும்பச் சொல்லும் கிளிப் பிள்ளைகள். பைஸ் அஹ்மத் பைஸ் சொல்வது போல் அரச நுகத்தடியில் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிறுவனங்கள் ரூபவாஹினி, ஐ அலைவரிசை, ஐரீஎன், வசந்தம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அதன் வர்த்தக சேவை, தேசிய சேவை அனைத்தும் இந்த வகைப்பட்டவை. லேக் ஹவுஸ் வெளியீடுகளான டெய்லி நியூஸ், சிலுமின, தினகரன் அனைத்தும் இந்த வகைப்பட்டவை.

தனியார் துறை அச்சு ஊடகங்கள் தான் ஓரளவு நடுநிலை வகிக்கின்றன. அதில் டெய்லி மிரர் ஆங்கிய இதழ் மற்றும் அதன் ஞாயிறு வெளியீடான சண்டே டைம்ஸ், சிங்கள வெளியீடான லங்காதீப போன்றவை அதிக பட்சம் நடுநிலை வகிக்கும் பத்திரிகைகளாகும். ஆனால், தனியார்த் துறை இலத்திரனியல் ஊடகங்களோ சரி-பிழை, உண்மை-பொய், நீதி-அநீதி, ஜனநாயகம்-ஜனநாயக விரோதம் போன்ற எந்தப் பெறுமானங்களையும் மதித்துச் செயல்படுவதாகத் தெரியவில்ல.

''பாலித தெவரப் பெரும கத்தியோடு பாராளுமன்றத்திற்கு வந்தமைக்கு ஆளுங் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.'' நவம்பர் 16 பாராளுமன்றத்தில் நிகழ்ந்த அமளி துமளி குறித்து இந்நாட்டின் மக்களுக்குச் சென்று சேர வேண்டிய செய்தி இதுதான் என்பதை ஊடகங்கள் எப்படித் தீர்மானித்தன? இவ்வாறான தெரிவு தமது நிறுவன நலன்களுக்கும் தனிப்பட்ட நன்மைகளுக்கும் அமைவானவை. அதனால் தான் நோம் சொம்ஸ்கி இதனை ஊடகப் பயங்கரவாதம் என்கிறார்.

ஒரு சுதந்திரமான, பகுத்தறிவுள்ள ஜனநாயகப் பெறுமானங்களை மதிக்கின்ற பண்பட்ட மனிதன் இதற்காகவே பாராளுமன்றத்தில் இவ்வளவு அருவருப்பான சம்பவம் நிகழ்ந்திருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டான். இந்நாட்டின் அரசியல்வாதிகள் ஜனநாயக விரோத செயல்களில் வரட்டுத் துணிச்சலுடன் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல. அந்த ஜனநாயக விரோதப் போக்கினை மறைமுகமாக அங்கீகரிக்கும் வகையில் ஊடகங்கள் ஜனநாயக விரோதமாகச் செயல்படுவதுதான் ஆச்சரியத்திற்குரியது.

இந்நாட்டில் நடுநிலையான ஊடகக் கலாச்சாரம் ஒன்று குறித்து சிவில் சமூகம் சிந்திக்க வேண்டும் என்ற செய்தியையும் இந்தக் கொதிப்பான அரசியல் சூழமைவு உணர்த்தி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசாட்சியும் இலக்கியமும் - 2

அரசாட்சியும் இலக்கியமும் தொடர்பில் பேசுகின்ற போது அது செப்பேட்டு இலக்கியங்கள் வரையில் விரிந்துசென்று அது தொடர்பாக இலங்கையின் மன்னராட்சிக் காலப்பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களை காண முடிகின்றது. அண்மைக்காலமாக அடிக்கடி பேசப்படுகின்ற தலையங்கமாக நல்லாட்சி என்னும் சொல்லாடல் மாறியிருக்கிறது. குறிப்பாக அபிவிருத்தி இலக்கியத்தை (Development Literature) குறிப்பிட முடியும். நல்லதொரு ஆட்சி காணப்படாமை அல்லது மோசமானதொரு ஆட்சி காணப்படுவது எமது சமூகத்தின் எல்லாப் பிரச்சினைகளுக்குமான அடிப்படையாகும் என்பது சகல தரப்புக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொருளியல் விஞ்ஞானத் துறையில் நோபல் பரிசு பெற்ற அமிர்த்தியா சென் ஒரு தடவை "ஜனநாயகம் நிலவும் சமூகமொன்றுக்கு ஒருபோதும் வறுமைக்கு முகம்கொடுக்க நேரிடாது" எனக் குறிப்பிட்டார். காரணம் ஜனநாயக சமூகத்தில் அத்தகைய பிரச்சினைகள் மற்றும் யதார்த்தங்கள் அடிக்கடி வெளியே வரும் என்பதாகும். இதனால் அவற்றுக்கான தீர்வுகள் சரியான முறையில் நடைபெறும் என்பதாகும்.

நல்லாட்சி மற்றும் பின்னடைவுக்கு இடையிலான வித்தியாசம் இதன் மூலம் விளங்குகிறது. இன்றைய உலகில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவி வழங்கும் போது பிரதான நிதி நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்கும் தரப்புக்கள் முன்வைக்கின்ற பிரதான நிபந்தனையாக இருப்பது 'நல்லாட்சி' என்கின்ற விடயமாகும். அதாவது ஒரு நாட்டிற்கு கடனுதவி கொடுக்கப்பட வேண்டுமென்றால் அங்கு சிறந்த ஆட்சி நிலவ வேண்டும் என்பது கொள்கையாகப் பார்க்கப்படுகின்றது. அந்நிறுவனங்களது சுற்றுநிருபங்களின் மிக முக்கிய விடயமாக நல்லாட்சி என்கின்ற அம்சமே உள்ளது.

அதுதொடர்பில் ஒரு தடவை கொபி அனான் தெரிவித்த கருத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். "சிறந்த ஆட்சி என்னும் நல்லாட்சி (Good Governance) தொடர்பில் விளக்கம் அளிக்கும் போது அதை ஏற்றுக் கொள்வதற்கான சில அடையாளங்கள் உள்ளன. ஒன்று ஜனநாயம், இரண்டாவது சட்டத்தின் ஆட்சி, மூன்றாவது பொறுப்புக்கூறல், நான்காவது வெளிப் படைத்தன்மை, ஐந்தாவது சமவுடமை, ஆறாவது எல்லோரையும் ஒன்றிணைத்துக் கொள்ளல், ஏழாவது பங்குபற்றல், எட்டாவது சமூக நீதி, ஒன்பதாவது மனித உரிமைகள்" ஆகும்.

நல்லாட்சி தொடர்பில் ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலும் ஐ.நா.வுடன் இணைந்த நிறுவனங்களுக்கிடையிலும் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் உள்ளது. அது தொடர்பில் ஐ.நா. சபை அக்கறை செலுத்தி வருவதைக் காண முடிகின்றது. முஸ்லிம்களாகிய எமக்கு நபி (ஸல்) அவர்களின் பின் உருவான இஸ்லாமிய அரசாட்சி யுகத்தை இலக்கியங்கள் கிலாபா அல் ராஷிதா என்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

இங்கு கிலாபத் என்பது ஆட்சி என்ற அர்த்தத்தை வழங்குகிறது. ராஷிதா என்பது சிறந்த என்ற பொருளைக் கொடுக்கின்றது. கிலாபா ராஷிதா அதாவது குலபாஉர் ராஷிதூன்கள் எனப்படும் கலீபாக்களாக அபூ பக்கர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி), அலி (ரழி) ஆகியோரே இஸ்லாமிய கிலாபத்தை ஆட்சிசெய்தனர்.

குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சிக் காலப்பகுதியில் காணப்பட்ட மிக முக்கிய விடயங்கள் நான்கினை இஸ்லாமிய இலக்கியங்கள் மேற்கோள் காட்டியுள்ளன. ஒன்று ஷூரா - கலந்துரையாடல், இரண்டாவது ஜமாஆ - கூட்டிணைப்பு, மூன்றாவது தாஆ - ஒழுக்கம், கட்டுப்பாடு, நான்காவது இமாராஹ். எனவே நல்லாட்சி தொடர்பில் இஸ்லாமிய இலக்கியத்தில் குலபாஉர் ராஷிதூன் காலப்பகுதியில் பின்பற்றிய அணுகுமுறைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.


எனவே நல்லாட்சி தொடர்பில் வரலாற்றிலிருந்தே பல இலக்கியங்கள் பேசியிருப்பதை குறிப்பிட முடியும். ஒவ்வொரு காலப்பகுதியிலும் நல்லாட்சி விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காக அந்தந்த காலத்து மன்னர்களால் செப்பேடுகளிலும், நல்லாட்சி நிலவிய காலப்பகுதியில் வாழ்ந்த இலக்கியவாதிகளாலும் இந்த விடயங்கள் பதிவுசெய்யப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

# அரசியல் நெருக்கடியில் சர்வதேசத்தின் வகிபங்கு

• அமீன் இஸ்ஸதீன்

கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) இலங்கையின் ஜனநாயக ஒழுங்கிற்கு சாவுமணி அடிக்கப்பட்டது. இதனால் எதிர்வரும் காலப்பகுதியில் ஜனநாயகம் இன்னுமின்னும் பின்னடைவைச் சந்திக்கும் என்பதில் ஐயமில்லை.

2015 இற்கு முன்பு அதிகாரத்தில் இருந்த குழுவினர் மீண்டும் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இலங்கையில் இடம்பெற்று வருகின்ற விடயங்கள் தொடர்பில் சர்வதேச நாடுகள் மிகுந்த அவதானத்தோடு உள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய வகையிலும் பண்பாடற்ற வகையிலும் கடந்த 26 ஆம் திகதி இரவு அதிகாரத்தில் இருந்த ரணில் விக்ரமசிங்கவை பதவி நீக்கியதனைத் தொடர்ந்து அரசியலமைப்பு நெருக்கடி வெடிக்க ஆரம்பித்தது. இவ்விவகாரத்தோடு பின்னிப்பிணைந்த வகையில் சர்வதேச நாடுகளின் தலையீடும் உட்பொதிந்துள்ளன.



இலங்கையில் இடம்பெற்ற அரசியல் நெருக்கடி தொடர்பில் சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் கருத்துத் தெரிவித்திருந்த போதிலும் கடந்த 26 ஆம் திகதியன்று ஜனாதிபதி சிறிசேன முன்னிலையில் மஹிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்துகொண்டதைத் தொடர்ந்து அவரைச் சந்திப்பதற்கு தமது தூதுவர்களுக்கு சீனா மாத்திரமே அனுமதி வழங்கியிருந்தது. இதனால் சகலரதும் அவதானம் சீனாவை நோக்கியே குவிய ஆரம்பித்தது. செவ்வாய்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் ஆர்ப்பாட்டத்தில் அரசியலமைப்புச் சபை உறுப்பினர் ஒருவரினால் (எம்.பி ஒருவரினால்) மஹிந்த அணிக்கு பின் கதவால் ஆட்சிக்கு வர சீனா கூடுதல் பணத்தை வாரி இறைத்திருப்பதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இற்றைக்கு ஒருசில மாதங்களுக்கு முன்பு 2015 ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு சீனா அதிக நிதியுதவியை வழங்கியிருப்பதாக நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது. ஹம்பாந்தோட்டையை ஆள்பவர் இந்து சமுத்திரம் முதல் அந்தாட்டிக்கா வரையில் ஆளும் திறன் பெற்றுள்ளார் என்கின்ற கருத்து வாய்க்கூற்றொன்றல்ல என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் விரைவில் உலக வல்லரசாக மாறுவதற்கு முயன்று வரும் சீனா தனது கிரீடத்தில் மின்னும் முத்தாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வைத்து முதலீடு செய்ய முனைப்புக்காட்டி வந்தது.

சீனாவில் மிலிடரி (இராணுவ) ஆதிக்கம் ஆதிகரித்திருப்பது தொடர்பில் அமெரிக்கா அச்சப்பட்டிருக்கும் சமயத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் இராணுவப் பலத்தை அதிகரித்துக் கொள்ளும் செயற்பாடுகளும் இடம்பெற்றுக் கொண்டுள்ளது. மறுபுறத்தில் சீனாவுக்கு தெற்கில் உள்ள கடற்பரப்பின் பாதுகாப்பு குறித்து சீனா மிகக் கவனமாக உள்ளது. சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் வர்த்தக ஆதிக்கத்திற்கான பனிப்போரும் உக்கிரமடைந்து வருகிறது. ஜப்பானும் அவுஸ்ரேலியாவும் கூட அவ்வர்த்தக ஆதிக்கம் குறித்து ஆர்வத்துடன் இருந்து வருகின்றன. இவ்வாறு ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு பல்வேறு முக்கியத்துவம் காணப்பட்டு வருகின்றது.

2015 இல் ஆட்சி மாறிய போது சீனா ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒரு பகுதியையும், மத்தளை விமான நிலையத்தையும் நிர்மாணித்திருந்தது. இவ்விரண்டு திட்டங்களும் பொருளாதார ரீதியில் வெற்றியளிக்கவில்லை. அவற்றிலிருந்து எவ்வித ஆதாயமும் கிடைக்கவில்லை. இதனால் நாட்டின் கடன் சுமை இன்னும் அதிகரிக்கலானது. இவற்றுக்கிடையில் சீன நிறுவனங்கள் ஆட்சி அதிகாரத்திற்குள் மெல்ல நுழைய ஆரம்பித்தன. வீதிகள் மற்றும் கட்டிட நிர்மாணத் துறைக்கூடாகவும், கொழும்பு துறைமுக நகரத்திற்கு 1.4 பில்லியன் ரூபா நிதியை வழங்கியதற்கூடாகவும் சீனாவின் ஆதிக்கம் வலுப்பெற்றது. தேசியவாதிகள் மற்றும் தேசப்பற்றாளர்களின் எதிர்ப்புக்களை கவனத்திற் கொள்ளாமல் சீனக் கட்டிட நிர்மாணக்காரர்களுக்கு இலங்கையை சுதந்திரமாக அனுபவிக்கும் வகையில் 20 ஹெக்டயார் நிலப்பகுதி அப்போது வழங்கப்பட்டிருந்தது.

சீனா துறைமுக நகரத்தை கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் நிர்மாணித்தமையினால் துறைமுக நகரம் தொடர்பில் இந்தியாவின் பாதுகாப்புப் பார்வை மிகக் கடுமையான முறையில் செலுத்தப்பட்டு வந்தது. இந்திய வர்த்தகக் கப்பல்களில் 70 வீதமானவை கொழும்பு துறைமுகத்திற்கூடாகப் பயணிப்பதே இதற்கான காரணமாகும். சீனாவின் யுத்த சப்மெரீன்கள் திருட்டுத் தனமான முறையில் கொழும்பு துறைமுகத்திற்கு அருகாமையில் வருவது, இந்தியாவினதும், அமெரிக்காவினதும் ஜப்பானினதும் பாதுகாப்பு தொடர்பான அவதானம் அதிகரிக்க காரணமாக அமைந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஜப்பான் நாட்டின் பிரதமர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட போது மேற்குறிப்பிட்ட வகையில் சீனாவின் சப்மெரீன் போர்க் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை நெருங்கியது. இலங்கை யின் அயல்நாடான இந்தியா அதிருப்தியை தெரி வித்து வந்த போதும் ராஜபக்ஷ ஆட்சிபீடம் தமது சகல விதைகளையும் சீனாவின் கூடையில் இட்டு வந்தது. இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப் பதற்கு இந்தியா உதவிக்கொண்டிருந்த வேளையி லேயே இந்நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

சீனாவின் பக்கம் இலங்கை கொண்டிருந்த மோகம் மற்றும் சீனாவின் மீதான பாசம் இந்தியாவுக்கு பகைமை காட்டுவது போல் தென்பட்டது. இதனால் ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவுக்கு பேரிடியாகக் காணப்பட்டது. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு நெருக்கடியில் இந்தியாவின் தலையீடு மற்றும் இந்தியாவின் நிலைப்பாடு இதற்கு தாக்கம் செலுத்துவதாக அமைகிறது. 2015 இன் பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிசேன - விக்ரமசிங்க அரசாங்கம் துறைமுக நகரம் தொடர்பான ஒப்பந்தம் குறித்து மீளவும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி, ஒரு சில சரியான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அதில் சீனாவுக்கு சுதந்திரமாக அனுபவிக்கும் உரிமை ரத்துச் செய்யப்பட்ட போதிலும் அரசாங்கம் தொடர்ந்தும் கடன் நெருக்கடியில சிக்கித் தவித்து வந்ததால் அதற்கு மாற்றீடாக சீனாவுடன் மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் 85 வீதமான பகுதி சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அப்படியிருந்தும் இந்து சமுத்திரப் பகுதி மிகப்பெருமளவில் அதிகாரப் போராட்டம் வலுக்கும் இடமாக மாறிய போது இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடனான உறவுகளை சமநிலையுடன் பேணும் வெளியுறவுக் கொள்கையை ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வந்தார். இவ்விடயத்தில் இந்தியா, அமெரிக்கா மற்றும் அதனோடு இணைந்த மிலிடரி கூட்டுக்களுடன் ஒப்பந்தங்களை செய்து இந்து சமுத்திர வலயத்தை இந்து பசுபிக் பிராந்தியமாக பெயர் மாற்றம் செய்தார் ரணில்.

இதற்கிடையில் சீனாவிடமிருந்து மேலெழுப்பப்பட்டு வந்த மிலிடரி ஆதிக்கத்துக்கு எதிராக இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து குறிப்பாக தென் சீனக் கடற் பரப்பிலும் இந்து சமுத்திர வலயத்திலும் மிகப்பெரும் சர்வதேச உறவுகளை ஏற்படுத்தி சதுக்க அமைப்பிலான பாதுகாப்பு திட்டமொன்றை அமைத்துக் கொண்டன. இச்சம்பவத்தின் பின்னணியிலேயே சர்வதேச உறவின் கூட்டிணைப்புடன் இலங்கைக்கு அரசியல் நெருக்கடிக்குள் மூழ்க நேரிட்டது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கண்டேனர் எல்லையின் நிர்மாணப் பணிகளை இந்தியாவுக்கு ஒப்படைக்கும் ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானத்திற்கு தடங்கல் விளைவிக்கும் வகையிலேயே சீனா இலங்கையின் அரசியலமைப்பு விரோதச் சூழ்ச்சிக்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இப்படி ஒருவர் நினைக்கிறார் என்றால் அது அறிவற்ற சிந்தனையொன்று என்பதாகக் கூற முடியாது.

விக்ரமசிங்க அரசாங்கம் சீன நிறுவனங்களை புறந்தள்ளி விட்டு வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்கும் மிகப்பெரும் திட்டத்தை இந்தியாவிடம் ஒப்படைத்தமை தொடர்பில் சீனா மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை. தற்பொழுது இந்தியாவிடம் வழங்கப்பட்டுள்ள வடக்கின் வீடமைப்பு திட்டம், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கண்டேனர் எல்லைத் திட்டம் மற்றும் திருகோணமலை எண்ணெய்க் கிணறுத் திட்டம் போன்றவை ராஜபக்ஷ பாதுகாக்கப்பட்டு அவர் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால் மேற்படி திட்டங்கள் அனைத்தும் சீனாவிடம் ஒப்படைக்கப்படும் போது பிரச்சினை மேலேழுகிறது.

எதிர்வரும் சில தினங்களில் பாராளுமன்றப் பெரும்பான்மை போட்டியில் ராஜபக்ஷ வெற்றியீட்டினால் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் போன்றவற்றை இலக்கு வைத்து கடன் தொகையில் ஒரு பகுதியை குறைத்து அல்லது கடன் நிவாரணங்களைக் கொடுத்து சீனா தொடர்ந்தும் இலங்கையுடன் அதிகதிகம் ஒப்பந்தங்களை செய்துகொள்ளும். இதன் மூலம் சிறிசேன- ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் வாழ்க்கைச் செலவுச் சுமையை தளர்த்தி விடுவதற்கான இயலுமை ஏற்படுகிறது. இதன் மூலம் ராஜபக்ஷாக்களுக்கு தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டுகிறது.

அரசியலில் எந்தவொன்றையும் இலவசமாக அனுபவிப்பதற்கு வழங்கப்படுவதில்லை என்பதால் சீனாவின் அன்பளிப்புக்கள் எதிர்வரும் காலப்பகுதியில் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனையாகவே வரும். அதில் சீனாவின் போர்க் கப்பல்களை நிறுத்துவதற்கு ஹம்பாந்தோட்டை துறைமுகம் உரிமை வேண்டப்படும். இல்லாவிட்டால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அருகிலேனும் சிறு தீவொன்றை சீனா குத்தகைக்கு வாங்கிக் கொள்ளும். இவை விக்ரமசிங்க அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளாகும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் என்பது சீனாவிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் வலயத்தின் (Belt and Road Initiative) அதிகார மையம் மற்றும் அதற்கொப்பான கேந்திரநிலையமாகும். அத்தோடு ஹம்பாந்தோட்டை என்பது நிலையான ஐக்கியத்தின் மூலம் ஒவ்வொரு இனத்திற்குமான அடையாளத்துடன் ஒன்றுபட்டு வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பயன்தரக் கூடிய மிக முக்கிய இடமாகவும் காணப்படுகின்றது.

சீனாவின் யுவான் ஆதிக்கத்தினால் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளை கடன் பொறியில் சிக்கவைத்து சீனாவின் பெறுகைகளுக்கு தூண்டிக் கொண்டிருப்பதனாலேயே BRI வலயத்திலுள்ள துறைமுகங்கள் சீனாவின் மிலிடரி வசதிகளை வழங்கும் மர்மஸ்தானங்களாக மாறி வருகின்றன. இப்பாரிய அதிகாரப் போராட்டத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கும் வரையறுக்கப்பட்ட பகுதிகளையே ஆள்வதற்கு முடிகிறது. இந்நாடுகளுக்கு மாலைதீவு கிடைக்காமல் போயிருந்து சீனா சார்பாளரான அப்துல்லாஹ் யமீனின் தோல்வியைத் தொடர்ந்து அண்மையில் அந்நாட்டை இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடிந்திருக்கிறது.

இந்தியாவும் மேற்கு நாடுகளும் ஐ.நா. மனித உரமைகள் அமைப்புடன் இணைந்து இலங்கைக்கு ஓரளவு அழுத்தத்தை வழங்கிய போதும் சிறிசேன - ராஜபக்ஷ அரசுக்கு பின்புலத்தில் சீனா வழங்கும் ஒத்துழைப்புடன் அந்நெருக்கடியிலிருந்து மீள முடிகின்றது. நாட்டின் மனித உரிமைகளில் குறைபாடு அல்லது ஜனநாயக அடையாளங்கள் குறைந்துள்ளது எனக்குறிப்பிட்டு புளுக பிளஸ் நிவாரணம் இடைநிறுத்தப்படுவதாக குறிப்பிட்டாலும் ராஜபக்ஷாக்கள் இதற்கு முன்பும் இது போன்ற நிலைமைக்கு முகம்கொடுத்த அனுபவத்தை பெற்றிருக்கிறது.

எனினும் ராஜபக்ஷ ஆளுகையின் கீழ் சீன ஆதரவு அரசாங்கம் இங்கு உருவாகும் போது மேற்குலக நாடுகளும் இந்தியாவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. அவ்வேளையில் இலங்கை எதிர்வரும் உலக யுத்தத்தில் பிரதான அமைவிடமாக மாறும். இலங்கை அரசியல் நெருக்கடியின் மூலம் ஜனநயாகமற்ற அமைப்புக்களுடன் சேரும் போது, நாடு சீனாவின் சாயலை கொண்டு ஒரு கட்சியினால் ஆளப்படும் தேசமாக மாறிவிடுவதே மிகவும் ஆபத்தான விடயமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை விழிப்புணர்வூட்டக் கூடிய சிவில் சமூக அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்

அஷ்ஷெய்க் ரிசாட் நஜிமுதீன் அவர்கள் கண்டி மாவட்டத்திலுள்ள அக்குரணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை அக்குரணை/குருந்துகஹஎல முஸ்லிம் வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலைக் கல்வியை பேராதனை/ரணபிம ரோயல் கல்லூரியிலும் உயர்நிலைக் கல்வியை பேருவலை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்திலும் கற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் (B.A.) மலேசியாவின் Universiti Teknologi Petronas பல்கலைக்கழகத்தில் தத்துவ இளமாணி (M.Phil) பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளார். கடந்த 7 ஆண்டுகளாக விரிவுரையாளராக கடமையாற்றி வரும் இவர், ஆரம்பத்தில் அல்குர்ஆன் திறந்த கல்லூரியில் பணியாற்றி தற்போது ஜாமியா நளீமிய்யா பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். மகாஸிதுஷ் ஷரீஆ மற்றும் அரசியல் தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ள விரிவுரையாளர் ரிசாட் நஜிமுதீன் அவர்கள் தனது ஆய்வு மற்றும் சமகால அரசியல் நிலவரம் குறித்து மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**



**அஷ்ஷெய்க் ரிசாட் நஜிமுதீன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் - ஜாமியா நளீமியா கலாபீடம்

- **உங்களது நூல்கள், ஆக்கங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்..**

இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறேன். இவற்றுள் மொழிபெயர்ப்பு நூல்களும் உள்ளடங்கும். ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நான் 5 ஆம் வருடத்தில் கற்றுக்கொண்டிருக்கும் போது அஷ்ஷெய்க் அஷ்கர் அரூஸுடன் இணைந்து யூசுப் அல் கர்ளாவி எழுதிய 'அல் ஹஸாஇசுல் ஆம்மா லில் இஸ்லாம்' என்ற நூலின் 'அல் வசதிய்யா' என்ற பகுதியை மொழிபெயர்த்து 'இஸ்லாத்தில் நடுநிலைமை' எனும் பெயரில் நூலுருப்படுத்தினேன். கலாநிதி ஜாஸிர் அவ்தா எழுதிய 'அல்-மர்ஆ வல் மஸ்ஜித்' எனும் நூலை 'பெண்களும் மஸ்ஜிதும்' என்ற பெயரில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டேன். யூசுப் அல் கர்ளாவி எழுதிய நூலொன்றை 'இறைத்தூதரும் கல்வியும்' எனும் பெயரில் உஸ்தாத் மன்ஸூர் மற்றும் கலாநிதி மஸாஹிருடன் இணைந்து மொழிபெயர்த்து வெளியிட்டேன். இவை தவிர, அல்குர்ஆனின் இலக்குகள், அஸ்காருஸ் ஸலாத், நவீன இஸ்லாமிய சிந்தனையாளர் யூஸுப் அல்கர்ளாவி போன்ற நூல்களையும் எழுதியுள்ளேன்.

'அல்குர்ஆனை புரிந்துகொள்ளல் சில நுழைவாயில்கள்' என்ற நூலை இறுதியாக வெளியிட்டேன். அத்துடன் உஸ்தாத் மன்ஸூருடன் இணைந்து ஜுஸ்உ அம்ம தப்ஸீருக்கான பாடத்திட்டமொன்றை (Syllabus) எழுதியிருக்கிறேன். இவை தவிர மீள்பார்வை, அல்ஹஸனாத், இஸ்லாமிய சிந்தனை போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளுக்கும் பல்வேறு கட்டுரைகளையும் எழுதியுள்ளேன்.

இன்னும் பல நூல்களுக்கும் கட்டுரைகளுக்குமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக அல்குர்ஆனின் கடைசி 3 ஜுஸ்உக்களுக்குமான விளக்கத்தை சூறாக்களின் மையக் கருத்தை முதன்மைப்படுத்தி விளங்கிக் கொள்ளும் முறைமையை பின்பற்றி எழுதி வருகிறேன். இன்ஷா அல்லாஹ் இவ்வருட ரமழானில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. முஹ்தார் ஷன்கீதி எழுதிய ஸஹாபாக்கள் மத்தியில் நிலவிய அரசியல் கருத்து வேறுபாடுகள் எனும் புத்தகத்தையும் தமிழில் எழுதி வருகிறேன்.

- **முஸ்லிம்களின் அரசியல் குறித்த சில ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்கள். அதில் மகாஸிதுஷ் ஷரீஆ மற்றும் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பங்கேற்பு குறித்த ஆய்வொன்றை தத்துவ இளமானிப் பட்டத்திற்கு (M.Phil) சமர்ப்பித்துள்ளதாக அறிகிறோம். அவ்வாய்வு பற்றி சற்றுக் குறிப்பிட முடியுமா?**

எனது ஆய்வு முழுமையாக முஸ்லிம் அரசியல் சார்ந்ததாகவே உள்ளது. எனது தத்துவ இளமானிப் பட்டத்துக்காக 'Application of Maqasid Approach into Political Participation Systems of Sri Lankan Muslims' குறித்து ஒரு ஆய்வினை செய்திருந்தேன். முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இலங்கை போன்ற நாட்டிற்கு இவ்வாய்வு மிக முக்கியமானது.

இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று, மகாஸிதுஷ் ஷரீஆ. இரண்டாவது இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பங்கேற்பு. மகாஸிதுஷ் ஷரீஆவின் அரசியல் சொற்பதமே மகாஸித் அணுகுமுறையாகும். சுருக்கமாகச் சொல்வதானால் ஆரம்ப காலத்தில் மகாஸிதுஷ் ஷரீஆ ஒரு கோட்பாடாகக் கருதப்பட்டது. அதன் பிறகு நவீன கால இமாம்கள் அதற்கு நடைமுறை வடிவத்தைக் கொடுத்தார்கள்.

உதாரணமாக தூனீசியாவைச் சேர்ந்த ராஷித் அல் கன்னூஷி, துருக்கியைச் சேர்ந்த அர்தூகான், மலேஷியாவின் அன்வர் இப்றாஹீம் போன்றவர்கள் இதற்குப் புது வடிவம் கொடுத்தார்கள். இவர்களது அண்மைக்கால அரசியல் செயற்பாடுகள் மகாஸிதுஷ் ஷரீஆவுக்கு நடைமுறைப் பிரயோகத்தை கொடுப்பதாகக் காணப்பட்டது.

இதனை இன்னொரு முறையில் சொல்வதானால் ஒரு காலத்தில் இஸ்லாமிய உலகில் ஹாகிமிய்யத் சிந்தனை வலுப்பெற்றது. உதாரணமாக மௌதூதி (ரஹ்) போன்றவர்களின் காலத்தைக் குறிப்பிடலாம். பின் ஹாகிமிய்யத் சிந்தனைக்கு முரணானதாக மகாஸித் ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்தியதாக அரசியல் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற கருத்து உதயமானது.

உதாரணமாக மலேஷியாவில் PAS போன்ற கட்சிகள் ஹாகிமிய்யத் சிந்தனையை மையப்படுத்தி செயற்படுகிறது. மலேஷியாவில் அன்வர் இப்றாஹீம், தூனீசியாவின் கன்னூஷி, துருக்கியின் அர்தூகான் போன்றவர்களது அரசியல் அணுகுமுறைகளை ஆய்வாளர்கள் மகாஸிதிய அணுகுமுறை என்று குறிப்பிடுகிறார்கள்.

> **"சர்ச்சைக்குரிய விடயங்களுக்குத் தீர்வு தருவதில் இரு முஸ்லிம் கட்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன"**

இந்தப் பின்னணியில் மகாஸிதிய அணுகுமுறைக்கு இலங்கையில் ஒரு நடைமுறை வடிவத்தைக் கொடுப்பதற்காக வேண்டி இலங்கையின் அரசியல் கட்சிகளை ஆராய்ந்தேன். இதனை இரண்டு வழிகளில் நோக்கினேன். ஒன்று, தேசிய கட்சிகளில் முஸ்லிம்களது ஈடுபாடு. உதாரணமாக ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளில் உள்ளவர்கள். இதேபோன்று அஷ்ரப் உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் போன்ற இனமைய அரசியல் போக்கு.

இந்த இரண்டு வகையான போக்குகளிலும் ஐந்து விடயங்களை அடையாளப்படுத்தினேன். ஒன்று சுதந்திரமும் சுய ஆட்சியும் (Freedom and Autonomy) குறிப்பாக தாஹிர் இப்னு ஆஷூர் போன்றவர்கள் கூடுதலாக இதைப் பேசியுள்ளனர். இதை இலங்கையில் உபயோகப்படுத்துவது எப்படியெனில், வடகிழக்கு இணைப்பு தொடர்பில் மிகப்பெரும் கருத்தாடல் கடந்த காலங்களில் ஏற்பட்டு வந்தது. வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்து பலமாக முன்வைக்கப்பட்டது. வடகிழக்கு இணைக்கப்பட்டால் பெரும்பாலான கிழக்கு முஸ்லிம்களின் சுதந்திரம் அங்கு துறக்கப்படும். நாட்டின் மத்திய அரசாங்கத்திற்கு கீழ் அல்லாமல் அது இன்னொரு தரப்புக்கு கீழ் வருகின்றதொரு நிலை வடகிழக்கு இணைப்பில் காணப்படுகிறது. எனவே முஸ்லிம்கள் அந்த இடத்தில் சுதந்திரத்தையும் சுய ஆட்சியையும் இழக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் தேசியக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், இனரீதியான கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அவர்களுடைய பங்களிப்பு என்ன என்பதை ஆராய்ந்துள்ளேன்.

இரண்டாவது, ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதிக்குப் புறம்பான அநீதியான வன்முறைகள், தாக்குதல்களின் போது முஸ்லிம் அரசியல்வாதிகள் எந்தளவு தூரம் அவற்றுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதில் பங்களித்துள்ளனர் என்பது ஆராயப்பட்டுள்ளது. நீதி எனும் மகாஸித் கருத்தாக்கத்தின் பின்னணியிலேயே இப்பிரச்சினை எடுக்கப்பட்டது. மூன்றாவது வாழ்வுக்கான உரிமையும் வாழ்க்கையை மீளக் கட்டியமைத்தலும் (Right to life and Rehabilitation). குறிப்பாக வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு புத்தளத்தில் தங்கினார்கள்.

முஸ்லிம்களது மீள்குடியேற்றம் என்ற விடயத்தில் அரசியல்வாதிகளின் பங்களிப்பு எந்தளவு தூரம் இருந்தது என்பது ஆராயப்பட்டுள்ளது. நான்காவது கல்வி. ஐந்தாவது பொருளாதாரம் (Education and Economy). இவை மகாஸிதின் பின்னணியில் எடுக்கப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்ட தலைப்புக்களாகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்களுக்கும் மேலாகின்றன. இந்த 3 தசாப்த காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அதாவது தேசிய கட்சிகளில் உள்ளோரும் முஸ்லிம் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துவோரும் இருக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எந்தளவு தூரம் பாடுபட்டுள்ளார்கள். அவர்களது பங்களிப்பு எத்தகையது? என்பதே எனது ஆய்வின் சுருக்கமாகும்.

- **மேற்படி ஐந்து அம்சங்கள் தொடர்பாகவும் உங்களது ஆய்வுக்கூடாக அவதானிக்கப்பட்ட விடயங்களை சற்றுத் தெளிவுபடுத்த முடியுமா?**

இப்படிப் பார்க்கும் நான் அவதானித்த விடயம் என்னவெனில், கல்வியும் பொருளாதாரமும் என்கின்ற பகுதியில் முஸ்லிம் அரசியல்வாதிகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி (Infrastructural Developments) வேலைகளை ஓரளவு செய்துள்ளார்கள். உதாரணமாக கல்வித் துறையுடன் தொடர்பான நூலகங்கள், பொருளாதாரத் துறையுடன் சம்பந்தப்பட்ட வர்த்தக கட்டிடத் தொகுதிகளை கட்டிக் கொடுத்துள்ளதை குறிப்பிட முடியும். ஆனால் சர்ச்சைக்குரிய விடயங்கள் என்று வருகின்ற போது அவற்றுக்கு அவர்களால் அழகான தீர்வுகள் முன்வைக்கப்படுவதில்லை. அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதில் இரு கட்சி சார்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் தோல்வி கண்டுள்ளனர்.

அதேநேரம் சுதந்திரமும் சுய ஆட்சியும், வன்முறைகள், தாக்குதல்களின் போதான அரசியல்வாதிகளின் பங்களிப்பு, வாழ்வுக்கான உரிமையும் வாழ்க்கையை மீளக்கட்டியமைத்தலும் என்கின்ற மூன்று அம்சங்கள் தொடர்பாக ஆராய்கின்ற போது தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளை சார்ந்த அரசி யல்வாதிகளால் எந்த வித தீர்க்கமான பங்களிப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட கிழக்கு இணைப்பு தொடர்பாக ஒரு சில இடங்களில் பேசியுள்ளது. முஸ்லிம்களது மீள்குடியேற்ற விடயத்திலும் சில நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது. ஆனால் இவற்றுக்குத் தீர்க்கமான, நிலைபேறான தீர்வொன்றை அவர்களால் முன் வைக்க முடியாமல் போயுள்ளது. உதாரணமாக வடகிழக்கு இணைப்பு சம்பந்தமாக ஒவ்வொரு இடத்திலும் கருத்துக்களை தெரிவித்து வந்தார்களே ஒழிய, தீர்க்கமான முடிவுகளை முன் வைக்கவில்லை. இப்படிப் பார்க்கும்போது புவியியல் ரீதியில் முஸ்லிம்களது சிதறிய வாழ்வமைப்பு இதில் தாக்கம் செலுத்துகிறது. முஸ்லிம் தனிக்கட்சிகள் கிட்டத்தட்ட முஸ்லிம்கள் செறிவாக வாழும் கிழக்குப் பகுதிகளில் அவர்களது பிரச்சினைகளை ஓரளவு பேசியிருக்கின்றன.

எனவே கிழக்குப் பகுதி முஸ்லிம்கள் தங்களுடைய உரிமைகளையும் அபிவிருத்திகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் முஸ்லிம் இன மைய அரசியல் ஒன்றில் தங்கியிருப்பது இன்று தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தமாகவே உள்ளது. ஆனால் மக்கள் அழுத்தக் குழுக்களாக செயற்பட்டு அதனை அழுத்தம் கொடுத்து நெறிப்படுத்தும் வேலைகளில் ஈடுபட வேண்டும் என்கின்ற முடிவுக்கு வரமுடியும். இதன் மூலம் தங்களது உரிமைகளையும் அபிவிருத்தியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ் சிங்கள மக்களுடன் சிதறி வாழ்கின்ற முஸ்லிம்கள் இன மைய அரசியலில் ஈடுபடுவதனாலும் தேசிய கட்சிகளில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் பிரதிநிதிகளுக்கு வால்பிடித்ததனாலும் எந்தவித பிரயோசனத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. எனவே இவர்கள் இனமைய அரசியலிலிருந்து விழுமிய அரசியலை [illegible] வேண்டும். இதன் கருத்து, அவர்கள் தங்களது (பக்.15)



# எழுவாய், பயமில்லை

அபூ ஷாமில்

## ஓர் அனாதையின் பிறந்த தினம்

உலக மாந்தர்களின் தலைவராக உலகில் உதித்த அண்ணல் நபிகள் பிறக்கும் பொழுதே அனாதையாகவே பிறந்தார்கள். இவரிடமிருந்து தான் உலகுக்கான வழிகாட்டலை இறைவன் அருளினான். அண்ணலாரின் தூதினை உலகுக்கு எத்தி வைப்பதன் பொறுப்பினை அவரைப் பின்பற்றுபவர்களிடம் அவர்கள் வழங்கி விட்டுச் சென்றார்கள்.

அண்ணலாரின் தூதினை அறிமுகப்படுத்துவதில் அண்ணலாரை உலகுக்கு அறிமுகப்படுத்துவதும் அறிவூட்டுவதும் முக்கியமானது. இதற்கு வழியமைந்து விடக் கூடாது என்பதில் ஆர்வம் கொண்ட சக்திகள் அண்ணலாரின் பிறந்த தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பில் முஸ்லிம் சமூகத்தினிடையே பிரச்சினைகளைக் கிளப்பி விட்டிருக்கின்றன. இதனால் குறித்த தினத்தில் நபிகளாரைப் பற்றிப் பேசுவதா இல்லையா என்று சமூகம் குழம்பிப் போயிருக்கிறது.

இதே சமூகம் ஆஷூரா தினத்தை அக்கறையுடன் அனுஷ்டிக்கிறது. யூதர்கள் மூஸா (அலை) அவர்களை இந்தத் தினத்தில் நினைவூட்டியமைதான் இந்த ஆஷூரா தினத்தின் அடிப்படையே. இதனை அனுஷ்டிப்பதற்கான வழிகாட்டலையும் நபிகளாரே வழங்கினார்கள். இப்படித்தான் ஈஸா (அலை) பிறந்ததாக ஒரு தினத்தைக் குறிப்பிட்டு கிறிஸ்தவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். இவர்களுக்கிடையில் நபிகளாரைப் பற்றி முஸ்லிம் சமூகம் நினைவூட்டக் கூடாது என்றதொரு கடப்பாடு முஸ்லிம்களுக்கு மட்டும் ஏன் இருக்க வேண்டும்?

ஆனால் இலங்கையில் நடப்பதென்ன? அரசாங்கம் நபிகள் பிறந்ததாகச் சொல்லப்படுகின்ற தினத்தை நாட்டின் அனைத்து மத மக்களுக்குமான விடுமுறையாக்கித் தந்திருக்கிறது. அரசாங்கத் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளை வெளியிடுகிறார்கள். அரசாங்கமே முன்னின்று நபிகளார் தொடர்பில் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்குகிறது. அரசாங்கமே முன்னின்று தேசிய விழாவாக மீலாத் விழாவைக் கொண்டாடுகிறது.

முஸ்லிம் சமூகத்தின் நிலை என்ன? 2018 நவம்பர் 20 ஆம் திகதி ஏன் விடுமுறை விட்டார்கள் என்பதே தெரியாமல் பலர் முஸ்லிம் சமூகத்துக்குள்ளேயே இருக்கின்றார்கள். சர்ச்சைக்குரிய ஒருவராக நபிகளாரின் செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளேயே அறிமுகமாகியுள்ள நிலையில், முஸ்லிம் சமூகத்துக்கு நபிகளாரை மீள அறிமுகம் செய்வதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாக ஆக்கியிருக்கலாம். நாட்டிலுள்ள 900 முஸ்லிம் பாடசாலைகளும் இந்த விடுமுறை நாளில் ஒரு மணிநேரமாவது எடுத்து நபிகளார் பற்றி மாணவர்கள் மனதில் பதியக் கூடிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கலாம். இதற்கும் அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை.

நாட்டிலுள்ள 2000 க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் மாற்று மதத்தவரையும் அழைத்து நபிகளாரைப் பற்றிப் பேசியிருக்கலாம், பேச வைத்திருக்கலாம். 200 க்கும் மேற்பட்ட மத்ரஸாக்களும் அவற்றின் மாணவர்களும் நபிகளாரின் தூதை நாட்டுக்கு எத்தி வைக்கும் பணியைச் செய்திருக்கலாம். இத்தனை நிகழ்வுகளும் நடந்தாலே நாடு நபிகளின் பிறந்த தினத்தால் கோலாகலமாகியிருக்கும்.

இவற்றுக்கும் மேலாக நபிகளாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா என்ன செய்தது ? அவர்களும் நபிகளாரின் பிறந்த நாளில் அவரை நினைவூட்டக் கூடாது என்ற நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டிருக்கிறார்களா ? சகவாழ்வு பற்றிய செயற்திட்டத்தை நாட்டில் முன்னெடுக்கும் தேசிய ஷூறா சபை, மீலாத் தினத்தை இதற்கென எந்த வகையில் பயன்படுத்திக் கொண்டது?

உண்மையில் அரசாங்கம் வழங்கியுள்ள மீலாத் தினத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது தொடர்பில் யாரிடம் என்ன திட்டம் இருக்கிறது? அண்ணலாரின் பிறந்த தினத்துக்கான விடுமுறையில் மீலாத் தினம் ஏன் இப்படி அனாதையாக விடப்படுகிறது? ப்ரிட்ஜ் வலையமைப்பு முஸ்லிமல்லாத பிரமுகர்கள் சிலருக்கு வாழ்த்து அட்டை அனுப்பி இருக்கிறது. CIS நபிகளாரைப் பற்றி சிங்கள மொழியில் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. முள்ளிப்பொத்தானையில் சிறுவர்களுக்கான விளையாட்டு விழா ஒன்று நடத்தப்பட்டு பொலிசார் பிரமுகர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி ஆங்காங்கே சில நிகழ்ச்சிகள் ஆர்வமுள்ள பலராலும் நடத்தப்பட்டிருப்பது ஆறுதலளிக்கின்றது. என்றாலும் இவற்றையெல்லாம் ஒரு ஒழுங்கில் செயற்படுத்துவது யார்? நாட்டில் நபிகளாரைப் பற்றி எதை எப்படி முன்வைப்பது என்ற வழிகாட்டலை வழங்குவது யார் ? இப்படி எதுவுமே இல்லாமல் அநாதரவாக மீலாத் தினம் விடப்படுவதென்றால் இதைவிடப் பெரிய அவலம் இலங்கையின் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் வேறு என்ன இருக்க முடியும்?

இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதிலும் எத்திவைப்பதிலும் நிலவுகின்ற அடிப்படைவாதச் சிந்தனைகளை மீறி நாட்டுச் சூழலில் நபிகளாரின் தூதை முன்வைப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவது தான் காலத்தின் கட்டாயமாகும். இதற்கான வழிவகைகளைக் கண்டறிவது தற்போது முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டியதாகும்.

ஆனாலும் இதனை யார் முன்னெடுப்பது ? இது தான் சமூகத்தின் முன்னுள்ள பிரச்சினையாகும். தத்தமது தேவைகளுக்கு மேல் ரஸூலுல்லாஹ்வை சொந்தம் கொண்டாடும் யாரையும் சமூகப் பரப்பில் காண முடியாமல் இருக்கிறது. ஆகவே பொதுவெளியில் இந்தப் பணியை யார் முன்னெடுப்பது என்பது தொடர்ந்தும் பிரச்சினையாகவே இருக்கிறது. இதனை முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து முடிவெடுக்க வேண்டும்.

நபிகளாரின் பணியில் முக்கியமானதே உலகுக்கு தலைமை வழங்கியமையாகும். இந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், நாட்டுக்குத் தலைமை வழங்குவது கூட இல்லாவிட்டாலும் நபிகளாரை நினைவுபடுத்துவதற்காயினும் தலைமை வகுத்துச் செயற்படுத்துவதற்கு இங்கு யாரும் இல்லையென்றால் இந்த நாட்டில் ஒரு மீலாத் விடுமுறை எதற்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யெமனில் போர் நிறுத்த ஒப்பந்தம் சாத்தியம்



யெமனில் போரில் ஈடுபட்டுள்ள ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைத் தாக்குதல்களையும் ஆளில்லா விமானத் தாக்குதல்களையும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதோடு, அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்று தெரிவித்துள்ளனர். சவூதி அரேபியா, ஐக்கிய அறபு அமீரகம் ஆகிய நாடுகளின் கூட்டுப் படைகளுக்கு எதிரான ஹூதிகளின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

யெமனில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஹூதிகளுக்கும் அறபு வான் படைக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல் குறித்து கடந்த மாதம் பாதுகாப்புச் சபையில் கடும் விவாதம் இடம்பெற்றது. தற்போது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அழுத்தத்தினைத் தொடர்ந்து சவூதி தலைமையிலான கூட்டணிக்கும் ஹூதிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

டிசம்பரில் சுவீடனில் நடைபெறவுள்ள இப்பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளும் பங்குகொள்ளும் என ஐ.நா. நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஜேம்ஸ் மெட்டிஸ் விட்டுக் கொடுப்புகள் மூலம் முரண்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார். இதற்கிடையில் பட்டத்துக்குரிய இளவரசர் பின் சல்மானோடு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மூன்று ஆண்டுகள் கடந்தே அமெரிக்கா யெமன் போர் நிறுத்தம் குறித்து தனது கொள் கையை சடுதியாக முன்வைத்திருப்பது ஏன் என்ற கேள்வி இது தொடர்பில் எழுப்பப்படுகின்றது.

## சர்வதேசப் பார்வை

# CIA இன் அறிக்கைக்குப் பின்னர் ஆட்சிக் குடும்பத்திற்குள் பாரிய கருத்து வேறுபாடு



ஜமால் கஷூகியின் படுகொலை குறித்த CIA யின் அறிக்கை வெளிவந்த பின்னர் முஹம்மத் பின் சல்மானை அடுத்த மன்னராக்குவதிலிருந்து தடுத்து நிறுத்த வேண்டும் என குடும்ப அங்கத்தவர்கள் பலர் கோரியுள்ளனர். சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருகின்ற நிலையிலேயே மன்னர் குடும்பத்தில் அதிருப்திகளும் கருத்து வேற்றுமைகளும் எழுந்துள்ளன.

இதற்கிடையில் அமெரிக்க ராஜாங்க உயர் அதிகாரி ஒருவர் பட்டத்துக்குரிய இளவரசராக அஹமத் பின் அப்துல் அஸீஸை நியமிப்பதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் எனத் தெரித்துள்ளார். அஹ்மத் பின் அப்துல் அஸீஸ் கடந்த 40 ஆண்டு காலமாக உள்விவகார அமைச்சராக இருந்து வருகின்றார்.

கஷூகியின் படுகொலை தொடர்பான சர்வதேச அழுத்தங்கள் சவூதி ஆட்சியாளர்கள் மீது அதிகரித்து வரும் நிலையில், பல இளவரசர்கள் ஆட்சி பீடத்தில் மாற்றம் வேண்டும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர். 82 வயதான மன்னர் சல்மானின் மரணத்திற்குப் பின்னர் முஹம்மத் பின் சல்மான் மன்னராக நியமிக்கப்படக் கூடாது என்பதே பெரும்பான்மையான இளவரசர்களின் நிலைப்பாடாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், குடும்பத்திற்குள் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு பட்டத்துக்குரிய இளவரசர் பதவியிலிருந்து முஹம்மத் பின் சல்மானை மன்னர் சல்மான் நீக்குவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. ஆனால், 76 வயதான அஹ்மத் பின் அப்துல் அஸீஸே மன்னர் பதவிக்குத் தகுதியானவர் என்று சவூதியின் அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டு மாதங்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த இளவரசர் அஹ்மத் பின் அப்துல் அஸீஸ், நாடு திரும்பியதன் பின்னர் மன்னர் சல்மான் மற்றும் பட்டத்துக்குரிய இளவரசரை கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு எதிரான ட்ரம்பின் கருத்து குறித்து பிரதமர் இம்ரான் கான் விமர்சனம்



வொஷிங்டன் தலைமையிலான பயங்கரவாதம் மீதான போருக்கு இஸ்லாமாபாத் அரசாங்கம் போதியளவு ஆதரவளிக்கவில்லை. இதனால் பாகிஸ்தானுக்கான நிதி ஆதரவை நிறுத்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறி வரும் கருத்துக்களை பாகிஸ்தானின் புதிய பிரதமர் இம்ரான் கான் கடுமையான தொனியில் சாடியுள்ளார்.

கடந்த வாரம் தனது டுவிட்டர் பக்கத்தில் இம்ரான் கான் வெளியிட்டுள்ள குறிப்பில் பயங்கரவாதம் மீதான வொஷிங்டனின் போருக்கு பாகிஸ்தான் எந்தெந்த வழிகளில் ஆதரவளித்தது என்பதைப் பட்டியல் படுத்தியுள்ளதோடு, அதனால் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட இழப்பையும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்த தகவல்களை ட்ரம்ப் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான இராணுவ உதவித் தொகையை ட்ரம்ப் நிறுத்தியதை அடுத்தே இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. பிராந்தியத்தில் தாலிபான்கள் பலமடைவதற்கு அமெரிக்காவே பிரதான காரணம் என்றும் இம்ரான் கான் குற்றம் சுமத்தியுள்ளார்.

# பெப்ரவரியில் நைஜீரியாவில் ஜனாதிபதித் தேர்தல்



முஸ்லிம்கள் மிகச் செறிவாக வாழும் நாடுகளில் ஒன்றான மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியாவில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரியில் நடைபெறவுள்ளது. பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் அதீகு அபூபக்கர் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அபுஜா அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணப் போவதாக அதீகு அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு பெப்ரவரி ஜனாதிபதித் தேர்தலில் 79 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

நைஜீரியாவின் முன்னாள் உபஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான அபூபக்கர் அபுஜாவில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடாத்தி வருகின்றார்.

நாட்டில் பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும், பாதுகாப்பற்றவர்களாக உள்ளனர் என்றும் அதீகு அபூபக்கர் தெரிவித்துள்ளார். 70%மான நைஜீரியர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். 2019 பெப்ரவரி 16 இல் இடம்பெறவுள்ள தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி முஹம்மத் புஹாரியும் இரண்டாம் முறை களமிறங்க இருக்கின்றார். ஊழல், நைஜீரியா எதிர்கொண்டுள்ள மிகப் பெரிய அச்சுறுத்தல். வறுமையை ஒழிப்பதற்கு நாம் மேற்கொண்ட திட்டங்கள் வெற்றியளித்துள்ளன. ஆனால், இடைவெளிகள் இன்னும் உள்ளன என்று புஹாரி தெரிவித்துள்ளார்.

போகோஹராம் எனப்படும் தீவிரவாத இயக்கத்தினால் நைஜீரியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்தைக் குற்றம் சுமத்தியுள்ளார்.

# அவுஸ்திரேலிய தூதரகம் ஜெரூசலத்திற்கு மாற்றப்பட்டால் ஒப்பந்தத்தை நிராகரிப்போம்

## -இந்தோனேசியா



இஸ்ரேலிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகம் டெல்அவிவிலிருந்து ஜெரூசலத்திற்கு மாற்றப்படுமானால் அவுஸ்திரேலியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதிலிருந்தும் இந்தோனேசியா விலகிக் கொள்ளும் என அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் ஹரிஸன் இஸ்ரேலிலுள்ள தமது தூதரகம் டெல்அவிவிலிருந்து ஜெரூசலத்திற்கு மாற்றப்படலாம் என்று தெரிவித்திருந்தார். இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் மர்ஸூதி அவுஸ்திரேலிய அரசாங்கம் ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் மதித்துச் செயல்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

தீர்வு காணப்பட வேண்டிய ஆறு அடிப்படை விவகாரங்களில் ஜெரூசலத்தின் அரசியல் அந்தஸ்தும் ஒன்றாகும். எனவே பலஸ்தீன் விவகாரத்தில் அவுஸ்திரேலியா பலஸ்தின மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைகளை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று இந்தோனேசிய அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள அவுஸ்திரேலியா, தூதரகத்தை மாற்றுவது குறித்து இறுதித் தீர்மானம் [illegible]

# மேற்குக்கரையில் சோதனையில் ஈடுபட்ட இஸ்ரேலிய அதிகாரிகள் மீது விசாரணை





மேற்குக்கரையில் பலஸ்தீன பெண் ஒருவரின் வீட்டில் தேடுதல் நடவடிக்கைகயில் ஈடுபட்ட இரண்டு இஸ்ரேலிய அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வீட்டில் ஆண்கள் இல்லாத நேரம் தேடுதல் எனும் பெயரில் நுழையும் இஸ்ரேல் ஆக்கிரமிப்புப் படையினர் வீட்டிலுள்ள பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் இஸ்ரேல் சிவில் சேவை ஆணைக் குழுவிடம் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்ட இரு இராணுவ அதிகாரிகள் குறித்த முறைப்பாட்டை அடுத்து அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் உய்குர் முஸ்லிம்கள்

## பாலைவனச் சிறைகளில் வதைபடும் பல்லாயிரக்கணக்கானோர்





• றவூப் ஸெய்ன்

சீனாவின் மேற்குப் பிராந்தியமான சிங்கியாங் மாகாணத்தில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் பாலைவனச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளதாக சீன அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஆள் அரவமற்ற டபன்சங் எனப்படும் பாலைவனத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து சீன அரசாங்கம் மேற்கொண்ட கட்டுமாணப் பணிகள் தொழிற் கல்வி பயிற்சி நிறுவனங்கள் என அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் பாரிய சிறைச்சாலைகள் என்பது தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. சமீபத்தில் BBC செய்தியாளர்கள் மேற்கொண்ட செய்மதிப் புலனாய்வுகள் மூலம் புதிய உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக சீனாவின் மேற்கு மாநிலமான சிங்யாங்கில் வாழும் உய்குர் சிறுபான்மை முஸ்லிம்கள் குறித்து சர்வதேச ஊடகங்களில் தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச சட்டங்கள் இப்பிராந்தியத்தில் மீறப்படுவதோடு, கலாச்சார சிறுபான்மை மக்கள் மீது அரசாங்கம் திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு வரும் ஒடுக்கு முறைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைப் பேரவையிலும் அவ்வப்போது விவாதிக்கப்பட்டு வந்துள்ளது.

ஆயினும், பிரமாண்டமான நிலப் பரப்பைக் கொண்டுள்ள சீன கம்யூனிஸ அரசின் இரும்புத் திரைகளுக்குப் பின்னால் உய்குர் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்கு முறைகள் மற்றும் இனப்படுகொலைகள் குறித்த கவனம் முன்பை விட இப்போது சர்வதேச அளவில் அதிகரித்து வருகின்றது.

டபச்சங் பகுதியில் பிரமாண்டமான நிலப்பரப்பை உள்ளடக்கிய பாரிய சிறைச்சாலைகளை சீன அரசாங்கம் 2015 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தி வருகின்றது. பயங்கரவாதிகள் என சந்தேகிப்போர் மற்றும் பிரிவினைவாதிகள் எனக் கருதப்படுவோர் இலட்சக்கணக்கில் இச்சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

2018 ஆகஸ்டில் ஐ.நா. புலனாய்வுப் பிரிவு சுமார் ஒரு மில்லியன் முஸ்லிம்கள் சிங்யாங் பிராந்தியத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கை விடுத்தது. மனித உரிமைக் குழுக்களின் களத் தரவுகளை அடிப்படையாக வைத்தே இத்தகவலை ஐ.நா. வெளியிட்டுள்ள போதும், வழமை போன்று சீன அரசாங்கம் இக்குற்றச்சாட்டை மறுத்து சிறைச்சாலைகள் அனைத்தும் பள்ளிக்கூடங்கள் என்று தெரிவித்து வருகின்றது.

மேற்கு சீனாவில் சுமார் 2 கோடிக்கும் அதிகமான துருக்கிய பூர்வீகத்தைக் கொண்ட முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இவர்கள் வாழ்கின்ற பிராந்தியம் சீனாவின் சிங்கியாங் நிர்வாக மாகாணமாகக் கருதப்படுகின்றது. அங்குள்ள முஸ்லிம்கள் உய்குர் இனத்தவர்கள் என அறியப்படுகின்றனர்.

வரலாற்றில் உய்குர் முஸ்லிம்களின் பூர்வீக நிலம் தனிப் பெரும் முஸ்லிம் குடியரசொன்றாகத் திகழ்ந்திருக்கின்றது. அவர்களுக்கு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமும் தனித்துவமான கலாசார அடையாளங்களும் இருந்து வருகின்றன.

2001 செப்டம்பர் 11 இற்குப் பிந்திய சர்வதேச அரசியல் மாற்றங்களை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சீன அரசாங்கம், முஸ்லிம்கள் செறிவாக வாழும் இப்பிராந்தியம் வரலாற்றில் இருந்ததுபோன்று தனிநாடாகப் பிரிந்து சென்று விடலாம் என்ற அச்சத்தின் காரணமாக முஸ்லிம்கள் மீது பயங்கரவாத குற்றச்சாட்டுக்களை சுமத்துவதோடு, அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையிலான பல்வேறு அடக்குமுறைகளை உய்குர் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து வருகின்றது.

கடந்த 20 ஆண்டு காலமாக இந்த அடக்குமுறை தொடர்கின்றபோதும், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உய்குர் முஸ்லிம்கள் மீதான சீன அரசின் கெடுபிடிகள் தீவிரமடைந்தன. மத, கலாசார சுதந்திரம், கல்விக்கான உரிமைகள், பொருளாதார மற்றும் வணிகம் தொடர்பான சுதந்திரங்கள் உள்ளிட்டு நடமாடும் சுதந்திரமும் இம்மக்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றது.

சுமாராக மியன்மார் அரசாங்கம் அரக்கான் ரோஹிங்யா முஸ்லிம்களை நடாத்துவது போன்றே சீன அரசாங்கம் உய்குர் முஸ்லிம்களை நடாத்தி வருகின்றது. கடந்த 3 ஆண்டுகளாக ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் நோன்பிருப்பதை சிங்கியாங் மாகாண அரசு உத்தியோகபூர்வமாகத் தடைசெய்தது.

கடந்த ஒக்டோபரில் தாடி வைத்திருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 60 வயதைத் தாண்டிய பலர் கைதுசெய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான பள்ளிவாயல்கள் இயங்கா வண்ணம் இழுத்து மூடப்பட்டுள்ளன. இஸ்லாமியக் கல்வியைப் போதிக்கும் குர்ஆன் மத்ரஸாக்களும் அறபு மத்ரஸாக்களும் இயங்குவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நிறுவனங்களை நடாத்துவது சட்டவிரோதமானது என்று அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பெண்கள் ஹிஜாப் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சித் திட்டங்கள் என்ற பெயரில் உய்குர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த இலட்சக் கணக்கான இளைஞர்கள் அரச படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது பயங்கரவாத மற்றும் தீவிரவாதக் குற்றங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆயினும், சர்வதேச மன்னிப்புச் சபை ஆசிய மனித உரிமை கண்காணிப்பகம், மனித உரிமை கண்காணிப்பகம் போன்றன தடுத்து வைக்கப்பட்டோர் மீதான வழக்கு விசாரணைகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை என்றும், இது சர்வதேச சட்டங்களை மீறுகின்ற சீனாவின் அரச பயங்கரவாதம் என்றும் குற்றம் சாட்டி வருகின்றன.

சிங்யாங் மாகாணத்தில் ஹேன் இனச் சீனர்களும் வாழ்கின்றனர். ஆனால் எண்ணிக்கை அடிப்படையில் அவர்கள் சிறுபான்மையினர். பெரும்பான்மையாக வாழும் உய்குர் மக்கள் கடந்த பல தசாப்த கால அரச கெடுபிடிகள் மற்றும் அடக்கு முறைகளைத் தொடர்ந்து தமக்கு சுதந்திரம் வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

சீன அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் சீனா சுதந்திர முஸ்லிம் குடியரசை பலாத்காரமாக இணைத்துக் கொண்டது என்றும் தாம் முன்பிருந்தது போன்று சுதந்திரக் குடியரசாகச் செயல்படுவதற்கு சீன அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்றும் கோரி வருகின்றன. இந்த நியாயமான கோரிக்கையைப் பயங்கரவாதமாக முத்திரை குத்தப்பட்டு உய்குர் இளைஞர்கள் அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டு வருகின்றனர். ஹிஜாப் அணிகின்ற பெண்கள் கூட தடுப்புக் காவலில் வைக்கப்படும் அளவுக்கு கலாசார சுதந்திரம் அப்பட்டமாக மீறப்படுவதை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

சமீபத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் சீனத் தூதுவர்கள் பெரும் கண்டனங்களை எதிர்கொண்டனர். அரசாங்கத்தின் அடக்கு முறையிலிருந்து தப்பியோடும் உய்குர் இளைஞர்கள் பலர் துருக்கி போன்ற நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர். அவர்கள் மூலம் சிங்யாங்கில் என்ன நடைபெறுகின்றது என்பது பற்றிய திடுக்கிடச் செய்யும் பல தகவல்கள் உலக அரங்கிற்கு வந்த வண்ணமுள்ளன.

பிரமாண்டமான நிலப் பரப்பைக் கொண்ட சீனா, வரலாற்றில் சுதந்திரக் குடியரசாக விளங்கிய உய்குர் மக்களின் ஆட்சிப் பிராந்தியத்தை வலுக்கட்டாயமாக தன்னுடன் இணைத்தமையே இந்த நெருக்கடியின் தொடக்கம் என்று முஸ்லிம்கள் கூறி வருகின்றனர். 2017 ஆம் ஆண்டில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோர் நிலைமை குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

எந்தவொரு வெளிநாட்டு ஊடகவியலாளரும் புலனாய்வுப் பத்திரிகையாளர்களும் ஊடுருவ முடியாத அளவு சீன அரசாங்கம் தனது இரும்புத் திரையை இறுக்கமாக விதித்துள்ளது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஜேம்ஸ் டவ்ன் நிறுவனம் தடுத்து வைக்கப்பட்டோர் குறித்த தகவல் எதுவும் வெளிவராத வண்ணம் கடும் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை சீன அரசாங்கம் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

(பக்.13)

# ஜமால் கஷோகி: கொலை உத்தரவை இட்டவர் இளவரசர் முஹம்மத் பின் சல்மானே

## அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனம் (CIA)





ஸ்தன்பூலில் உள்ள சவூதி துணைத் தூதரகத்தில் ஒக்டோபர் 02 இல் இடம்பெற்ற ஜமால் கஷோகி படுகொலைக்கு உத்தரவிட்டவர் சவூதியின் பட்டத்துக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மானே என்று அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. CNN மற்றும் NBC தொலைக்காட்சியில் இது குறித்து வெளியான செய்திகளை அல் ஜஸீராவின் ஆங்கில மற்றும் அறபு தொலைக்காட்சி சேவைகள் மேற்கோள் காட்டியுள்ளன.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக CIA சேகரித்த தடையவியல் தரவுகள், மற்றும் துருக்கிய அதிகாரிகள் வழங்கிய தகவல்கள், ஒளி/ஒலி நாடாக்கள், தொலைபேசி உரையாடல்கள் போன்ற பல்வேறு ஆதாரங்களை துப்பறிந்த பின்னர் பட்டத்துக்குரிய இளவரசர்தான் படுகொலைக்கான உத்தரவை வழங்கினார் என்ற முடிவையே கண்டடையக் கூடியதாக இருந்தது என்று CIA குறிப்பிட்டுள்ளது.

தொடக்கத்தில் கஷோகி துணைத் தூதரக கட்டடத்திலிருந்து வெளியேறி விட்டார் என்று தெரிவித்த சவூதி ஆட்சியாளர்கள், குவிந்த ஆதாரங்களைக் கருத்திற் கொண்டு கொலை நடந்ததை ஏற்றுக் கொண்டது. ஒரு நாட்டின் உத்தியோகபூர்வ அலுவலகமொன்றில் அரசாங்கத்தின் தொடர்பு இல்லாமல் படுகொலை ஒன்று இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை என்பதே எளிய தர்க்கமாகும்.

கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்ட சவூதி ஆட்சியாளர்கள் தமக்கும் இக்கொலைக்கும் தொடர்பில்லை என்றே இதுவரை கூறி வந்தனர். சவூதி இதில் ஈடுபட்டிருந்தால் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கர்ச்சித்த ட்ரம்ப், CIA இன் அறிக்கைக்குப் பின்னர் சவூதி தமது நட்பு நாடு என்று அறிவித்துள்ளமை விநோதமானது.

அமெரிக்க உளவுத் துறை மற்றும் துருக்கிய அரசாங்கத்தின் உளவுத் துறை தரவுகளை அடிப்படையாக வைத்தே படுகொலைக்கு உத்தரவிட்டவர் பின் சல்மான் என்று CIA அறிக்கை கூறுகின்றது. முஹம்மத் பின் சல்மானுக்குத் தெரியாமல் இவ்வாறான ஒரு கொலை இடம்பெற்றிருக்க மாட்டாது என்பது சவூதியின் ஆட்சி முறையைப் பற்றி அறிந்து வைத்துள்ள அனைவருக்கும் எளிதாக ஊகிக்க கூடிய உண்மையாகும்.

மன்னர்கள் அல்லது இளவரசர்களின் அனுமதியின்றி இவ்வாறான படுகொலை இடம்பெற்றதாக அந்நாட்டின் வரலாற்றில் இல்லை. இதேவேளை, CIA இன் இந்த மதிப்பீடு நம்பகத் தன்மையானது என்று அமெரிக்காவின் தேசிய தொலைக்காட்சிகளும் வொஷிங்டன் போஸ்ட் உள்ளிட்ட பல பத்திரிகைகளும் கருத்து வெளியிட்டுள்ளன. ஆனால், கலிபோனியாவின் காட்டுத் தீ அனர்த்தத்தை நேரில் கண்டறிய ராஜாங்க செயலாளர் மைக் பொம்போவுடன் களத்திற்குச் சென்றிருந்த ட்ரம்ப் எதிரும் புதிருமான சில கருத்துக்களை வெளியிட்டு பின் சல்மானின் கொலைக் குற்றத்தை மூடிமறைக்க முயன்றுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் பின் சல்மான் இதனோடு சம்பந்தப்பட்டிருப்பார் என்று தாம் கருதவில்லை எனவும், CIA இன் அறிக்கை சற்று அவசரமானது என்றும் இன்னும் இரு நாட்களில் இது குறித்து அறிக்கையொன்றை வெளியிடுவோம் எனவும் ட்ரம்ப் கூறியிருந்தார்.

இதற்கிடையில் இப்படுகொலை குறித்து துப்பறிந்த துருக்கிய புலனாய்வுத் துறை அதிகாரிகள் கஷோகி சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட பின் அவரது உடல் கண்டம் துண்டமாக வெட்டப்பட்டு அமிலத்தில் கரைக்கப்பட்டு, கழிவு நீரோடு வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்நூற்றாண்டில் நடந்த அரச பயங்கரவாதத்தின் படுகொலைச் சம்பவங்களில் உலகைத் திடுக்கிட வைத்த இக்கொலை மிகப் பெரிய அக்கிரமமாகும். கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரத்தின் மீது கட்டவிழ்க்கப்பட்ட அரச பயங்கரவாதமாகும் என வொஷிங்டன் போஸ்ட் இக்கொலை கறித்து வர்ணித்துள்ளது.

இறுக்கமான மன்னராட்சி நிலவும் சவூதி போன்ற நாடுகளில் கருத்துச் சுதந்திரத்தின் குரல் வளை இவ்வாறு குரூரமாக நசுக்கப்படுவதை நாகரிகமடைந்த, பண்பட்ட மனித குலத்தால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கஷோகியின் நெருங்கிய நண்பரும் இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளருமான கலாநிதி அஸாம் தமீமி கண்டனம் செய்துள்ளார்.

CIA இன் அறிக்கையின் பின்னரும் சவூதி அரசாங்கம் கஷோகியின் கொலைக்கும் பின் சல் மானுக்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துள்ளது. அவ்வாறாயின், கஷோகி ஏன் கொல்லப்பட்டார். ஓர் அரச அலுவல கத்தில் அவரைக் கொன்றவர்களின் பின்னணி என்ன? நோக்கம் என்ன என்பது குறித்து சவூதி அரசாங்கம் தனது சொந்தப் புலனாய்வ அறிக்கையை வெளியிட்டிருக்க வேண்டும்.

தனது அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்க ஒன்றன் பின் ஒன்றாக பொய்ப் பிரச்சாரங்களை செய்து வந்த ஆட்சியாளர்கள் தனது நட்பு நாடான அமெரிக்காவின் புலனாய்வு அறிக்கை வெளிவந்த பின்னர் விழி பிதுங்கி நிற்கின்றனர். ஆனால், ட்ரம்ப் தனது பக்கத்தில் நிற்பதனால் எந்தக் கொலை குற்றம் தொடர்பாகவும் விசாரிப்பதற்கோ தண்டிப்பதற்கோ யாரும் இல்லை என்ற தைரியம் அவர்களுக்கு உண்டு. அதனால்தான் சல்மானும் அவரது மகன் முஹம்மத் பின் சல்மானும் செயற்கையாகச் சிரித்துக் கொண்டே கூட்டங்களுக்கு வருகின்றனர்.

மன்னர் சல்மான் தேசிய ஷூறா சபையில் அந்நாட்டின் உலமாக்களுக்கு மத்தியில் ஒரு செயற்கையான புன்னகையோடு உரையாற்றும் காட்சி ஊடகங் களில் வெளிவந்தது. சவூதி ஆட்சியாளர்கள் பசுத் தோல் போத்திய புலிகள் என்பதை கஷோகியின் படுகொலையைத் தொடர்ந்து அவர்கள் அரங்கேற்றிய நாடகங்கள் வெளிப்படுத்தின. சல்மானும் மகனும் கஷோகியின் மகன்மார்களிடம் சென்று தமது அனுதாபத்தைத் தெரிவித்திருந்தனர்.

தற்போது பின் சல்மான் குறித்த விம்பங்கள் மத்திய கிழக்கிலும் அதற்கு வெளியிலும் உடைந்து வருகின்றது. மன்னராட்சி பற்றிய பிரதிமைகள் சரிந்து வருகின்றன. வெறும் 17 பேருக்கு பயணத் தடை விதித்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் டொனால்ட் ட்ரம்ப் குறித்த விம்பங்களும் அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் மங்கி மறைகின்றது.

வரலாறு அதன் இனிய பழிவாங்கலை செய்யும் ஒரு தருணம் நிச்சயம் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்பூர் எஸ்.ஏ.எம். அஸ்மி,
ஷெட்டி ரம்ஸி


திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற பல்வேறு பிரதேசங்களுள் தனித்துவம் மிக்கதொரு பிரதேசமாக கிண்ணியா பிரதேசம் காணப்படுகின்றது. மீன்பிடி, விவசாயம், சிறு கைத்தொழில் மற்றும் அரச வேலை வாய்ப்புக்கள் என்று அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய முன்னேற்றகரமான பிரதேசமாக இது காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் 60,000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் சனத்தொகையினைக் கொண்டிருப்பதனால் திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகூடிய முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட பிரதேசம் என்ற பெருமையினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

திருமலை மாவட்ட அரசியல் வரலாற்றினை நோக்கும் போது திருமலை மாவட்ட முஸ்லிம் அரசியலுக்கு முகவரி கொடுத்தவர்கள் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களேயாவர். அரசியல் வரலாற்றில் புகழ் பூத்த அமைச்சர்களான மர்ஹூம் ஏ.எல். அப்துல் மஜீது, மர்ஹூம் எம்.ஈ.எச். மஃரூப் போன்றவர்கள் பல்வேறு கால கட்டங்களில் திருமலை முஸ்லிம்களின் உரிமைக் குரலாக ஒலித்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக தற்போதும் கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த அப்துல்லா மஹ்ரூப், எம்.எஸ். தௌபீக் மற்றும் இம்ரான் மஹ்ரூப் ஆகிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை இப்பிரதேசம் தன்னகத்தே கொண்டுள்ளது.

சொந்தமானது எனக் கோஷமிட்டு அப்பிரதேச மக்களுக்கான காணி உரிமைப் பத்திரமும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அதே போன்று புல்மோட்டை, அரிசி மலை, மற்றும் மலானா பிரதேசங்களில் காணப்படும் சில காணிகள் வன இலாகா மற்றும் அரிசி மலை விகாரைக்குச் சொந்தமானது எனக் கூறி ஆக்கிரமிக்கத் தொடங்கினர்.



இதன் காரணமாக ஒக்டோபர் 31 இல் பொது மக்கள், விவசாய சங்கத்தினர் ஒன்று திரண்டு தங்களது விவசாய நிலங்கள் மற்றும் இருப்பிடங்களை தங்களுக்கே உறுதிப்படுத்தித் தருமாறு கோரி ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர்.

இதன் போது இப்பிரதேச விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''நாங்கள் 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இங்கு பயிர்ச்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தோம். மர்ஹூம் அப்துல் மஜீத் (அமைச்சர்) அவர்களின் காலத்தில் எங்களுக்குக் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது வரும் அதிகாரிகள் பலர் அவ் அனுமதிப் பத்திரத்தினை செல்லுபடி அற்றது எனக் கூறுகின்றனர். எங்களை வெளியேறுமாறு சொல்கின்றனர். அப்படியாயின் அப்போது இருந்த அரசாங்கம் அரசாங்கமில்லையா? அவர்களால் வழங்கப்பட்டது காணி அனுமதிப் பத்திரம் இல்லையா?'' எனக் கேள்வி எழுப்பினார்.

அதே போன்று மற்றுமொரு பிரதேசவாசியிடம் கருத்துக் கேட்டபோது,

''நான் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற எனது காணியினை, காடுவெட்டி துப்புரவு செய்து தற்போது சோளம் செய்துள்ளேன். இப்போது வனபரிபாலன அதிகாரிகள் வந்து இப்பிரதேசத்தை விட்டுச் செல்லுமாறு கூறினார்கள். நான் செல்ல முடியாது, என்னிடம் எனது காணிக்கான ஆதாரம் இருக்கின்றது எனக் கூறி 1972 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தினை காண்பித்தேன். அதனை அதிகாரிகள் செல்லுபடியற்றதாகக் கூறி



உறுப்பினர்களைக் கொண்ட இப்பிரதேசத்திற்கு இன்னும் எல்லைகளைக் காண முடியாதுள்ளது. எனவே இம்மக்களது பிரதேசங்களுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்து எமது மக்கள் நிம்மதியாக வாழ வழி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

''கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மஜீத் நகர், ஆயிலடி போன்ற பிரதேசங்களில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் அங்கு வாழ்ந்து பின்பு ஏற்பட்ட கொடிய யுத்தம் காரணமாக வெளியேறியுள்ளனர். பின்பு 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர்

# திருமலையில் மீண்டும் குறிவைக்கப்படும் கிண்ணியா எல்லைக் கிராமங்கள்







இவ்வாறான அரசியல் பின்புலத்தினையும், முஸ்லிம் பாரம்பரியத்தினையும், மக்கள் தொகையினையும் கொண்டு காணப்படுகின்ற கிண்ணியா பிரதேசமானது இன்று சில விஷம சக்திகளினால் திட்டமிட்ட வகையில் குறிவைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தின் போது விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள் என்று அனைத்துத் துறை ரீதியாகவும் முற்று முழுதாக இப்பிரதேசம் பாதிக்கப்பட்டதோடு பல உயிர்களையும் காவு கொடுத்துள்ளது.

தற்போது யுத்தம் நிறைவடைந்து நாடும், மக்களும் புதியதொரு பாதையில் பயணிக்கத் தொடங்கியிருக்கின்ற இவ்வேளையில், யுத்தத்துக்கு முன்பு தாம் பூர்வீகமாக வாழ்ந்து காடு வெட்டி களனி செய்து, விவசாயத்தில் ஈடுபட்ட பெருமளவிலான மக்கள் தங்கள் தங்களுடைய சொந்த நிலங்களை நோக்கியும், தமது வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சியிலும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில், மஜீத் நகர், ஆயிலடி ஆகிய கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட சுண்டியாறு, செம்பிமோட்டை, கல்லறுப்பு மற்றும் கண்டல் மேடு, தீனேரி போன்ற எல்லைப் புறப் பிரதேசங்களில் தங்களது பழைய காணிகளை வெட்டி விவசாயம் மற்றும் சேனைப் பயிர்செய்கைளில் இப்பிரதேச பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறானதொரு சூழலில் வனபரிபாலன இலாகா அதிகாரிகளினால் இப்பிரதேசம் வன பரிபாலன இலாகாவிற்கு உரியது எனக் கூறி தங்களது எல்லைக் கற்களை இடும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களை இலக்கு வைத்து இவ்வாறான நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அந்த வகையில் பார்க்கும் போது சேருவில பிரதேசத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்ற 49 ½ ஏக்கர் காணி உட்பட 1000 ஏக்கர் காணியினை வன பரிபாலன இலாக்கா மற்றும் சேருவில விகாரைக்குச்

> மக்கள் நிலங்களை துப்புரவு செய்து பயிர்ச்செய்கையில் ஈடுட்டு வருகின்றார்கள். இதேவேளை இக்காணிகள் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்குச் சொந்தமானது எனக் குறிப்பிட்டு எல்லைக் கட்கள் இடும் பணியும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இப்பிரச்சினையானது பல்வேறு அரசியல்வாதிகளின் துணையுடன் ஜனாதிபதி மட்டம் வரைக்கும் கொண்டு செல்லப்பட்டதுடன், அண்மையில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் அனைத்து அதிகாரிகளுடனான உயர் மட்ட கலந்துரையாடலில் தற்காலிகத் தீர்வே எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து வரும் திருமலை மாவட்ட காணிப் பிரச்சினைகளின் அடுத்த கட்டமாகவே கிண்ணியா பிரதேசம் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. கிண்ணியா பிரதேசத்தினுடைய நிலப்பரப்பினை நோக்கும் போது 1975 ஆம் ஆண்டுக்கு முன்னர் நில அளவைத் திணைக்களத்தின் கணிப்பீட்டின்படி கிண்ணியா பிரதேசத்தின் பரப்பளவு 180 சதுர கிலோ மீற்றர்களாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்த எல்லைகள் 146 சதுர கிலோ மீற்றர்களாக குறைவடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இப்பிரதேசத்தினுடைய எல்லைகள் குறைவடைந்து செல்வதன் மர்மம் என்ன? இதனை ஆக்கிரமிப்பவர்கள் யார்? இவ் ஆக்கிரமிப்பின் பின்னணி என்ன? என்ற பல்வேறு வினாக்கள் இன்று மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. இது தொடர்பாக அரசியல் தலைமைகளின் செயற்பாடு அல்லது கரிசனை பற்றி நோக்கும் போது அது போதுமானதாக [illegible] கின்றது.

வெளியேறுமாறு வற்புறுத்துகின்றார்கள். நான் கஷ்டப்பட்டு செய்த சோளப் பயிர்ச்செய்கையை வெட்டி முடிக்காமல் வெளியேற முடியாது. எங்களுக்கு நல்லதொரு தீர்வினைப் பெற்றுத் தாருங்கள்'' எனக் குறிப்பிட்டார்.

இதே வேளை, இப்பிரச்சினை தொடர்பாக கிண்ணியா நகர சபையின் முன்னாள் நகர பிதா டொக்டர் ஹில்மி மஹ்ரூப் அவர்களிடம் வினவிய போது,

''இம் மக்கள் வேண்டுவது அவர்களது ஜீவனோபாயத்தை, தங்களது பிள்ளைகளின் பசிக்கான உணவினையே ஆகும். அவர்கள் மாட மாளிகைகளை கேட்கவில்லை. 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு எங்கு விவசாயம் செய்து வாழ்ந்தார்களோ அந்த நிலங்களையே கேட்கின்றார்கள்'' எனத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஜனாதிபதி அவர்கள், டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் பொது மக்களது அனைத்து காணிகளையும் விடுவிப்போம் என்று கூறியுள்ளார்கள். ஆனால் இற்றை வரைக்கும் முடிவு கிடைக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி அவர்கள் காணிகளை விடுவிப்பதாகக் கூறிய பின்னரான காலப்பகுதியில்தான் பொது மக்களது காணிகளுக்குள் வன அதிகாரிகளினால் எல்லைக் கற்கள் இடப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்ற

மக்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பியபோது காடுகளும், புதர்களும் வளர்ந்து காணப்பட் டுள்ளது.

இதனால் மக்கள் நிலங்களை துப்புரவு செய்து பயிர்ச்செய்கையில் ஈடுட்டு வருகின்றார்கள். இதேவேளை இக்காணிகள் வன ஜீவராசிகள் திணைக் களத்திற்குச் சொந்தமானது'' எனக் குறிப்பிட்டு எல்லைக் கற்கள் இடும் பணியும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வனஜீவராசிகள் திணைக் களத்திற்கு அறிவித்திருப்பதாகவும், மக்களுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வினை எட்ட முயற் சிப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு பலரும் பல கருத்துக்களை தெரிவித்து வருகின்ற போதும் மாவட்ட தலைமைகள் இது தொடர்பாக காத்திரமானதொரு தீர்வினை எட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். ஏனெனில் கிண்ணியா பிரதேசமானது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுவதுடன், பெரும்பான்மை முஸ்லிம் வாக்குகளை கொண்டுள்ள பிரதேசமுமாகும். இதன் எல்லைகள் சுருக்கப்படுவது இப்பிரதேச மக்களின் எதிர்கால இருப்புக்கு பெரும் சவாலாக அமையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அதே நேரம் முஸ்லிம்களினது விகிதாசாரம் சில வேளைகளில், குடியேற்றத்தினூடாக எதிர்காலத்தில் திட்டமிட்ட வகையில் குறைக்கப்படுமாக இருந்தால் எதிர்காலத்தில் அரசியல் ரீதியானதொரு பாரிய பின்னடைவை திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என்பது திண்ணம்.

எனவே எதிர்கால கிண்ணியா முஸ்லிம் மக்களின் இருப்பு, பொருளாதாரம், அரசியல் எதிர்காலம் மற்றும் இருப்பு ஆகியவற்றினை கருத்திற் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது முஸ்லிம் தலைமைகளினதும், சிவில் அமைப்புக்களினதும் தலையாய பொறுப்பாகும். இல்லையேல் இம்மக்களின் எதிர்காலம் அணை கடந்த வெள்ளமே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அருவியெம்

பல இன மக்களைக் கொண்ட நமது நாட்டிற்கு ஒற்றுமை உயிர் போன்றது. 'ஒற்றுமையால் சிறிய குழுக்கள் ஓங்கி வளர்கின்றன, வேற்றுமையால் பெரிய குழுக்கள் வீழ்ச்சியடைகின்றன' ஒத்த மனமுடையவர்கள் ஒன்று சேர்ந்தால் கடலையும் வற்ற வைக்கலாம். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பது எவ்வளவு விளக்கமான வார்த்தைகள்.

வைக்கோல் போர் பிரிந்து கிடக்கிறது. அதை எளிதில் உதிர்த்துவிடலாம் - உதறி விடலாம், கொஞ்சம் பலத்த காற்று அடித்தால் பறக்கும் இயல்புடையது. ஆனால் கதிர்க் கட்டை வடமாக திரித்து விடுங்கள்! எவ்வளவு பலம் அடைந்து விடுகிறது. வெறும் வைக் கோல்கள் பெரும் வலிமை அடைகின்றன. இலகுவில் அதை அறுக்க முடியாது. யானை இழுத்தாலும் வடம் விட்டுக் கொடுப்பதில்லை. இதனால்தான் பலமில்லாதவைகளும் ஒன்று சேர்ந்தால் பலமுள்ளதாகி விடும் என்று கூறுகிறோம்.

இலங்கை முஸ்லிம் அரசியலில் முஸ் லிம் அரசியல்வாதிகள் பல கட்சிகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள். இதில் பல நன் மைகள் இருக்கின்றன. அதே போல் பல தீமைகளும் இருக்கின்றன. ஏனெனில், சமூகம் என்றால் மக்களிடையே அபிப் பிராய பேதங்கள் இருப்பது இயல்பு. ஆனால், அவை கொள்கை பேதங்கள் அல்ல என்பதை முஸ்லிம் அரசியல் தலை மைகள் உணர்ந்து செயற்பட வேண்டும்.



# இலங்கை முஸ்லிம் அரசியலில் மக்கா உடன்படிக்கை

### பாராளுமன்ற கலைப்பும் முஸ்லிம்களும்

'வேறுபட்ட எண்ணங்கள் இருக்க லாம், ஆனால் மாறுபட்டதாக இருக்கக் கூடாது.' இதன் அடிப்படையில் ஒக்டோ பர் மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் அரசியல் நெருக்கடி மேலும் ஒரு கட் டத்தை அடைந்துள்ளது. ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து பல தரப்பு கள் உயர் நீதிமன்றத்தை அடைந்து அங்கும் வெற்றி பெற்றுள்ளார்கள். இவ் வெற்றி இலங்கை வரலாற்றில் ஜனநாயகத் திற்கு கிடைத்த பாரிய வெற்றியாகும். இந்நிலையில், அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தலை சந்திப்பதா? மாகாண சபைத் தேர்தலை சந்திப்பதா என அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையிலேயே சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசும் அகில இலங்கை மக்கள் காங்கிரசும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது இலங்கை அரசியல் யாப்புக்கு முரணானது என்றும், அது ஜன நாயகத்திற்கு எதிரான செயல் என நீதி மன்றத்தை நாடினார்கள். நாட்டின் ஜன நாயகத்தையும் அரசியலமைப்பையும் பாதுகாக்கும் பொறுப்பு சகல பிரஜைகளுக் கும் உண்டு என்ற வகையில் இவ்விரு முஸ்லிம் கட்சிகளும் இது விடயத்தில் நீதிமன்றத்தை நாடியமை வரவேற்கத்தக்க தும், பாராட்டத்தக்கதாகும்.

மேலும், அதனைத் தொடர்ந்து உம்ரா கடமைக்காக இவ்விரு கட்சிகளையும் சேர்ந்த 12 முஸ்லிம் எம்.பி.க்களும் சவூதி அரேபியாவின் மக்கா நகருக்குச் சென்றி ருந்தனர். இதன்போது இரு கட்சிகளின தும் தலைவர்களது தலைமையில் மேற் படி 12 பேரும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது தற் போதைய நெருக்கடி நிலைமையில் முஸ்லிம் சமூகம் சார்ந்து எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வது? இரு கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து கலந்துரை யாடியுள்ளனர். உண்மையில் இச்செயல் பாரிய முன்னேற்றமான செயலாகவே நோக்குனர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இது குறித்து மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் கூறும்போது. 'உம்ரா கடமையை முடித்துவிட்டு நானும், றிஷாத் பதியுதீனும் மக்காவில் வைத்து தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாக கூட்டாகவும் தனியாகவும் சந்தித்து பேசினோம். இப் போதையே சூழ்நிலையில் மக்களின் அபிடிலாஷைகளை மதித்து, ஜனநாயகத் தைப் பாதுகாக்கும் நோக்கில் செயற்படு தல் என்ற தீர்மானத்தை ஒருமித்து எடுத் துள்ளோம். தற்போதைய ஒற்றுமையில் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதில் றிஷாத் பதியுதீன் ஆர்வமாக இருக்கிறார். இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவ தால் ஏற்படும் சாதக, பாதங்கள் பற்றி விரிவாக ஆராய வேண்டும்' என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், சமூகத் தலைவர்களில் சிலர் அரசியல் தலைவர்களாக மாறுவதுண்டு, ஏனென்றால் அரசியலைப் போன்ற ஒரு சிறந்த சூதாட்டம் கிடையாது. அரசியலில் அடி வைத்ததும் இவர்களின் அரிய தன்மை களில் சிலவற்றை ஆகாயத்தில் பறக்க விட்டு விடுவார்கள். அரசியல் ஒரு சாக் கடை என்றும், பாம்பின் கால் பாம்புக்குத் தானே தெரியும். தனி மனிதனின் சுயநலத் தற்காகப் பொதுக் காரியங்களில் ஈடுபடு வதற்குத்தான் அரசியல் என்று கூறப்படு கிறது.

உலகில் எல்லாத் தவறுகளுக்கும் தண்டனை உண்டு, ஆனால் அரசியலில் பொய் சொன்னால், வாக்குத் தவறினால், நம்பிக்கைத் துரோகம் செய்தால், கட்சி மாறினால் தண்டனை கிடையாது. அரசி யல்வாதிகள் சமூக ஜோதிகள் அல்லர். அரசியல்வாதிகளின் அக்கறை தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதே அவர் களின் இலட்சியம். ஒரு தேர்தல் முடிந்த தும் அடுத்த தேர்தலில் அவர்களின் கவனம் செல்லும். மக்கள் எக்கேடு கெட்டும் நான் பதவிக்கு வந்தே தீர வேண்டும் என எதையும் செய்வார்கள்.

என்பவைகளிலிருந்து சற்று விலகி, ஜனநாயகத்தைப் பாதுகாக்க சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் மக்காவில் செய்து கொண்ட உடன்படிக்கை உண்மையில் முஸ்லிம் சமூகத்திற்கு பாரிய செல் வாக்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்து ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்ற வகை யிலும் இரு தரப்பினரும் இவ்வாறான நெருக்கடியான கால கட்டத்தில் சமூகம் சார்ந்தும் புரிந்துணர்வுடனும் ஜனநாயகத் தைப் பாதுகாக்க முன்வந்தமை முஸ்லிம் கள் மத்தியிலும் ஏனைய சமூகங்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### ஒற்றுமையான உன்படிக்கை

ஆனால், அரசியல்வாதிகள் மனித சமூகத்தைப் இரண்டாகப் பிரிப்பார்கள். ஒன்று தங்களுக்கு ஆயுதங்களாகப் பயன் படும் மனிதர்கள். மற்றொன்று தங்கள் எதிரிகள். எதிரிகளைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள். ஆயுதமாக இருந்தவர்கள் ஏணிகள்தானே!. ஏறிய பிறகு என்ன தேவை? அத்தகைய நபர்கள் பெரிய அரசியல்வாதிகளாக இருக்கலாம். ஆனால் வேடதாரிகள். இத்தகைய அரசியல்வாதிகளின் முடிச்சில் மாட்டிக் கொண்டு பல சமூகங்கள் மங்கிக் கிடக் கின்றன. வளமிருந்தும் வலிமையிலிருந் தும் அவை பொலிவிழந்து சோம்பிக் கிடக்கின்றன.

இவைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கில், இந்தப் புரிந்துணர்வு மக்கா உடன்படிக்கை மேலும் தொடர வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப் பாகும். இவர்கள் இலங்கை தேசத்தை ஆதரித்து, அதில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஒருமித்து செயற்பட வேண்டும் என இச்சமூகம் எதிர்பார்க்கின்றது. இவர்கள் ஆட்டின் வளர்ந்த ரோமங்களை வெட்டிக் கொள் ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்பார்க்கிறார்கள். மாறாக, ஆட்டோடு சேர்த்து ஆட்டின் தோலையும் அறுத்து எடுக்கக் கூடியவர்காளக இருக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்லப்படு கிறது.

எனவே, எதிர்வருகின்ற தேர்தல்களை இரு கட்சிகளும் இணைந்து செயற்பட முடியுமான இடங்களில் இணைந்து ஒற்றுமையை வலியுறுத்தி வெற்றி பெற வழிவகுக்க வேண்டும். அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை மேலும் அதிகரிக்க வாய்ப்புக்களை ஏற் படுத்த வேண்டும். அது சமூகம் சார்ந்த விடங்களுக்கு சாதகமாக அமையும்.

எனினும், குட்டி அரசியல்வாதிகளின் அட்டகாசம் ஒரு அலாதியானது. அவர்கள் விதவிதமான திருகுதாளங்கள் செய்வார் கள். கூட்டம் நடத்தாமலேயே நிகழ்ச்சிக் குறிப்பு எழுதி வைப்பார்கள். பொய்ப் பெயர்ப் பட்டியல் தயாரிப்பார்கள். கட்சிப் பணத்தைக் கணக்குச் சோடித்து கபளீகரம் செய்வார்கள். கலை இரவிற்காக கூத்தாடு வார்கள். இப்படி எதை எதையோ செ ால்லி பணம் எடுப்பதற்காக ஒற்றுமையை சீர்குலைப்பார்கள்.

இவர்களின் இச்செயலில் சில சாதக பாதகங்களும் இருக்கின்றன. ஆனால், 'மக்காவில் ஒன்றுபட்டவர்கள் இலங்கை யில் வந்து பிரிந்துவிடாமல், இரு கட்சி களும் ஒன்றுபட்டு சமூகத்திற்காக இதய சுத்தியுடன் செயற்பட்டால், இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு பல சாதகமான தன்மைகள் காணப்படுகின்றன.

---



செய்னுலாப்தீன் நிஹாஸ்

# முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைதான் என்ன?

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக அபிவிருத்தியை நோக்கும் போது குறிப்பாக காலனித்துவத்தின் பிந்திய பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் சமூகம் ஓரளவு முக்கியத்துவம் பெற்ற தாகக் காணப்பட்டது. இதற்கான காரணங் களாக வியாபாரத்தில் எமது சமூகம் பெற்றிருந்த முதிர்ச்சியும் முக்கியத்துவ மும் மற்றும் அரச நிர்வாகத்தில் நேர்மை யும் திறமையும் பெற்ற அதிகாரிகளாகவும் எமது முன்னோர்கள் காணப்பட்டனர். இதன் மூலம் எமது சமூகம் பற்றிய மதிப் பான ஒரு பார்வை அக்கால காலனித் துவவாதிகளிடம் காணப்பட்டது. இது பல நேர்மறையான சமூக செயற்பாட் டுக்கு உதவியது.

சுதந்திரத்திற்கு பின் சுதந்திரத்திற்கான போராட்ட காலத்திலும் எமது சமூகத் தலைமைகள் நாடு மற்றும் சமூகத்தின் விட்டுக் கொடுக்க முடியாத அடிப்படை மார்க்க விடயங்களையும் மிகவும் சம நிலையாகக் கையாண்டதன் மூலம் நாட் டின் எல்லா சமூகத்தினரிடமும் ஒரு நன்மதிப்புப் பெற்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் காணப்பட்டது. குறிப்பாக பெரும் பான்மை சமூகத்தோடும் அதன் கட்சிக ளோடும் கொண்டிருந்த நெருக்கமான உறவும் நேர்மைத் தன்மையும் எமது சமூகத்தின் நன்மதிப்பை அடுத்த சமூகத் தினரிடம் பெற்றுத் தந்தது.

இருந்தபோதிலும் சுதந்திரத்தின் பின் னரான பல்வேறு அரசியல் நிகழ்வுகளும் தமிழ் மக்களின் அரசியல், ஆயுதப் போராட்டங்களும் இலங்கையில் வாழும் ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான அரசியல் போக்கிற்கு வித்திட்டது. இதன் பின்னரான அரசியல் நடவடிக்கைகள் சிங்கள - தமிழ் அரசியல் பிரச்சினையாக வடிவமெடுத்து பிற்காலத்தில் 1980களுக்கு பிறகு சிங்கள - தமிழ், முஸ்லிம் இனத்துவ அரசியல் பிரச்சினையாக வடிவமெடுத் தது. எனவே ஒவ்வொரு இனமும் தனது சமூகத்தை தற்பாதுகாக்கும் அரசியல் நட வடிக்கையில் இறங்கியதோடு நாடு என்ற பொதுப் பார்வை எல்லா சமூகங்களிட



மும் மறைந்து சென்றதை நாம் அவதா னித்தோம்.

ஒவ்வொரு சமூகமும் அடுத்த சமூ கத்தை சந்தேகக் கண்கொண்டு பார்த்த தோடு பெரும்பான்மை பலம் என்ற நோக் கில் குறிப்பாக சிங்கள சமூகமும் தமிழ்ச் சமூகமும் சிந்திக்கத் தோன்றியதோடு தமது சமூகம் சார்ந்து மட்டுமே தீர்வுகளை முன்வைத்து அரசியல் செயற்பாட்டை ஆரம்பித்தது.

இந்த அடிப்படையில் மிகவும் பாதிக் கப்பட்ட சமூகமாக கவனிப்பாரற்ற சமூக மாக முஸ்லிம் சமூகம் மாறியது. இந்த இடைவெளியை நிரப்பும் சரியான தருண மாக முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி வேகமாக குறிப்பாக வடக்கு கிழக்குப் பிர தேசங்களில் வளர்ச்சியடைந்தது. இதன் மூலமாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினை களை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை இப்பிரதேசங்களிலும் நாட்டின் ஏனைய பிரதேச முஸ்லிம் சமூகத்தினிட மும் ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் ஒவ்வொரு சமூகமும் தனது அரசியல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. இந்த வகை யில் சிங்கள சமூகம் எல்லா [illegible] திலும் ஆட்சி செலுத்தும் சமூகமாகவே காணப்படுகின்றது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரண்டிலும் சிங்கள சமூகமே காணப்பட்டதால் அவர்களின் சமூகம் சார் ந்த பிரச்சினைகள் இலகுவாக வென்றெ டுக்கக் கூடிய நிலையே இன்றுவரை காணப்படுகின்றது.

இருந்தாலும் அண்மைக் காலமாக பெரும்பான்மைக் கட்சிகளும், அச்சமூகம் சார்ந்த தீவிர மதச்சார்பு மற்றும் சிவில் அமைப்புக்களும் சிங்கள சமூகம் ஏனைய சமூகங்களால் ஆபத்தை எதிர்நோக்கின் றன என்ற வாதத்தை முன்வைத்து வரு வதைக் காணலாம். இந்த அடிப்படையில் பின்வரும் வாதத்தினை அவர்கள் முன் வைக்கின்றனர்.

1. சிறுபான்மைக் கட்சிகள் குறிப்பாக (தமிழ்-முஸ்லிம்) அரசியல் ஆதிக்கம் பெற்று வருவதால் பெரும்பான்மை கட்சி கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள் ளன. இதன் மூலம் சிங்கள சமூகம் இர ண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

2. வியாபாரம் என்று நோக்கும்போது முஸ்லிம் சமூகம் சிங்கள சமூகத்தை மிகைத்து வருகின்றன. இதன் மூலம் [illegible] சமூகத்திடம் போய்விட்டது என்ற கருத் தையும்

3. சிங்கள சமூகத்தின் இனத்துவப் பரம்பல் குறைந்து வருகின்றது. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் இனப்பரம்பல் அதி கரித்து வருவதோடு குறிப்பிட்ட ஆண்டு களுக்குப் பின் பெரும்பான்மை சமூகமாக முஸ்லிம் சமூகம் மாறிவிடும் என்ற கருத்தையும் இதன் மூலம் பௌத்த மத மும் பௌத்த நாடும் இல்லாமல் போய் விடும் என்ற ஒரு உண்மைக்குப் புறம் பான ஒரு மாயை சிங்கள சமூகத்தில் உருவாக்கப்படுகிறது.

தமிழ் சமூகத்தை பொறுத்தவரையில் சுதந்திர தமிழ்நாடு என்ற கோசத்துடன் அரசியல் போராட்டமாக உருவெடுத்து தமிழ் மக்களின் போராட்டமும் 1980களுக் குப் பின்தமிழ் ஈழம் என்ற கோசத்துடன் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. 2009 எல்ரீரீஈயின் யுத்த தோல்வியின் பின்னர் தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லோருமாக பொதுவான ஒரு கருத்தை முன்னிறுத்தி தமது அரசியல் போராட் டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த அடிப்படையில் அவர்களின் பிரச்சினையை சரியாக இனங்கண்டு அதற் கான தீர்வை நோக்கியதாக தமிழ் அரசியல் போராட்டம் சென்று கொண்டிருக்கிறது. இந்த வகையில் அவர்களின் கோரிக்கை யாக

1. சமஷ்டி ஆட்சி அடிப்படையிலான அரசியல் தீர்வு
2. வடக்கு மற்றும் கிழக்கு மீண்டும் இணைக்கப்பட வேண்டும்.
3. வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத் தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும்.
4. காணாமல் போனோருக்கான அலுவ லகம் திறக்கப்பட்டு காணாமல் ஆக் கப்பட்டோர் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அல்லது அவர்களுக்கான நஷ்டஈட்டை பெற்றுத்தர வேண்டும்.
5. தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் அரசி யல் யாப்பில் மாற்றம் கொண்டுவரப் பட வேண்டும்.
6. சர்வதேச தலையீட்டின் மூலமாக தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

போன்ற இன்னோரன்ன கோரிக்கை களை முன்வைத்து உள்நாட்டில் அரசியல் கட்சிகளின் ஊடாகவும் வெளிநாட்டில் (டயஸ்போரா) அமைப்புக்களின் ஊடாக வும் தமது அரசியல் போராட்டத்தை முன் னெடுத்து வருகின்றனர்.

இந்த இரண்டு சமூகங்களின் அரசியல் போராட்டத்தை முஸ்லிம் சமூகத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் சிறு பான்மை என்ற வகையில் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கியிருக்கும் எல்லா வகையான இழப்புகளும் பிரச்சினைகளும் எமது சமூகம் கொண்டிருந்த இது வரையான காலப்பகுதியில் முஸ்லிம் அரசியல் கட்சி களோ, சிவில் அமைப்புக்களோ எமது சமூகத்தின் பிரச்சினைகள் என்ன? அதனைத் தீர்க்க நாம் எவ்வகையான வழிமுறைகளை கையாள வேண்டும் என்ற எந்தத் தீர்வும் சென்றுகொண்டிருந் ததைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த இடத்தில் அண்மையில் நடை பெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பல பிரதிநிதிகள் கலந்து கொண்டு நடத்தப்பட்ட ஒரு கருத்தரங் கில் எல்லா சமூகங்களின் பிரதிநிதிகளும் எங்களது சமூகத்தின் பிரச்சினைகளைத் தெளிவாக முன்வைக்கவும் என்று கூறிய போது, தமிழ் சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள் மிகத் தெளிவாக தமது பிரச்சினைகளை இக்கட்டுரையில் குறிப் பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை தமிழ் சார் ந்த அனைத்தையும் முன்வைத்துள்ளனர்.

முஸ்லிம் சமூகம் சார்பாக கலந்து கொண்டவர்கள் முஸ்லிம் சமூகம் அடுத்த வர்களுடன் இணைந்து வாழ விரும்பு கின்றனர் சிங்கள சமூகத்திற்கு முஸ்லிம் சமூகம் பற்றி பிழையாக விளங்கப்படுத் தப்பட்டுள்ளது.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற மதத்தவர்களின் பண்டிகை வாழ்த்துகள்

## நல்லுறவுக்கான கௌரவ உபசாரம்



• முஹம்மத் பகீஹுத்தீன்

கிறிஸ்தவ புதுவருடத்தை முன்னிட்டு வாழ்த்துக்களைப் பரிமாறுவது குறித்து புதுவருடம் மலரும்போது பலரும் கேள்வி எழுப்புகின்றனர். அறிஞர்கள் மத்தியில் பிறமதத்தவர்களின் விஷேட தினங்களில் வாழ்த்துப் பரிமாறுவது குறித்து கருத்து முரண்பாடு நிலவுகிறது. இது குறித்து நேரடியான சட்ட வசனங்கள் எதுவு மில்லை என்பதே இத்தகைய வித்தியாசமான சிந்தனைகள் பேசப்படுவதற்கு முதன்மைக் காரணமாகும்.

இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கிறிஸ்தவ புதுவருட வாழ்த்துக்களைப் பரிமாறுவது ஹராம் என்று பத்வா வழங்கியுள்ளார்கள். (பதாவா 2/488) அவர்களின் மாணவரான இமாம் இப்னு ஜவ்ஸி (ரஹ்) அவர்களும் கிறிஸ்மஸ் பண்டிகை வாழ்த்துக்கள் கூறுவது ஹராம் என்றே தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். (அஹ்காம் அஹ்லுல் ஸிம்மா 1/161)

அநேகமான ஸலபி சிந்தனை முகாமைச் சேர்ந்த அறிஞர்களும் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் வழங்கிய பாரம்பரியமான தீர்ப்பை அச்சொட்டாக நகலெடுத்தே கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். அந்த வகையில் இமாம் இப்னு பாஸ் (ரஹ்), முஹம்மத் உஸைமீன் (ரஹ்), அல்பானி (ரஹ்) போன்ற பலர் கிறிஸ்மஸ் பண்டிகைக்கான வாழ்த்துப் பரிமாறல் அல்லது கிறிஸ்தவ புது வருடத்துக்கான வாழ்த்துக் கூறல் ஷரீஆவின் பார்வையில் ஹராம் என்றே பத்வா கொடுத்துள்ளனர்.

இவர்கள் ஹராம் என்பதற்கான நியாயங்களை முன்வைக்கும் போது இது கிறிஸ்தவர்களின் மத ரீதியான பண்டிகைத் தினமாகும். எனவே, இதற்காக வாழ்த்துப் பரிமாறுவது அவர்களின் மார்க்க விவகாரங்களில் ஒப்பாகுவதற்குச் சமனாகும். இஸ்லாம், பிற சமூகத்திற்கு ஒப்பாகுவதை ஹராமாக்கியுள்ளது எனவும் வாழ்த்துத் தெரிவிப்பதன் மூலம் அவர்களின் பண்டிகையில் நாம் பங்கேற்கின்றோம் என்றே அர்த்தம் எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் வாழ்த்துப் பரிமாறுவதை அனுமதிப்பதானது முஸ்லிம் நாடுகளில் கிறிஸ்தவர்களுக்குரிய விழாவை இறக்குமதி செய்து கொண்டாடுவதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமையும் எனவும் விளக்கம் கூறியுள்ளனர்.

எனவே கிறிஸ்தவர்களின் மத அனுஷ்டான சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ அல்லது பொதுவான வாழ்த்துக்குரிய சொற்பிரயோகங்களை பயன்படுத்தியோ வாழ்த்துக்களைப் பரிமாறுவதும் அன்பளிப்புக்களை வழங்குவதும் ஹராம் ஆகும் என இமாம் இப்னு தைமியாவின் சிந்தனையைப் பின்பற்றும் சில நவீன கால அறிஞர்கள் பத்வா வழங்கியுள்ளனர்.

கிறிஸ்தவ புது வருட வாழ்த்துக்களைப் பரிமாறுவது அல்லது பிற மதத்தவர்களின் விஷேட தினங்களில் அல்லது வேறு வகையான தேசிய தினங்களை முன்னிட்டு வாழ்த்துப் பரிமாறுவது மனித நேயம் என்ற வகையில் கௌரவ உபசாரமாகவே நோக்க வேண்டும் என நவீன கால அறிஞர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். பெரும்பான்மையான நவீனகால சட்டத் துறை அறிஞர்கள் இதுபோன்ற வாழ்த்துத் தெரிவிப்பதில் தவறில்லை என்றே கருதுகின்றனர்.

கலாநிதி யூஸுப் கர்ளாவி அவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது கால, சூழ்நிலைகளின் மாற்றம் காரணமாக ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமியாவின் சிந்தனையோடு உடன்பட முடியாதுள்ளது எனக் குறிப்பிடுகிறார். இன்று கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் சமாதான சகவாழ்வோடு வாழ்கிறார்கள். அன்று காணப்பட்ட சிலுவைப் போர் சூழல் இன்றில்லை.

இன்று முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஒரே தேசத்தில் வாழும் சம உரிமை- கடமைகள் கொண்ட குடிமகன்களாகவே திகழ்கின்றனர். அவர்களுக்கு மத்தியில் திருமண பந்தங்களும் காணப்படுகின்றன. அதனால் ஏற்படும் சொந்தங்கள், குடும்ப உறவுகள் வளர்ந்துள்ளன. முஸ்லிம்களை அண்டி வாழும் அயலவர்கள், பள்ளித் தோழர்கள், அலுவலக சகபாடிகள் என இரு சாராருக்கும் மத்தியில் பலமான உறவுகளும் தொடர்புகளும் வளர்ந்துள்ளன. எனவே இத்தகைய சமாதான சகவாழ்வு சூழல் நிலவும் போது நல்வாழ்த்துக்களைப் பரிமாறுவது தவறல்ல.

இஸ்லாம் இத்தகைய கௌரவ உபசாரங்களை வரவேற்பது மாத்திரமின்றி அதனைத் தூண்டியுமுள்ளது. அல்குர்ஆன் ஸூரா மும்தஹினாவின் ஏழாவது வசனத்தில் சமாதானமாக வாழும் அந்நியர்களுடன் நல்ல முறையில் உபகாரம் செய்யுமாறும் நீதியுடன் நடந்துகொள்ளுமாறும் முஸ்லிம்களைப் பணிக்கிறது.

ஆய்வுக்கும் பத்வாவுக்குமான ஐரோப்பிய ஒன்றியம் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் கிறிஸ்தவ புதுவருட வாழ்த்துக்கள் பரிமாறுவதை மேற்கூறிய ஆதாரங்கள் அடிப்படையில் ஆகும் என்றே பத்வா வழங்கியுள்ளது.

போராடாத சூழலில் ஒரு முஸ்லிம் தனிநபர் அல்லது இஸ்லாமிய நிறுவனங்கள், அமைப் புக்கள் வாழ்த்துக்களைப் பரிமாறுவது அல்லது வாழ்த்து அட்டைகளைப் பகிர்வது ஆகுமானதே. இஸ்லாம் அனுமதிக்காத மத அடையாளச் சின்னங்கள், சுலோகங்கள் பொறிக்கப்படுவதையும் வாழ்த்து அட்டைகளில் அகீதாவிற்கு முரணான வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ந்து கொள்வதையுமே இங்கு கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம் என பத்வா ஒன்றியம் வழிகாட்டியுள்ளது.

கிறிஸ்தவ புதுவருடத்தை அல்லது தமிழ் சிங்கள புத்தாண்டை அல்லது அதுபோன்ற விசேட தினங்களை முன்னிட்டு வாழ்த்துப் பரிமாறும் போது பயன்படுத்தப்படும் பதப்பிரயோகங்கள் பிற மதத்தினரின் நம்பிக்கை கோட்பாட்டை வெளிப்படையாகவே அங்கீகரிக்கும் சுலோகங்களாக அமையாமல் இருக்க வேண்டும் என்பதையே நாம் மனங்கொள்ள வேண்டும். இந்நிபந்தனைகளுடன் இன, மத பேதமின்றி சாதாரணமாக சம்பிரதாய அடிப்படையில் மக்கள் மத்தியில் காணப்படும் வழக்கமான பாராட்டுக்கள், வாழ்த்துக்கள், அன்பளிப்புக்கள் என்பன கௌரவ உபசாரமாகும். நல்லுறவைப் பேணும் உபசரிப்பாகவே இஸ்லாம் இதனைப் பார்க்கிறது.

எனவே அந்த வகையில் அன்பளிப்புக்களைப் பெறுவதோ அல்லது அதற்குப் பதிலீடாக அன்பளிப்பு வழங்குவதோ ஆகுமானதே. நபி (ஸல்) அவர்கள் எகிப்து நாட்டின் கிறிஸ்தவ மன்னன் முகவ்கிஸிடமிருந்து அன்பளிப்புக்களை மனமுவந்து ஏற்றுள்ளார்கள். (ஸாதுல் மஆத் 3/61)


அயலவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ற வகையில் பிற மதத்தவர்களின் பண்டிகை வாழ்த்துக்கள் ஆகுமானதே என கட்டார் பல்கலைக்கழகப் பேராசிரியர் முஹம்மத் தஸூக்கி அவர்கள் அபிப்பிராயப்பட்டுள்ளார். (islam online.net)

மரியாதைக்கான உபசாரம், நல்லுறவு பேணுதல் என்ற வகையில் கிறிஸ்வ புதுவருட வாழ்த்து ஆகுமானதே என இஸ்லாமிய சட்டத்துறையிலும் உஸூல்களிலும் பெரும் பாண்டித்தியம் உள்ள உஸ்தாத் முஸ்தபா ஸர்கா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே முஹம்மத் ரஷீத் ரிழா (ரஹ்), அஹ்மத் ஷர்பாஸி (ரஹ்), அப்துல்லாஹ் பின் பய்யா போன்ற இஸ்லாமிய சட்டக்கலை வல்லுனர்கள் கிறிஸ்தவ புதுவருட வாழ்த்து ஆகுமானதே என பத்வா வழங்கியுள்ளனர்.

### புரிந்துகொள்ள வேண்டிய சில உண்மைகள்:

1) வாழ்த்துக்களைப் பரிமாறுவது என்பது பிற மதத்தவர்களின் தீனை ஏற்று அங்கீகரித்ததாக அமையாது. ''உங்களுக்கு புதுவருட வாழ்த்துக்கள்'' என்று கூறுவதன் மூலம் அவர்களது கொள்கையைத் திருப்தியோடு ஏற்று அகீதாவைப் பின்பற்றியொழுகியதாக அர்த்தம் கிடையாது. முஸ்லிம்களுடன் போராடாத, அவர்களது இருப்பிடங்களில் இருந்து அவர்களை வெளியேற்றாத சமாதானமாக வாழும் பிற இன, மதத்தவர்களுடனான உறவுகள் பற்றிய கொள்கையை அல்குர்ஆன் விளக்கும் போது அவர்களுடன் நற்பண்புகளோடு நடந்துகொள்ளுமாறே பணிக்கிறது.

2) அந்நியர்களுடனான உறவுக்கு அடிப்படையாக அமைவது சமாதானம் என்பதே பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தாகும். சமாதான சமரசம் என்பது ஷரீஆ வேண்டி நிற்கின்ற ஒரு பெறுமானமாகும். மனிதனை மனிதனாகப் பார்ப்பதற்குக் கற்றுத் தந்த இஸ்லாம் இந்த அடிப்படையைத் தவிர வேறு எதனைத்தான் குறிப்பிட முடியும். எனவே பிற மத சகோதரர்களுடனான உறவுகள் குறித்த எமது பார்வை சீராக உள்ளதா எனப் பார்த்துக் கொள்வதே இன்றைய முதன்மைத் தேவையாகும்.



3) அந்நியர்களுடனான உறவு எப்படி அமைய வேண்டும் என்பதை ஸூரா மும்தஹினாவின் ஏழாம் எட்டாம் வசனங்கள் தெளிவாகவே தந்துள்ளன. மார்க்கத்தின் காரணமாகப் போராடாத மற்றும் உங்கள் வாழ்விடங்களில் இருந்து உங்களை வெளியேற்றாத முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் உபகாரம் செய்து நடந்து கொள்ளுமாறும் நீதியாக நடந்து கொள்ளுமாறும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

இங்கு சம நீதிக்கு அப்பால் நற்கருமங்கள் செய்யுமாறும் உபகாரம் புரியுமாறும் ஏவப்பட்டுள்ளமை கவனிக்க வேண்டிய ஒரு விடயமாகும். சமாதான சூழலில் வாழும் அந்நியர்களுடன் மிகுந்த பண்பாடாக நடக்கும் முஸ்லிம்களை அல்லாஹ் விரும்புகிறான் என்றே அந்த வசனம் முடிகிறது. நாம் அல்லாஹ்வின் விருப்பத்தையும் திருப்தியையும் பெற்றுக் கொள்ளவே எமது வாழ்வை அர்ப்பணம் செய்கிறோம்.

இந்த வசனம் மிகவும் பொதுவான வழிகாட்டலாகும். இதில் கிறிஸ்தவர்கள், யூதர்கள், மக்கா காபிர்கள், ஏனைய பிற மத சகோதரர்கள் அனைவரையும் உள்வாங்கியே அவர்களுடன் மேற்கூறிய நிபந்தனைகளுடன் மிக நல்லமுறையில் உறவைப் பேணுமாறு அல்-குர்ஆன் கட்டளையிட்டுள்ளது.

4) ஆனால் இஸ்லாம் வேதம் கொடுக்கப்பட்டவர்களான யூதர்கள், கிறிஸ்தவர்களுடனான உறவாடல் பற்றி பிரத்தியேகமாகவே பேசுகிறது. அவர்களை அல்-குர்ஆன் எப்போதும் வேதம் கொடுக்கப்பட்டவர்கள் என்றே விளிக்கிறது. காரணம் அவர்கள் அடிப்படையில் இறை வேதம் அருளப்பட்டவர்கள். அவர்களுக்கும் எமக்கும் மத்தியில் இரத்த உறவும், நெருக்கமும் அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது என்பதை ஸூரா பகராவின் 136 ஆம் வசனம் கூறுகிறது. அவர்களுடன் வாதிடும் போது மிக அழகான முறையில் வாதிடுமாறு ஸூரா அன்கபூத் (வசனம் 46) வழிகாட்டுகிறது.

கிறிஸ்தவ புதுவருட வாழ்த்துக்கள் தெரிவிப்பது ஆகுமானதே எனக் கருதும் இஸ்லாமிய அறிஞர்கள் மேற்கூறிய குர்ஆனிய சிந்தனையையும் கருத்திற் கொண்டே பத்வா வழங்கியுள்ளனர்.

5) வேதம் கொடுக்கப்பட்டவர்கள் அறுத்ததை முஸ்லிம்கள் சாப்பிடுவதற்கும் அவர்களுடைய பெண்களை திருமணம் முடிப்பதற்கும் ஷரீஆ அனுமதித்துள்ளது. திருமணம் என்பது அன்பு, மனஅமைதி, இரக்கம் என்ற அடிப்படைகள் மீது எழுந்த பந்தமாகும். அதனடியாக வரும் சொந்த பந்தங்கள், குடும்ப உறவுகள் என்பன இயற்கையானது. அந்த உறவுகளின் கொண்டாட்டங்களில் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி கலந்து கொள்வது, வாழ்த்துப் பரிமாறுவது, ஸலாம் சொல்வது போன்ற நல்லுறவு பேணுவதை இஸ்லாம் எப்படித் தடுக்க முடியும்? திருணம் முடித்து வாழ்வது ஆகுமானது என்று கூறும் ஷரீஆ, நல்லுறவு பேணுவதை ஒரு போதும் தடைசெய்யாது. எனவேதான் சமாதான சூழலில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்களுடன் சிநேகபூர்வமாக நடந்துகொள்வதை இஸ்லாம் விதியாக்கியுள்ளது.

6) இது வேதம் கொடுக்கப்பட்டவர்களுடன் பொதுவாக நடந்துகொள்ளும் இஸ்லாத்தின் கொள்கையாகும். ஆனால் கிறிஸ்தவர்கள் இதனை விடவும் நெருக்கமாகவே உறவுகொள்ள தகுதியுடையவர்கள் என இஸ்லாம் வழிகாட்டுகிறது. ஸூரா மாயிதா 82 ஆம் வசனம் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களுக்கு மிக நெருக்கமானவர்கள் என்பதை பிரஸ்தாபிக்கின்றது.

எனவே மேற்கூறிய நியாயங்களையும் ஷரீஆ நிலைப்பாடுகளையும் கருத்திற் கொண்டு பெரும் பான்மையான நவீன கால இஸ்லாமிய அறிஞர் கள் கிறிஸ்மஸ் பண்டிகை அல்லது புதுவருட வாழ்த்துக்களைப் பரிமாறுவது ஆகும் என்றே தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க முஸ்லிம்கள் குறிப்பாக முஸ்லிம் நாடுகள் கிறிஸ்மஸ் பண்டிகையை அளவுக்கு மீறி கொண்டாடுவது குறித்தும் முஸ்லிம் நாடுகள் அதற்கு வழங்கியுள்ள அளவுக்கு மீறிய இடம் குறித்தும் விசனம் தெரிவித்துள்ளனர்.

பேராசிரியார் அப்துல் அஸீஸ் கஹ்லில் அவர்கள் நடைமுறையில் காணப்படும் நத்தார் பண்டிகை கொண்டாட்டம் குறித்து பதிவுசெய்துள்ள கருத்துக்கள் பின்வருமாறு:

புத்தாண்டு பிறப்பதை முன்னிட்டு சில முஸ்லிம்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடும் முறையை பார்க்கும் போது ஆச்சரியமாக உள்ளது. இந்நிலை அவர்கள் மேற்கின் சிந்தனைக்கு அடிமைப்பட்டு உளவியல் தோல்வியால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்குச் சிறந்த சான்றாகும். முஸ்லிம் சமூகத்தில் முஸ்லிம்களின் இரு பெருநாட்களிலும் இல்லாத பெரும் விழாக் கோலம் நத்தார் பண்டிகையில் களை கட்டுகிறது. கடை வீதிகளிலும் நுழைவாயில்களிலும் கிறிஸ்தவ சின்னங்களுடன் தோரணங்கள் கம்பீரமாக எழுந்து நிற்கின்றன.

இது முஸ்லிம் சமூகமா கிறிஸ்தவ சமூகமா எனப் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு முஸ்லிம் நாடுகளின் நகரங்களின் கடைத் தெருக்கள் தோரணங்களால் விழாக்கோலம் பூணுகின்றன. இதுதான் அந்நிய சிந்தனைப் படையெடுப்பின் பாதகமான தாக்கம் என்றும் அறிவை இழந்து அடிமைப்பட்டுள்ள முஸ்லிம் சமூகத்தின் வெளிப்படையான காட்சிகள் என்றும் பேராசிரியர் கஹ்லீல் குறிப்பிடுகிறார்.

முஸ்லிம் சமூகத்தின் சிந்தனைகளில் மதச்சார்பற்றவர்கள் விதைத்திருக்கும் சந்தேகங்களும் தப்பபிப்பிராயங்களும் மக்களின் பொதுப் புத்தியை மழுங்கடித்துள்ளன. கிறிஸ்தவம் ஒரு மனித நேய மதம் என்றும் இஸ்லாம் பாரமான பொறுப்புகளை விதியாக்கும், சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும், பயங்கரவாதத்திற்கு துணைபோகும் மதம் என்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. எமது பொறுப்பு யாதெனில், இஸ்லாத்தின் மீது புனைந்துரைக்கப்படும் இத்தகைய கற்பிதங்களை நீக்குவதற்கான செயற்திட்டங்களை வகுப்பதாகும்.

கலாநிதி யூஸுப் கர்ளாவி அவர்கள் 2017 களில் நிகழ்த்திய ஒரு குத்பா உரையில் இது குறித்து மிகவும் கடுமையாக விமர்சித்துள்ளார்கள். கட்டாரின் தலைநகர் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக விழாக்கோலம் கொண்டுள்ளதைப் பார்த்து இது முஸ்லிம் தேசமா அல்லது கிறிஸ்தவ தேசமா என மிகுந்த மன வேதனையுடன் கேள்வி எழுப்பியுள்ளார்கள். உண்மையில் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக இது போன்று முஸ்லிம் நாடுகள் பிரமாண்டமான விழா எடுத்து அதனைக் கொண்டாடுவது ஹராம் என்று பத்வாவும் வழங்கியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பிறந்த தின நாளை கொண்டாடுவது ஷிர்க் என்றும் பித்அத் என்றும் சர்ச்சைப்பட்டு வாதிடும் எமது சமூகம் ஈஸா (அலை) பிறந்த நாளை மீலாத் தினத்தை விட வெகு விமர்சையாக எப்படிக் கொண்டாட முடியும்?! அதுவும் அவர் மாரி காலத்தில் பிறந்ததாக ஆதாரமே இல்லை. இங்கு பிரச்சினை அதுவல்ல. இன்னொரு சமயத்தின் சடங்குகளை கண் மூடித்தனமாகப் பின்பற்றுவது பாவமாகும் என கர்ளாவி அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்.

கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டம் என்பது அவர்களது இறைவழிபாடுகளோடு எல்லை மீறிய களியாட்டங்கள் கொண்ட திருவிழாவாகும். அந்த விழாவில் நாம் பங்கு கொள்வதானது ஈஸா (அலை) அவர்களுக்கு நாம் செய்யும் இழுக்கும் துரோகமுமாகும் என்பதை முஸ்லிம்கள் மனங்கொள்ள வேண்டும்.

இது முஸ்லிம் சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயங்களாகும். முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் வாழ்த்துக்கள் தெரிவிப்பது பற்றி கர்ளாவியின் பத்வா நெகிழ்ந்து கொடுக்கும் அதே சமயம் முஸ்லிம் நாடுகள் நத்தார் பண்டிகைக்காக எல்லை மீறிக் கொண்டாடுவதை மறுதலித்துள்ளார்கள்.

நாம் இலங்கை தாய்த் திருநாட்டில் பல்லின சமூகமாக வாழ்கின்றோம். எனவே இங்கு மனித நேய உறவுகளைப் பாதிக்கும் வகையில் நடந்து கொள்ள முடியாது. எனினும் தேவையில்லாமல் வலுக்கட்டாயமாக எம்மை நாமே புதிய சம்பிரதாயங்களில் உட்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையுமில்லை. நிர்ப்பந்த சூழ்நிலைகளில் கிறிஸ்மஸ் பண்டிகைகளில் கலந்துகொள்வது அல்லது அது போன்ற சிங்கள, தமிழ் புத்தாண்டு விழாக்களில் கலந்து கொள்வது என்பது ஷரீஆ சலுகை தந்த இடமாகும்.

எனவே எல்லை மீறிய விதத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்ந்து கொள்வதே ஒரு முஸ்லிமுக்கு அழகாகும்.

இது குறித்து ஷரீஆவின் நிழலில் ஆய்வுகளை மேற்கொண்ட பெரும்பான்மையான நவீன கால இஸ்லாமிய அறிஞர்களின் சிந்தனை இஸ்லாமிய வரையறைகளைப் பேணி வாழ்த்துக்களைப் பரிமாறுவதிலோ அல்லது அன்பளிப்புக்களைப் பரிமாறுவதிலோ குற்றமில்லை என்பதாகும்.

இந்த சிந்தனையே எமது சூழலுக்கும் மிகவும் பொருத்தமானது என நம்புகிறோம். அல்லாஹ் மிக அறிந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமையும் அதிபர்களின் வகிபாகமும்



பரப்பளவிலும் உள்ளடக்கத்திலும் விரிவடைந்து செல்லும் கல்வி மனித வாழ்வின் சகல துறைகளிலும் ஊடுருவி நிற்கின்றது. இத்தகைய கல்வியின் முழுப் பயன்பாடுகளையும் மாணவர்கள் பெற்று உயர் அடைவுகளையும் ஒழுக்க சீலங்களையும் எட்ட வேண்டுமாயின், பாடசாலை முழுச் சமூகத்தையுமே எல்லையாகக் கொண்டு இயங்க வேண்டியுள்ளது.

பாடசாலையின் இத்தகைய இயங்கு நிலையை சிறப்பாக ஒழுங்கமைப்பதில் தீர்க்க தரிசனமான தலைமைத்துவம் பாடசாலைக்கு அவசியமாகின்றது. எந்தவொரு கல்வியினதும் அத்திவாரமாக இருப்பது பாடசாலைக் கல்வியே. பாடசாலை என்பது வினைத்திறனுள்ள ஒரு சமூக நிறுவனம். சமூகத்தின் சக்திமிக்க வளமாகவும் குறிப்பிட்ட மக்கள் தொகுதியின் அதிகபட்ச எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் இடமாகவும் பாடசாலைகளே விளங்குகின்றன. இதன் காரணமாக, பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் களமாகவும் பாடசாலைகள் உள்ளதை மறுக்க முடியாது.

பாடசாலை எனும் சமூக நிறுவனம் தனது இலக்குகளை எட்டாத விடத்து, ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார எதிர்பார்ப்புக்களை எட்டுவதும் சாத்தியமற்றது. பாடசாலையின் உயர் அடைவு மட்டத்தையும் உன்னதமான ஒழுக்கசீலங்களையும் அடைய வேண்டுமாயின், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், அரச கண்காணிப்பு முகாமை என கல்விப் பங்காளர்கள் ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஒரு நிறுவனத்தின் தரமான வெளியீடுகள் தரமான உள்ளீடுகள் மூலமே சாத்தியமாகின்றது. பாடசாலையும் ஒரு நிறுவனம் என்ற வகையில் தரமான உள்ளீடுகள் உறுதிசெய்யப்பட வேண்டும். அதேபோன்று பாடசாலை என்பது ஒரு நிறுவனம் எனும்போது அங்கு ஒரு சிறந்த முகாமையாளரும் தகுதியும் அர்ப்பணமும் கொண்ட ஊழியர் படையும் தேவைப்படுகின்றது. அவர்கள் மூலமே பாடசாலை எனும் நிறுவனத்தின் இலக்குகளை எட்ட முடியும்.

இந்த வகையில் பாடசாலைக் கல்வியின் நடுநாயகமாக உள்ள அதிபர்கள் முகாமையாளர் என்ற வகையிலும், தலைவர்கள் என்ற வகையிலும் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. இன்றைய கல்வியியலாளர்கள் இது குறித்து விரிவாக விவாதித்து வருகின்றனர்.

முதலில் மிகச் சிறந்த பாடசாலையொன்றின் பண்புகள் எவை என அடையாளம் கண்டு அத்தகைய சிறந்த பாடசாலையொன்றை உருவாக்குவதில் அதிபர் ஏற்க வேண்டிய வகிபாகம் குறித்து கலந்துரையாடுவது பொருத்தமாகும்.

ஒரு சிறந்த பாடசாலையின் பண்புகளாக பின்வருவனவற்றை அடையாளப் படுத்தலாம்.

1. வினைத்திறன் மிக்க தகுதி வாய்ந்த ஆசிரியர் குழாம்.
2. கல்வி அபிவிருத்திக்குப் போதுமான வளங்கள்
3. ஆரோக்கியமான சமூகத் தொடர்பாடல்
4. மாணவர்களின் உயர் வருகை வீதம்
5. பெறுபேறுகளில் உயர் அடைவு மட்டம்
6. சிறந்த ஒழுங்குக் கட்டுப்பாடு
7. உயர்ந்த ஒழுக்க சீலங்கள்
8. மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் பௌதிக சூழல்
9. தெளிவான முகாமைத்துவக் கட்டமைப்பு
10. உயர்வான இணைப்பாடவிதான செயற்பாடுகள்
11. பாடசாலை மட்டத்தில் சமூகம் குறித்த தெளிந்த புலக்காட்சி
12. தொடர்ச்சியான கற்றல் செயற்பாடுகள்

இப்பண்புகளைக் கொண்டதாக ஒரு பாடசாலையை வளர்த்தெடுக்க வேண்டுமாயின், அங்கு பல்வகைத் திறன்கள் கொண்ட, கல்வியுலகம் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ள, நேர்ப்பாடான மனப்பாங்குள்ள ஓர் முகாமையாளர் அவசியம். முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தின் இலக்குகளை எட்டும் பொருட்டு அதன் வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெற்று வழிநடாத்தும் திறனைக் குறிக்கின்றது.

கல்வி என்பது பொருளாதாரம், தொழில்நுட்பம் மாத்திரமன்றி, மனித குலத்தின் வாழ்வுக்கான தடைகளை நீக்கி, விடுதலை செய்வதற்குமான ஆதாரமாக அமைதல் வேண்டும். இந்நிலையில், கல்விச் செயற்பாட்டின் அடிப்படைக் களமாக அமையும் பாடசாலைகளின் முகாமைத்துவம் புதிய சிந்தனைகளோடும் புதிய உத்திகளோடும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உலகளாவிய கருத்துத் தெளிவும் தூர நோக்கும் நிறுவனம் தொடர்பான விளக்கமும் செயற் திறனும் கொண்டதாக நாம் எதிர்பார்க்கும் பாடசாலை முகாமைத்துவம் அமைய வேண்டும். ஏனெனில், பாடசாலை சமூகத்தின் தேவைகளைப் பிரதிபலிக்கும் நிறுவனம். இன்றைய கல்வி சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப விரிவடைந்து செல்கின்றது. விளைவாக, கடந்த காலங்களைப் போன்று இன்றைய பாடசாலைக் கல்வி இல்லை. அது பல்வேறு சவால்களை விடுக்கின்ற ஓர் களமாக மாற்றமடைந்துள்ள நிலையில், அச்சவால்களை ஏற்று, பாடசாலையை முன்னெடுக்கத் தகுதியான அதிபர்கள் தேவையாகின்றனர். இதற்கு திறன்கள் மாத்திரம் போதுமானதல்ல. தலைமைத்துவப் பண்புகள், அர்ப்பணம், ஆளுமைப் பண்புகள், கவர்ச்சியான தொடர்பாடல் திறன் என்பனவும் அவசியமாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அதிபர்கள் முகாமையாளராக மட்டுமன்றி, தலைவர்களாகவும் செயல்பட வேண்டியுள்ளது.

(தொடரும்)

## சரியாக... (07 ஆம் பக்கத் தொடர்)

பிபிசி செய்தியாளர்களின் செய்மதித் தரவுகள் சிங்கியாங்கின் மேற்குப் புறமாக உள்ள பாலைவனக் கட்டடங்கள் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் அல்ல எனவும், அவை உய்குர் சந்தேக நபர்களை அடைத்து வைப்பதற்கான சிறைச்சாலைகளே என்பதை உறுதி செய்துள்ளது. இதற்கென சீன அரசாங்கம் 2.9 பில்லியன் டொலர்களை செலவு செய்துள்ளதாகவும் ஜேம்ஸ் டவ்ன் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் சீனாவின் இப்பாலைவன சிறைச்சாலை குறித்து விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிங்யாங் மாகாணத்தின் பரப்பு 1.6 மில்லியன் சதுர கி.மீ. ஆகும். இம்மாகாணத்தின் எல்லைப் புறமாக மங்கோலியா, ரஷ்யா, கஸகஸ்தான், கிரிகிஸ்தான், தாஜிகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. இம்மாகாணத்திலேயே வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்ட உய்குர் முஸ்லிம் குடியரசும் உள்ளடங்கியிருக்கின்றது. தற்போது அது சிங்யாங் உய்குர் சுயாட்சிப் பிராந்தியம் என்றே அழைக்கப்படுகின்றது.

வரலாற்றுப் புகழ் மிக்க பட்டுப்பாதையுடன் இப்பிராந்தியம் நெருங்கிய தொடர்பு கொண்டது. சமீப காலங்களில் இப்பிராந்தியத்தில் பெற்றோலிய வளமும் கனிமப் பொருட்களும் உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டது. அதேவேளை, சீனாவின் அனைத்து மாகாணங்களிலும் மிக அதிகளவிலான இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யப்படும் பிராந்தியமாகவும் இதுவே விளங்குகின்றது. இப்பிராந்தியத்தில் உய்குர், ஹேன், ஹொய், கிர்கிஸ் மொங்கோல்ஸ் போன்ற இனக் குழுமங்கள் வாழ்கின்றன.

வித்தியாசமான மொழிகள் கலாச்சாரங்கள் மற்றும் மதங்களைப் பின்பற்றும் சிறுபான்மைச் சமூகங்களில் உய்குர் முஸ்லிம்களே பெரும்பான்மையாக உள்ளனர். அவர்களுக்கு மத்தியிலிருந்து தனிநாட்டுக் கோரிக்கைக்கான குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. அது சீனா அரசாங்கம் மக்கள் மீது கட்டவிழ்த்த அடக்கு முறையின் விளைபொருளாகும்.

எவ்வாறாயினும், சீனாவின் பாலைவனச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலட்சக்கணக்கான உய்குர் முஸ்லிம்களின் தலைவிதி குறித்து கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. அரக்கான் ரோஹிங் யர்கள் போன்று உய்குர் முஸ்லிம்களும் சமகாலப் புவிப் பரப்பில் மிக மோசமாக சோதிக்கப்படுகின்ற சிறுபான்மையாக இருந்து விடக் கூடாது.




# மனச்சோர்வு கொண்டவர்களுடன் உடனிருத்தல்



மனச்சோர்வுக்குட்பட்டோருடன் இருத்தல் அவரது மனச் சோர்வைப் போக்குவதற்கு வழிவகுக்கும் என்கிறோம். எனினும், ஒரே நபர் அவரோடு எப்போதும் இருப்பது சாத்தியமன்று. எமது அன்றாட சமூக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் சோலியானவர்கள், வேலைப்பழு மிக்கவர்கள். இங்குதான் குடும்பத்தினர், நண்பர்கள், அக்கம் பக்கத்தினர், சமூக சேவை அமைப்பினர்களின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

குறிப்பிட்ட நெருங்கிய உறவினர் ஒருவர் பக்கத்தில் இருக்க முடியாத போது அவருடன் இருப்பதற்கு அவரைப் பராமரிப்பதற்கு அல்லது அடிக்கடி வந்து பார்ப்பதற்கு ஆட்கள் தேவைப் படுகிறார்கள். யாரேனும் ஒரு உறவினர் தற்காலிகமாகத் தங்கியிருந்து குறிப்பிட்ட நாட்கள் பராமரிப்புக்காக முன் வரலாம். இப்பணியைப் பகிர்ந்து கொள்பவர்களின் பட்டியலொன்றைத் தயாரிப்பது ஒவ்வொரு நாளும் ஒன்றிரண்டு நட்பான முகங்கள் வந்து போவதை உறுதி செய்யும்.

நோயின் ஆரம்ப கட்டத்தில் மனச்சோர்வுள்ளவர்களுடன் பேசிக் கொண்டிருக்க முடிந்தால் அது அவர்களுக்கு பெருமளவு பயனளிக்கும். அந்நோய் வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவோ உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவதாகவோ ஆவதைத் தடுக்க முடியும்.

நோய் அக்குறிப்பிட்ட நபரை முழுமையாக அமிழ்த்தி விடுவதற்கு முன்னர் அவரது வாழ்க்கை முறையை மாற்றுவதற்கான வாய்ப்பை அது வழங்கும். எடுத்துக் காட்டாக, குறைவான மன அழுத்தத்தைக் கொடுக்கும் வேலையொன்றை அவர் தேடிக் கொள்ளலாம். அல்லது இழப்பு உணர்விலிருந்து விடுபடுதல் குறித்து கலந்தாலோசனை செய்யலாம்.

பொது மருத்துவர்கள் பலரும் சமூக மனநலச் செவிலியர்களும் சமூகப் பணியாளர்களும் இத்தகையோருக்கு கலந்தாலோசனை வழங்குவதற்கான பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள். அவர்களுடன் பேசுவது பயனுள்ளதாக இருக்கும். தனியார் கலந்தாலோசனை வழங்கும் மனநலப் பயிற்சியாளர்களும் இருக்கிறார்கள். அதற்கு பணம் செலவு செய்ய வேண்டிய வசதி இருக்க வேண்டும்.

மேற்கத்திய நாடுகளில் பொது மருத்துவ மனைகளில் இருக்கும் தேசிய மருத்துவ சேவை ஆலோசகர்களிடம் நீண்ட வரிசையில் மனச்சோர்வாளர்கள் காத்திருப்பதைக் காணலாம். [illegible] மனநலச் செவிலியர்கள் பாதிக்கப்பட்டோரின் வீடுகளுக்குச் சென்று அவரதும் அவரது குடும்பத்தினரதும் பிரச்சினைகளை கவனமாகக் கேட்டறிந்து ஒரு தீர்வை அடைய உதவுவார்கள்.

சமூகப் பணியாளர்கள் தேவையான ஆதரவும் செயல்படுத்தச் சாத்தியமான அறிவுரைகளையும் வழங்குவார்கள். மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயனளிக்கக் கூடிய வேறு சேவைகள் பற்றிய தகவல்களையும் வழங்குவார்கள். ஒரு ஆலோசனை வழிகாட்டி சிறப்பு ஆலோசனை மருத்துவரே. அதாவது ஒரு மனநிலை மருத்துவரைப் பார்ப்பதற்கு வழிகாட்டலாம். ஒரு [illegible] துவரிடம் ஆலோசனை கேட்பதற்கு வெட்கமோ கூச்சமோ இருக்கக் கூடாது. நரம்பியல் மருத்துவர்கள், குழந்தை மருத்துவர்கள் போல இவர்களும் சிறப்புப் பயிற்சியும் அறிவும் கொண்ட மருத்துவர்கள்தாம். உடல் நோய்க்குப் பதிலாக மனநோய்களில் இவர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நோயாளிகளின் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடி அதற்கான சிகிச்சையை அளிப்பார்கள். நோய் தீவிரமாகியிருந்தால் மருத்துவமனையில் தங்குவதற்கும் ஆலோசனை வழங்குவார்கள்.

### தவிர்க்கப்பட வேண்டியவை

மகிழ்ச்சியாக இருப்பதற்கும் பரிவுணர்ச்சியற்ற மித மிஞ்சிய மகிழ்ச்சிக்கும் இடையே மெல்லிய வேறுபாடு உண்டு. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் நோயாளியை மகிழ்ச்சியாக இருக்க வைத்து, ஊக்கப்படுத்தி, மற்றவர்களோடு அமைதியாக நடந்துகொள்ள வைப்பதற்கு நாம் முயன்றாலும் அவர்களால் அதைச் செய்ய முடியாது. அந்நோய் அப்படிப்பட்டது.

ஊக்கப்படுத்தும் வார்த்தைகளைப் பேச நமக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தாலும் அதைச் செய்யக் கூடாது. காரணம் முயன்று பார்ப்பதற்கான ஆற்றல் இப்போது அவர்களுக்கு இல்லை. நாம் அவற்றை வற்புறுத்துவது அவர்களது மனதை புண்பட வைக்கும். ஏனெனில், இப்போதே அவரது நிலமைக்கு அவரே காரணம் என்று நாம் குற்றம் சாட்டுவதாகவும் அறவே அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நடத்தையை நாம் குறை கூறுவதாகவும் நோயாளி எண்ணத் தலைப்படுவார்.

நோயாளியின் செயற்பாடுகளை அவரே சரி செய்ய வேண்டும் என்று நாம் கூறுவதன் மூலம் அவரது குற்ற உணர்வையும் சுயவெறுப்பையும் நாம் அதிகமாக்குகின்றோம். ஒளி மிகுந்த பக்கத்தை அவரால் பார்க்க முடியாது. ஏனெனில், அவர் நினைக்கும் இடத்திலிருந்து பார்த்தால் அப்படியொரு இடமே இல்லை. அவரை விட மோசமான நிலையில் வேறு சிலர் இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டுவதும் உதவாது. பட்டினியில் இருப்பவர்களும் எயிட்ஸால் செத்துக் கொண்டிருப்பவர்களும் உண்டு என்று எனக்குத் தெரியும். ஆனால், அது எனக்கு உதவாது.

''நான் நரகத்தில் இருக்கின்றேன்'' என்று மனச்சோர்வாளர்கள் சொல்வதுண்டு. எனவே, மனச்சோர்வு நோயாளிகளை நாம் தண்டிக்கவோ விமர்சிக்கவோ கூடாது. அவர்களோடு விவாதம் செய்யாமல் இருப்பது நமக்குக் கடினமாக இருக்கலாம். அவரது தன்னுணர்ச்சிக்கு நாம் பச்சாதாபம் காட்டலாம். அவரது எதிர்மறை நிலைமை நாம் மென்மேலும் வலுவூட்டக் கூடாது. அதனால் சில ஊக்கமளிக்கும் வாகங்களோடு நிறுத்திக் கொள்வது நல்லது.

எடுத்துக்காட்டு, ''நீங்கள் துன்பப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. ஆனால், அது எப்படிப்பட்டது என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், அதிலிருந்து விடுபட்டு மீண்டும் நீங்கள் பழைய நிலமைக்கு திரும்பி வந்து விடுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய... (03 ஆம் பக்கத் தொடர்)

2018 அக்டோபர் 31 இல் இடம்பெற்ற ஒரு ஊடக சந்திப்பில் உரை நிகழ்த்திய சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் ராஜா குணரத்ன ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பதவிக்கு கொண்டு வருவதில் தமது நிகழ்ச்சி நிரலை இலங்கையில் நிறைவேற்றத் துடிக்கும் வெளிநாடுகளின் சதி உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நிகழ்ச்சி நிரலின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே ரணில் விக்கிரமசிங்க பணியாற்றினார். அதன் மூலம் அவர் இலங்கையை மோசமான நிலைக்குத் தள்ளினார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான குழப்பகரமான ஒரு அரசியல் பின்னணியில்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மோசமான ஆட்சி, ஊழல் மோசடி, ஆள்கடத்தல், கொலை, கொள்ளை, அச்சுறுத்தல் என பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ள மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்துள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் உள்ள மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து முழு நாட்டையும் அதிர்ச்சியில் ஆழ்த்தினார். பிரதம மந்திரியாக ரணில் பதவி வகிக்கின்ற நிலையிலேயே அவர் இதைச் செய்துள்ளார்.

புதிய பிரதமர் நியமனமாகி முழுமையாக புதிய அமைச்சர்கள் நியமனமாவதற்கு முன்னரேயே முதல் காரியமாக மஹசொன் பலகாய தலைவர் அமித் வீரசிங்கவும் அவரது சகாக்கள் ஒன்பது பேரும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் கண்டியில் திகன பிரதேசத்தில் முஸ்லிம்கள் மீதான வன்முறைகளுக்குக் காரணமாக இருந்தவர்கள். வெளியில் இருந்த அவரது சகாக்கள் அமித்தை தோளில் சுமந்து அமோக வரவேற்பு அளித்துள்ளனர். இந்த விடுதலை மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு விடுக்கப்பட்டுள்ள செய்தி என்ன என்பது தான் இன்றைய முக்கிய கேள்வி.

இந்த நாட்டின் இன்றைய அரசியல் குழப்ப நிலை இந்தியாவால் அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம் என்ற வலுவான சந்தேகம் சகல மக்கள் மத்தியிலும் உள்ளது. ராஜ்ய சபா உறுப்பினர் சுப்பிரமணிய சுவாமியின் அண்மைய இலங்கை விஜயம் மகிந்த ராஜபக்ஷ நாமல் ராஜபக்ஷவுடன் அண்மையில் மேற்கொண்ட இந்திய விஜயம், நரேந்திர மோடியுடனான சந்திப்பு என்பனவற்றின் தொடராகவே இந்தக் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஒரு உறுதியான தேசிய வாதி. அவருடனான சிறந்த நட்பின் மூலம் இந்தியா பல நன்மைகளைப் பெறும். எனவே இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது என சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

குற்றங்களிலும் ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கவே மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆணை வழங்கினர். ஆனால் இன்று இந்த ஆணையை அவர் மீறி உள்ளார். குற்றங்களுக்காக யாரை சட்டத்துக்கு முன் நிறுத்துவேன் என்று அவர் இந்த நாட்டு மக்களுக்கு வாக்களித்தாரோ இன்று அதே நபர்களை அவர் அரியாசனத்தில் அமர்த்தி உள்ளார்.

இலங்கை இயற்கை எழில் கொஞ்சும் ஒரு சொர்க்க பூமி. 1948 இல் சுதந்திரம் அடைந்த வேளையில் அது பெரும்பாலும் அபிவிருத்தி அடைந்த ஒரு நாடாகவே காணப்பட்டது. கல்வி அறிவுள்ள மக்கள், ஒருமைப்பாடு, அரசியல் ஸ்திரத்தன்மை, உறுதியான பொருளாதாரம், வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்கு, இன ஒற்றுமை, நல்லிணக்கம் என எல்லாமே இருந்தது. இவற்றைக் கொண்டு இந்த நாட்டை அபிவிருத்தி அடைந்த ஒரு நாடாக, மக்கள் மேலும் செழிப்பாக நிம்மதியாக வாழக்கூடிய ஒரு நாடாக இதை ஆக்கியிருக்கலாம். ஆனால் அதை விடுத்து இனவாத அரசியல் இங்கே தலையெடுத்தது. ஊழல் தலைவிரித்தாடியது. இவற்றின் விளைவாக உலகில் மிக மோசமாக நிர்வகிக்கப்பட்ட ஒரு நாடு என்ற பட்டியலில் இந்த நாடு சேர்ந்தது. இவற்றின் விளைவாக மக்களே துன்பப்பட்டனர்.

இங்கிருந்து இனி எங்கு செல்வது என்பதுதான் இனி உள்ள முக்கியமான கேள்வி. தார்மீக விழுமியங்களையும் சமயக் கொள்கைகளையும் மதிக்கக் கூடிய ஒரு மூன்றாவது சக்தி பெரும்பான்மை சமூகத்தில் இருந்து உருவாகுமா? அந்தச் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பிடியில் இருந்து இந்த நாட்டை விடுவிக்குமா, இவை தான் இன்று மக்கள் மத்தியில் எழுந்துள்ள வினாக்கள்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மைத்திரியும் ரணிலும் நிறைவேற்றத் தவறியதால் இன்று இருவருமே தமது அரசியல் முக்கியத்துவத்தை இழந்து விட்டனர். இதனால் தான் மூன்றாம் தரப்பொன்றின் தேவையை நான் இதற்கு முன்னரும் பல கட்டுரைகளில் வலியுறுத்தி உள்ளேன்.

## பாராளுமன்றத்தை... (01 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான ஒரு நாள் செலவு தொர்பான தகவலைப் பெறுவதற்காக தகவல் அறியும் விண்ணப்பத்தின் மூலமாக பப்ரல் அமைப்பு பெற்றுக் கொண்ட தகவல் மூலமாக ஒரு நாளைக்கு பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான செலவாக 2 கோடி 57 இலட்சம் (25,721,413) ரூபா செலவாவதாக அறியக் கிடைத்துள்ளது.

ஒரு நாள் பாராளுமன்ற அமர்வுக்கு 46 இலட்சம் ரூபா செலவாவதாக முன்னர் சபாநாயகர் கூறியிருந்த போதிலும் தற்போது இந்த அளவு தொகை செலவாவதாக பப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை நாறடித்த நவம்பர் 14,15,16 ஆம் திகதிகளுக்கான மூன்று நாள் செலவாக அண்ணளவாக 08 கோடி ரூபா பொதுமக்களின் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களுக்காக 244 கோடி (2,443,534,315) செலவாகியுள்ளது.

## நாட்டுக் குடிகளுக்குப்... (03 ஆம் பக்கத் தொடர்)

வருவதில் தமது நிகழ்ச்சி நிரலை இலங்கையில் நிறைவேற்றத் துடிக்கும் வெளிநாடுகளின் சதி உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நிகழ்ச்சி நிரலின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே ரணில் விக்கிரமசிங்க பணியாற்றினார். அதன் மூலம் அவர் இலங்கையை மோசமான நிலைக்குத் தள்ளினார் என்று அவர் குறிப்பிட்டுள்ளதாக பத்தியாளர் லதீப் பாரூக் சுட்டிக் காட்டுகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் சொல்ல வருகின்ற தமது கட்சிக்கான சுதேசத் தலைவர் என்ற கருத்தினை உறுதிப்படுத்துவதற்கான இன்னொரு பக்க நியாயமாக ரணிலுடைய வெளிநாட்டு விசுவாசம் எடுத்துக் காட்டப்படுகிறது. மேற்கு சார்பு நாடுகளுக்கு நாட்டைத் தாரை வார்ப்பதுவே அவரது தாரக மந்திரமாக இருப்பதாக நாட்டில் பலரும் நம்புகின்றனர். நாட்டின் ஜனாதிபதி கூட ரணில் பற்றி இப்படியான கருத்துக்களைத் தான் வெளியிட்டார்.

யாப்புச் சதிப்புரட்சி மூலம் ரணிலைப் பதவி கவிழ்த்த பின்னர் ஜனாதிபதி ஆற்றிய உரையில், 2015 இல் உயிரைப் பணயம் வைத்துப் பெற்றுக் கொண்ட அரசியல் வெற்றியை கொச்சைப்படுத்தும் வகையில் நேர்மையான அரசியலுக்கு ஒவ்வாத அரசியல் செயற்பாடுகளில் ரணில் பிரவேசித்தார். இலங்கையின் எதிர்காலத்தை அவரும் அவருடன் நெருங்கிச் செயற்படுகின்ற, மக்களின் உண்மையான உணர்வுகளை உணராத ஒரு சில செல்வந்தர்களின் களியாட்ட செயற்பாடுகளாக்கிக் கொண்டார் என்று தெரிவித்தார்.

இது போன்ற இன்னும் பல விடயங்களை அவர் அடுக்கிக் கொண்டே சென்றார். நல்லாட்சி எனும் கருப்பொருளை ரணில் மிக வெளிப்படையாகவே துஷ்பிரயோகம் செய்தார். அதன் கோட்பாடுகளையும் நோக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் அவர் நாசமாக்கினார். ரணில் விக்கிரமசிங்க பொதுவாகவே கூட்டுச் செயற்பாடற்ற தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கும் முரட்டுத் தனமான பிடிவாதமான முறையிலேயே அரசாங்கத்துடன் செயற்பட்டார். அவருடைய நெருங்கிய சகாக்களுடன் மாத்திரமே முடிவுகளை எடுப்பதற்காகக் கலந்தாலோசித்தார்.

மத்திய வங்கி பகற் கொள்ளையின் பின்னர் அவர் எப்படிச் செயற்பட்டார் என்பதை நாடறியும். மத்திய வங்கியின் இந்தச் சம்பவமே பொருளாதார ரீதியில் இன்னும் எம்மால் தலைதூக்க முடியாத பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தியது. ஈஏபி நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிநாட்டு வர்த்தகர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எந்த விலை மனுக்களும் இதற்கெனக் கோரப்படவில்லை. பெறுமதிமிக்க விலைமனுக் கோரல்கள் எல்லாம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் நில புலங்களை எந்தவித தங்கு தடைகளும் இன்றி வெளிநாடுகள் பெற்றுக் கொள்ளும் வகையில் காணி விஷேட விதிமுறைகள் சட்டம், காணி வங்கியை நிறுவுவதற்கான சட்டம் என்பவற்றுக்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய பொருளாதார சபையை பலவீனப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். ரணிலின் முரட்டுத் தனமான தீர்மானங்களே இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

05 ஆம் திகதி நடைபெற்ற ஜனமஹிமய கூட்டத்திலும் இதே கருத்துக்களை வலியுறுத்திய ஜனாதிபதி, வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப எங்களால் செயற்பட முடியாது. ரணில் இந்த நாட்டை நெருக்கடியில் தள்ளினார். ஆடம்பரமாய் வாழ்பவர்களுக்கு வசதியமைத்துக் கொடுத்தார். லிபரல் அரசியலொன்றை நடத்திச் சென்றார். தேசிய ஒற்றுமையை மறந்தார். பட்டாம் பூச்சி வாழ்க்கையில் நுழைந்தார் எனப் பலவாறாகக் கூறிச் சென்றார்.

இவற்றில் எதனையும் ரணில் விக்ரமசிங்க மறுக்கவில்லை. தான் யாப்புக்கு விரோதமாக நீக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர் கருத்து வெளியிட்டு வருகிறார். ஜனாதிபதி சொல்லுகின்ற அளவில் அவர் வெளிநாடுகளின் அக்கறைக்கேற்பவே செயற்பட்டிருந்தாலேயே இவை எதனையும் அவரால் மறுக்க முடியாத நிலை ஏற்படும். இனி இவை அனைத்தையும் உண்மை எனக் கொண்டால் இப்படி ஒருவரை அடுத்த தலைவராக யோசிப்பதை விட்டு விட்டு இப்படியானவர்களுக்கு தேசத் துரோகப் பட்டம் வழங்குவதற்கு நாட்டு மக்கள் தயங்க மாட்டார்கள்.

இது தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையாக இருக்குமானால் கட்சிக்குள் மட்டுமல்ல, நாட்டுக் குடிகளில் எவருமே இப்படியொரு தலைமையை விரும்பப் போவதில்லை. எனவே நாட்டுக் குடிகளுக்குத் தேவையான வகையில் கட்சியின் தலைமையை அமைத்துக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டும். இதற்கு ஜனாதிபதி கருத்தில் கொண்ட இருவருமே பொருத்தமானவர்களாகப் பட்டாலும் தலைமை மாற்றம் பற்றிப் பேசுவதற்கே இவர்கள் உதடுகள் நடுங்குவார்களாக இருந்தால் அது கட்சிக்குள்ளால் இருக்கின்ற ஜனநாயகத்தையே கேள்விக்குள்ளாக்குகின்றது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முன்னர் கட்சியில் பெரும்பான்மையை நிரூபிக்கட்டும் என ஐதேக தலைவருக்கு பொதுஜனம் விடுக்கும் சவாலை எதிர்கொள்வதை விட மக்கள் விரும்பும் தலைமையை நாட்டுக்கு விட்டுக் கொடுப்பதே தார்மீக சமுதாயத்தை விரும்பிய ஐதேகட்சியின் தார்மீகக் கடமையாகிறது. இன்றைய அவசரத்தில் இந்த மாற்றத்தைச் செய்வதற்கு ஐதேக துணியாவிட்டால் இன்னும் பல தசாப்தங்களுக்கு ஒரு கட்சியின் அராஜகம் நாட்டில் தொடர்வதற்கு வழிவிட்ட பெருமை ஐதேக வையே சாரும்.

## மிகப் பெரும்... (04 ஆம் பக்கத் தொடர்)

இலங்கையின் கட்சி முறையினை ஜனநாயக ரீதியான கட்சி முறையாகக் கருத முடியாது என்பதுடன், அவற்றை சர்வாதிகாரத் தலைவர்களை பயிற்றுவிக்கும் நிறுவனமாகவே பார்க்க முடிகிறது. அரசியலமைப்பு உருவாக்கம் என்கின்ற விடயத்திலும் இலங்கைக்கு அபகீர்த்தியான வரலாறொன்றே காணப்படுகிறது. எல்லோரதும் கௌரவத்தை பாதுகாக்கக் கூடிய நீண்டகால நிலவுகையின் கூடிய யாப்பொன்றை உருவாக்கிக் கொள்ள இலங்கைக்கு இன்றளவும் முடியவில்லை. யாப்பினை மீறுவது சாதாரண தவறொன்றாகவே கருதப்படுகின்றதே ஒழிய மன்னிப்புக் கொடுக்க முடியாத அளவு பாரதூரமான தவறாகக் கருதப்படுவதில்லை.

யாப்பை பாதுகாப்பதற்கு தமக்குள்ள பொறுப்பு குறித்து அரசியலமைப்புச் சபைக்கோ நிறை வேற்றுத்துறைக்கோ நீதித்துறைக்கோ போதிய புரிதல் இல்லை.

பொதுவாக ஜனநாயக அரசு முறைக்குள் பிரதான மூன்று அதிகார சபைகளுள் ஒன்று யாப்பை மீறும் சந்தர்ப்பத்தில் ஏனைய இரண்டு சபைகளும் யாப்பின் பாதுகாப்புக்காக வேண்டி தனித்தனியாகவும் கூட்டாகவும் முன்நிற்க வேண்டும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் அம்மூன்று சபைகளும் அப்படியான சம்பிரதாயத்திற்குப் பழக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதுவரை இடம்பெற்றுள்ள யாப்பு மீறல்களை அவதானிக்கும் போது அவ்வப்போது நிறைவேற்றுத்துறை, அரசியலமைப்புச் சபை மற்றும் நீதித்துறை ஆகிய முச்சபைகளும் யாப்பை மீறிய பல்வேறு சந்தர்ப்பங்களை கண்டுகொள்ள முடிகிறது. பண்டாரநாயக்க 1956 இல் கொண்டு வந்த சிங்கள மொழிச் சட்டமானது அப்போது அமுலில் இருந்த சோல்பரி யாப்பை மீறிய சட்டமொன்றாகவே நோக்கப்படுகின்றது. இம்மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண நீதிமன்றத்தை நாடிய போது நீதிமன்றம் அன்று நீதியை சரியாக நிலைநாட்டியிருப்பின் பிற்பட்ட காலத்தில் தமிழ் புரட்சியொன்று இடம்பெற்றிருக்காது.

அதுபோன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை காணப்பட்ட பாராளுமன்றத்தின் காலப்பகுதியை மக்கள் கருத்துக் கணிப்பொன்றின் மூலம் நீடிக்கும் கொள்கைக்கு நீதிமன்றம் இடமளிக்காவிட்டால் 83 இல் கறுப்பு ஜூலையும், ஜேவிபி புரட்சியும் உருவாகியிருக்காது. பிளவுபட்ட தீர்ப்பொன்றாயினும் பெரும்பாலானவர்கள் கருத்துக் கணிப்புக்கு ஆதரவு தெரிவித்தமையினால் அதை நடைமுறைப்படுத்த முடிந்துள்ளது. அரசியல் முறையில் இது ஏற்படுத்திய மாற்றமும் அதற்காக வேண்டி நாட்டிற்கு செலுத்த வேண்டியேற்பட்ட நஷ்டஈடும் அதிகமாகும்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானவை. அரசியலமைப்புச் சபை இக் குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மையைக் கண்டறியவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் அவருக்கு எதிராக ஒப்படைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் பெற்றுக்கொள்வதிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும் எனக் கூறும் உத்தரவொன்றையும் நீதிமன்றம் பிறப்பித்தது. அப்போதைய சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத போதும் இச்சட்ட விரோதத் தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தும் இடத்திற்கு பாராளுமன்றம் செல்லவில்லை.

இறுதியில் நாட்டின் பிரதம நீதியரசர் இளம் யுவதியொருத்தியுடன் தியவன்னா ஓயாவுக்கு அருகில் நிறுத்தி வைக்கட்டிருந்த காரொன்றிற்குள் தகாத உறவில் ஈடுபடும் நிகழ்வு போக்குவரத்துப் பொலிஸ் குழுவொன்றுக்கு அகப்பட்டது. இந்நிகழ்வு நீதித்துறையின் கௌரவத்தை சிதைக்கும் வகையில் நாட்டில் மிகப்பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிகழ்வாகக் காணப்பட்டாலும் நிறைவேற்று அல்லது அரசியலமைப்புச் சபை அதாவது யாப்புக்கூடாக அவரை பதவி கவிழ்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஷிராணி பண்டாரநாயக்கவினை நீக்குவதற்கு நிறைவேற்றும் அரசியலமைப்பும் ஒன்றிணைந்து கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசியலமைப்பின் அடிப்படைகளை மாத்திரமல்லாமல், இயல்பு நீதியின் அடிப்படைகளையும் உயரிய பட்சம் மீறிய சந்தர்ப்பமாகவே நோக்கப்பட வேண்டும். இப்பிரச்சினையின் போது நீதிமன்றம் அவருக்கு நீதியை நிலைநாட்ட முயற்சித்த போதிலும் நிறைவேற்றுத் துறையும் அரசியலமைப்பும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

இலங்கையில் அரசியலமைப்பை மீறுவது புதிய விடயமல்ல என்பதும் அது பாரதூரமான குற்றமாகக் கருதும் கலாசாரம் இலங்கையில் கட்டியெழுப்பப்படவில்லை என்பதையும் மேற்படி உதாரணங்களுக்கூடாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. யார் செய்தாலும் யாப்பை மீறுவது பாரதூரமான குற்றச் செயலாக ஏற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்திக் கொள்ளாத வரையில் அரசியல் அர்த்தத்தில் இலங்கையை பண்பாடான சமூகத்தை கொண்டதொரு நாடாகக் கருத முடியாது.

### அரசியலமைப்பை மீறுதல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்புக்கு முரணாக பெரும்பான்மை பலமுள்ள கட்சியிடம் காணப்பட்ட ஆளும் அதிகாரத்தை நீக்கி பெரும்பான்மை பலமற்ற கட்சிக்கு ஆளும் அதிகாரத்தை ஒப்படைத்த சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் பாதுகாப்புக்காக வேண்டி யார் செயற்பட்டிருக்க வேண்டும்? அரசியலமைப்புச் சபை ஜனாதிபதியின் தன்னிச்சையான இந்த முடிவுக்கு எதிராக பலமான முறையில் எழுந்திருக்க வேண்டும். ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் இந்த நடவடிக்கையில் அரசியலமைப்புக்கு விரோதமான தன்மைகளை நாட்டிற்கு தெளிவுபடுத்தி, பாராளுமன்றத்தைக் கூட்டும் முடிவுக்கு சென்றிருக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கு இன்னுமின்னும் மீறல்களை செய்வதற்கு இடமளிக்காத வகையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆரம்பித்திருக்க வேண்டும். அரசியலமைப்புச் சபை, தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டத்தரணிகள் சங்கம் ஆகிய நிறுவனங்கள் அச்சமின்றி கருத்துச் சொல்லும் இடத்திற்கு சென்றிருக்க வேண்டும் என்பதுடன், ஊடக நிறுவனங்களும் அச்சப்படாமல் பொதுமக்களுக்கு உண்மையைச் சொல்லும் நிலைக்குச் சென்றிருக்க வேண்டும்.

நீதித்துறையின் தயவை நாடுவதற்கு ஏதேனும் ஒரு தரப்பு நீதித்துறையை அணுகியிருக்க வேண்டியிருந்ததுடன், இவ்வாறான கட்டத்தில் நீதிமன்றம் பிரச்சினையை இன்னும் தொலைதூரம் செல்லவிடாமல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்க வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் பெரும்பாலான ஊடகங்கள் மக்களுக்கு உண்மையை மூடி மறைக்கும் கொள்கையில் நின்றே செயற்பட்டதை காண முடிந்தது. இதற்கு முன்னர் ஓரளவுக்கேனும் முக்கியமான செய்திகளை பிரசுரித்த ஊடகங்கள் கூட ஜனாதிபதியின் இந்தச் செயலை நியாயப்படுத்தும் வகையில் செய்திகளை பிரசுரித்திருந்தன. தற்பொழுது இந்தச் சம்பவத்துடன் தொடர்பில் பெருமளவிலான அடிப்படை உரிமை மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுகளை வெளிப்படையாகப் பார்க்கும் போது அரசியலமைப்பை மீறியிருப்பது புலப்படுவதோடு, குற்றமிழைத்தவரின் தராதரம் பாராது நீதியை நிலைநாட்ட நீதிமன்றம் செயற்படாவிடின் நீதித் துறைக்குள்ள மக்கள் அங்கீகாரம் இன்னுமின்னும் சிதைந்து போவதற்குக் காரணமாக அமையும். மறுபக்கத்தில் இச்சந்தர்ப்பத்தில் நீதித்துறை நீதியை நிலைநாட்ட முன்வரும் பட்சத்தில் அது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கையின் நீதித்துறைக்கு மிகப்பெரும் அங்கீகாரம் கிடைப்பதற்குக் காரணமாக அமையும்.

தற்போதைய அரசியலமைப்பு நெருக்கடியை சட்டத்திற்கு உட்பட்ட வகையில் தீர்த்துக் கொள்ள முடியுமாக அமைகின்ற போதிலும் அதனால் இலங்கை முகம் கொடுத்துள்ள ஒட்டுமொத்த நெருக்கடிகளும் தீர்ந்துவிடாது என்பதுடன், அதற்காக வேண்டி பரந்ததொரு மாற்றம் தேவைப்படுகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்வது மிக முக்கியமானது.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0772 583 661 People's Bank A/C 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச... (01 ஆம் பக்கத் தொடர்)

இலங்கைக்கான அடுத்த தவணைக் கடனை வழங்குவதற்கான கலந்துரையாடலை ஒத்திவைத்ததாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

2016 இல் தொடங்கி மூன்று வருடங்களுக்குள் பொருளாதார சீர்திருத்தத்துக்காக இலங்கைக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கியிருந்தது. இதுவரை 1 பில்லியன் டொலர்களை இலங்கை பெற்றிருக்கிறது.

இது தொடர்பில் நான்கு மீளாய்வுகளை ச.நா. நிதியம் நடத்தியிருக்கிறது. எஞ்சியுள்ள தவணைகளை வழங்குவதற்கான ஐந்தாவது மீளாய்வு நவம்பர் நடுப்பகுதியில் நடைபெற இருந்த போதும் இலங்கையில் நடைபெறும் அரசியல் கலவரங்கள் காரணமாக, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படவிருக்கும் டிசம்பர் முதலாம் வாரம் வரை இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. 2019 இற்குள் ஏழு மீளாய்வுகளில் இந்த நிதி உதவி இலங்கைக்குக் கிடைக்கவிருக்கிறது.

## மூடி முதலீட்டுச்... (01 ஆம் பக்கத் தொடர்)

தற்பொழுது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக அந்நியச் செலாவணி ஒதுக்கு கீழ் மட்டத்துக்கு வந்துள்ளதால் கடனை மீளச் செலுத்துவதற்கான இயலுமை எதிர்பார்க்கப்பட்டதை விட இழிவு மட்டத்துக்கு வந்திருப்பதாக செவ்வாயன்று (20) வெளியிடப்பட்ட மூடியின் அறிக்கை தெரிவித்துள்ளது. நிலைமை தொடருமானால் 2020 இல் இலங்கையின் கடன் மொத்தத் தேசிய உற்பத்தியின் 75 வீதத்துக்கு மேலாக உயரும் எனவும் இது ஆ, தரத்திலுள்ள நாடுகளில் எதிர்பார்க்கப்படும் வீதத்தை விட மிக அதிகமாகும் எனவும் மூடி எதிர்வு கூறியுள்ளது.

இலங்கை அரசின் கடன் மீளச் செலுத்தும் இயலுமை மிகவும் பலவீனமாக இருப்பதாலும் அரசியல் ஸ்திரத்தன்மையற்றிருப்பதாலும் முதலீட்டாளர்களைப் பாதிக்கக் கூடிய தீர்மானங்கள் திடீர் திடீரென எடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. அந்நியச் செலாவணி ஒதுக்கு குறைவாக இருப்பதால் அடுத்து வரும் ஐந்து வருடங்களில் இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கவிருக்கிறது. தற்போதுள்ள அரசியல் நெருக்கடியில் நிறுவனமயப்பட்டவைகள் எல்லாம் குழம்பிப் போயிருக்கும் நிலையில் இவற்றுக்கான உடனடித் தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது. நிதி நிலைமைகள் மேலும் மோசமடைந்தால் இலங்கையை மேலும் தரமிறக்க வேண்டியதாகவிருக்கும் என மூடியின் அறிக்கை தெரிவிக்கிறது.

மூடி 2010 முதல் உலக நாடுகளைத் தரப்படுத்தி வருகிறது. இருந்த போதிலும் இந்த மதிப்பீடு முறையற்றது என இலங்கை மத்திய வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 1 பில்லியன்... (01 ஆம் பக்கத் தொடர்)

காணப்படுவதாகவும் நல்லாட்சி அரசின் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 148 ஆவது அத்தியாயத்தின் படி, அரச நிதியின் மீது பாராளுமன்றத்துக்கு முழு அதிகாரமும் இருக்கிறது. சட்டரீதியான அரசாங்கம் ஒன்று இல்லாத நிலையில் அடுத்த வருடத்துக்கான செலவுகளைச் செய்வதற்கு வழியேதும் இல்லை. அரச நிதிக்கான எந்தவித மாற்றீடுகளையும் யாப்பு குறித்துரைக்கவில்லை. அத்தியாயம் 150 (03) இன் கீழ் புதிய பாராளுமன்றத்தை உருவாக்கும் வரை ஜனாதிபதியினால் 03 மாதங்களுக்கான நிதியை ஒதுக்க முடியும். ஆனால் அந்த நிலைமை அல்ல இப்போது இருப்பது. எனவே 2019 ஜனவரி ஆரம்பிப்பதில் இருந்து நாடு நிதி நெருக்கடியை எதிர்நோக்கப் போகிறது. அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கெல்லாம் அனுமதி பெற முடியாத நிலை தோன்றும் என்று அவர் தெரிவித்தார்.

## 30 பில்லியன்... (01 ஆம் பக்கத் தொடர்)

நாட்டில் நிலவும் அரசியல் கலவரத்தை அடுத்தே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை திருப்பி எடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல் பதிவுகளை ரத்து செய்து வருவதாகவும், டிசம்பரில் எதிர்பார்க்கப்படுகின்ற சுற்றுலா வருமானங்கள் இதனால் இழக்கப்பட வாய்ப்பிருப்பதாகவும் த ஸ்ட்ரைட் டைம்ஸ் குறிப்பிட்டிருந்தது.

இதேவேளை நவம்பர் 14 ஆம் திகதி வரையான இலங்கையின் அந்நியச் செலாவணி ஒதுக்கு 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டதாகவும் வருட இறுதியில் இது 7.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் மத்திய வங்கி ஆளுனர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார். அடுத்த வருடம் முதல் இலங்கை வருடாந்தம் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## 30 பில்லியன்... (01 ஆம் பக்கத் தொடர்)

திகன வன்முறைகளின் போது பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் விவரங்களைச் சேகரிப்பதற்கோ, அறிக்கையிடுவதற்கோ அரச தரப்பில் எந்த முயற்சியும் எடுக்கப்படாத நிலையிலும் எந்த ஜனாதிபதிக் கமிஷனும் நியமிக்கப்படாத நிலையிலும் தமது அமைப்பு பொதுஜன கமிஷனொன்றை நியமித்து இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறது. பொதுமக்களிடம் இருந்தும் களத்தில் நேரடியாகவும் பெற்றுக் கொண்ட தகவல்களின் படி இந்தத் தாக்குதல்களை பொலிசார் தடுத்து நிறுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாகத் தெரிகிறது. இவை அனைத்தும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. சட்டத்தரணிகள் மற்றும் பல புத்திஜீவிகள் இந்தக் கமிஷனில் அடங்கியிருக்கின்றார்கள் எனவும் காமினி ஜயவீர தெரிவித்தார்.

## வெளிநாட்டுத்... (01 ஆம் பக்கத் தொடர்)

அழைக்கப்பட்டிருந்தனர். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நோர்வே, சுவிட்சர்லாந்து, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, கொரியா, பங்களாதேஷ் நாடுகளின் ராஜதந்திரிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட விதம் பற்றியும், புதிய பிரதமர் வல்லந்தமாக நியமிக்கப்பட்ட விதம் பற்றியும் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட மற்றும் கூட்டப்பட்ட விதங்கள் பற்றியும் உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவு பற்றியும் ராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்ததாகத் தெரிவித்தார்.

தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு பல முறை முயற்சித்த போதும் வல்லந்தமாக நியமிக்கப்பட்ட பிரதமரினால் தனது பெரும்பான்மையை உறுதி செய்ய முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார். புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமரின் நியமனமும் அரசாங்கமும் தொடர்ந்தால் நாட்டில் கொந்தளிப்பு நிலையே உருவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரையான அனைத்துச் செயற்பாடுகளுமே நாட்டின் சட்டத்துக்கும் யாப்புக்கும் முரணாகவே நடைபெற்றுள்ளன. இது அபாயமானதொரு நிலையாகும். இதனால் தான் இந்த அபாய நிலைமையை உரிய இடங்களுக்குத் தெளிவுபடுத்தி இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவுமாறு வெளிநாட்டு ராஜதந்திரிகளை வேண்டினேன் எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

## மக்களை... (07 ஆம் பக்கத் தொடர்)

பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்பும் போது முஸ்லிம்களுக்கு என்று பார்க்காமல் நல்லவர்களையும் தகுதியானவர்களையும் தெரிவுசெய்து அனுப்ப வேண்டும். இது சிங்களவராகவோ, தமிழராகவோ இருக்கலாம். இவர்களுக்கூடாக தங்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே தங்கியிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

- **முஸ்லிம் சமூக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களது தேசத்திற்கான பங்களிப்பும் செயற்பாடுகளும் எவ்வாறு அமைய வேண்டும் என நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?**

எமது முஸ்லிம் சமூகத்தின் சிவில் சமூகமும் சிவில் நிறுவனங்களும் பலவீனமான நிலையில் உள்ளதை காணமுடிகிறது. எனவே மக்களை விழிப்புணர்வூட்டக் கூடிய சிவில் சமூக அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அதனூடாக மக்கள் அறிவூட்டப்பட வேண்டும் என்ற முடிவுக்கு எனது ஆய்வுக் கூடாக வந்துள்ளேன். அதுவே உரையாடலுக்கான ஆரம்பப் புள்ளியாகும். இதிலிருந்து அடுத்த கட்ட ஆய்வுகளை நோக்கி நகர வேண்டும்.

விக்டர் ஐவன் போன்ற செயற்பாட்டாளர்கள், ஜயதேவ உயன்கொட போன்ற கல்விமான்கள் செயற்பட்டு வரக்கூடிய பொதுவான சில சிவில் சமூக அமைப்புகளும் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் இரண்டு அமைப்புக்களில் பணியாற்ற வேண்டும். ஒன்று, இது போன்றவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும். தமிழ் சிங்கள மக்களுடன் சேர்ந்து வேலைசெய்ய வேண்டும். எங்களுடைய பிரச்சினைகளை மாத்திரமல்லாமல் அடுத்த சமூகத்தவர்களது பிரச்சினைகள் மற்றும் நாட்டின் முன்னாலுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக பேசவும் பங்களிப்பு செய்யவும் வேண்டும். அவற்றுக்காக இந்த அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

இரண்டாவது விடயம் என்னவெனில், முஸ்லிம் சமூகத்தினுள் சில அடிப்படையான விடயங்களை செய்யவும் வேண்டும். தேசிய ஷூறா சபை, ஜம்மிய்யதுல் உலமா சபை போன்றவற்றின் செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன. ஜம்மிய்யதுல் உலமா என்பது மார்க்க ரீதியானதொரு தலைமைத்துவம். எனது கருத்தின் படி, மார்க்க நிறுவனங்களின் தொடர்பு என்கின்ற பின்னணியில் பார்க்கும் போது அரசியலில் எவ்விதத்திலும் எக்கட்டத்திலும் தலையிடாமல் இருப்பதே பாதுகாப்பாகும். எந்தவிதத்திலும் அரசியலைப் பேசாமல், அரசியல்வாதிகளுடன் தொடர்புகளைப் பேணாமல் இருப்பதே அவர்களுக்கு மிகவும் நல்லது.

ஆனால் சிவில் சமூகத்தை அறிவூட்டக் கூடிய நிறுவனங்கள் எங்களுக்குள்ளால் இன்னும் உருப்பெற வேண்டும். இருக்கின்ற நிறுவனங்களை பலப்படுத்தவும் வேண்டும். இடையில் சில நிறுவனங்கள் உருவாகின. சட்டத்தரணிகள் அவற்றை வழிநடாத்தினார்கள். ஆனால் இடைநடுவில் மறைந்துபோயின. காரணம் என்னவென்று தெரியாது. பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் காரணங்களும் இருக்கலாம்.

சமூகத்தில் நன்கு படித்தவர்களும், தொழில் முயற்சிகளில் ஈடுபடக்கூடியவர்களும் உள்ளார்கள். இவர்கள் அனைவரும் அரசியல் ரீதியானதொரு விழிப்புணர்வுக்கு வர வேண்டும். இவ்வாறு முஸ்லிம் சமூகத்திற்குள்ளால் இருந்தும் அடுத்த சமூகத்தவர்களுடன் இணைந்தும் பணியாற்றுவதினூடாக ஆரோக்கியமானதொரு வளர்ச்சிக் கட்டத்தை நோக்கி நகரலாம்.

- **தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்? உங்களது ஆய்வுக்கூடாக இது போன்ற சூழ்நிலைக்குரிய தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளதா?**

நிகழ்வுகளை ஒவ்வொன்றாகப் பார்ப்பதை விட அந்த நிகழ்வுக்குப் பின்னால் வேலைசெய்யக்கூடிய சிந்தனைகள் அல்லது நகர்வுகளை மிகக் கவனமாக நோக்குவதே சிறந்தது. அந்த வகையில் ஜனநாயகத்தை அச்சுறுத்தக் கூடிய நபர்கள் அல்லது நகர்வுகள் அல்லது கோஷங்கள் எதுவாக இருந்தாலும் முஸ்லிம் தரப்பு அதனை முறியடிப்பதில் ஏனைய சக்திகளுடன் ஒத்துழைக்க வேண்டும். அதற்காகப் பாடுபடுபவர்களோடு இணைந்து செயற்பட வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக வேண்டி அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். அதற்கு இனபேதம், கட்சி வித்தியாசங்கள் கிடையாது என்கின்ற கருத்திலேயே நான் உள்ளேன்.

அந்த வகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் விரும்பியோ நிர்ப்பந்தமாகவோ தற்போது எடுத்திருக்கும் முடிவுகள் சரியானது. வரவேற்கத்தக்கது. முஸ்லிம் கட்சிகளை மையப்படுத்தியதாக எனது ஆய்வு இருப்பதால் சமகாலத்தில் இடம்பெற்று வருகின்ற இந்தப் பிரச்சினை பற்றிய விடயங்கள் **ஏதும் ஆய்வில் முன்வைக்கப்படவில்லை.**

ஷரீஆ துறை சார்ந்த அறிஞர்கள் குறிப்பாக மகாஸிதுஷ் ஷரீஆ சிந்தனையை இலங்கையில் பேசக்கூடியவர்கள் அரசியலுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது அதாவது, மகாஸிதுஷ் ஷரீஆவை அடுத்த கட்டங்களுக்கு நகர்த்தும் போது நவீன உலக ஒழுங்கு, சர்வதேச அதிகாரப் போராட்டம், பொருளாதார ஒழுங்கு, தேசிய அரசியல் உரையாடல்கள் போன்ற பின்னணியில் இருந்துகொண்டு தான் இதனைப் பேச வேண்டும். இந்தப் பின்னணியிலேயே எமது உரையாடல் நகர வேண்டும். அப்போது தான் மகாஸிதுஷ் ஷரீஆவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் நடைமுறை வடிவம் கொடுக்கவும் முடியும்.

இன்ஷா அல்லாஹ் எதிர்காலங்களில் தப்ஸீர், நவீன இஸ்லாமிய சிந்தனை ஆகிய பகுதிகளில் கூடிய கவனம் குவிக்க இருப்பதுடன் இலங்கை முஸ்லிம் அரசியல் சார்ந்த உரையாடல்களிலும் கலந்து கொள்ளலாம் என விரும்புகிறேன்.

## பாராளுமன்றச்... (01 ஆம் பக்கத் தொடர்)

தப்பிக் கொள்ளும் கலாச்சாரமொன்றைப் பரவலாக்குவதாகவும் சட்டத்தின் ஆட்சியைப் புறக்கணிப்பதாகவும் அமைந்துள்ளது எனவும் TISL குறிப்பிட்டுள்ளது.

நவம்பர் 14,15,16 ஆம் திகதிகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் நடந்து கொண்ட விதம் 2018 ஏப்ரலின் நடத்தைக் கோவையை மீறுவதாக அமைவதோடு, பாராளுமன்றத்தைக் கூட்ட விடாமல் தடுத்தமை பாராளுமன்றம் (அதிகாரமும் சிறப்புரிமைகளும்) சட்டத்தையும் மீறுவதாக அமைந்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி, எந்த வகையான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், ஒழுங்குப் பிசகுகள் அனைத்தும் சட்டப்படி குற்றமாகக் கருதப்படுவதோடு 02 வருட சிறைத் தண்டனைக்கும் உரித்தானதாகும். இது தொடர்பில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான விளக்கங்களை சட்ட மாஅதிபரிடம் கேட்டு நடைமுறைப் படுத்துவதற்கு பாராளுமன்ற அங்கத்தவர்கள் சபாநாயகருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் மசோதாவையோ, மனுவையோ, தீர்மானங்களையோ முன்வைக்கும் போது மட்டுமே அவர்களைக் கைது செய்யாமல் இருக்க முடியும். இதுபோன்ற குற்றச் செயல்களின் போது அவர்கள் சட்டத்தின் முன் குற்றவாளிகளே என்றும் TISL குறிப்பிட்டுள்ளது.

ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபயசேகர குறிப்பிடும் போது, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பில் நாங்கள் முன்வைத்த முறைப்பாடுகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் இவ்வாறான அசமந்தப் போக்கு மக்களுக்கு மத்தியில் நம்பிக்கையீனத்தை வளர்த்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் (LfD) குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக பொலிஸ் மாஅதிபரிடம் முறைப்பாடொன்றை மேற்கொள்ளவிருப்பதாக சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவும் பாராளுமன்றத்தில் குழப்பம் விளைவித்தவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்திருக்கிறார்.

## முஸ்லிம் சமூகத்தின்... (11 ஆம் பக்கத் தொடர்)

எனவே சிங்கள சமூகத்திற்கு முஸ்லிம்கள் பற்றிய சரியான விளக்கம் வழங்கப்பட்டால் எல்லாம சரியாகிவிடும் என்று பொதுவாகவே பேசி யுள்ளனர்.

இது எதனைக் காட்டுகிறது. முஸ்லிம் சமூகம் அதனது பிரச்சினைகளை சரியாக முன்வைக்கத் தயார்படுத்தப்படவில்லை என்பதையே காட்டுகின்றது. எனவேதான் இக்கட்டுரையின் ஊடாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை சமூகமயப்படுத்துவதற்கான சில முன்மொழிவுகளை முன்வைக்கலாம் என நினைக்கின்றேன். இதில் பலருக்கு வித்தியாசமான கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் இதனைத் துவக்கமாகக் கொண்டு எமது சமூகத்தில் எமது பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்கான ஆரம்பமாகக் கொள்ள முடியும்.

இந்த வகையில் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளாக,

1. எல்லை நிர்ணயத்தில் எமக்கு ஏற்பட்ட இழப்புகள் பேசப்பட வேண்டும். குறிப்பாக மாகாண, உள்ளூராட்சி சபை எல்லை பிரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகம் முஸ்லிம் சமூகம். இதன் இழப்புகள் விபரமாக ஆய்வுசெய்யப்பட வேண்டும்.

2. வடக்கு கிழக்கு இணைக்கப்படுவதன் உடனடி எதிர்கால பாதிப்புகள் பேசப்பட வேண்டும். இதேவேளை முஸ்லிம் அலகு கோரிக்கையின் சாதக பாதக விடயங்கள் ஆய்வுசெய்யப்பட வேண்டும்.

3. மாகாண, மாவட்ட, உள்ளூராட்சி எல்லைகள் பிரிக்கப்படும் போது இதற்கு முன்னர் உள்ள எல்லை நிர்ணயங்களின் போதும் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட காணி இழப்புகள் பேசப்பட வேண்டும். எமது சமூகத்திற்கு பெரும் அநீதிகள் இதன்போது இழைக்கப்பட்டுள்ளது.

4. முஸ்லிம் சமூகத்தின் காணிகள் இராணுவ முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகள் இனங்காணப்பட வேண்டும்.

5. முஸ்லிம்களின் வியாபாரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மட்டுமன்றி கடந்த ஒரு தசாப்தமாக நடைபெற்று வரும் வியாபார நடவடிக்கை பற்றிய மதிப்பீடுகள், போட்டிகளில் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையிலேயே தேசிய தரப்படுத்தல் வியாபார நிறுவனங்கள் வெற்றி பெற்றுள்ளன.

6. கல்விப் பிரச்சினை, தொழில்வாய்ப்பு, [illegible] வற்றில் ஏற்பட்டுள்ள பின்னடைவு எமது விகிதாசாரத்திற்கு ஏற்ற பல்கலைக்கழக நுழைவு இல்லை. வேலைவாய்ப்பு இல்லை உயர் பதவிகளில் எமது சமூகம் சார்ந்தவர்கள் மிகக் குறைவு.

7. எமது மத்ரஸாக்களின் அடைவுகள், அதன் பாடத்திட்டம் வெளியேறுகின்ற உலமாக்கள் சமூகத் தேவைகளை எந்தளவு நிறைவேற்றுகின்றனர் என்பன பற்றிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

8. இலங்கை முஸ்லிம் சமூகத்தை நோக்கிய சர்வதேச சக்திகளின் செயற்பாடுகள் அதன் அதனை வெற்றிகொள்ளும் வழிவகைகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

எமது பள்ளிவாசல்கள் சமூக மேம்பாட்டிற்கு ஏற்ப செயற்திறன் பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டும். பள்ளிகள் வெறும் தொழுகைக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான இன்னும் பல பிரச்சினைகளின் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

இந்த விடயங்களின் தீர்வுகள் பற்றி அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் தஹ்வா அமைப்புக்கள் எமது உயர் அதிகாரிகள், தனிமனிதர்கள் சிந்திக்க வேண்டும். இதேவேளை இவ்விடயங்களுக்கான தீர்வுகள் பற்றி சிந்திக்கும் போது எமது நாடு, அதன் அபிவிருத்தி அதில் எமது பங்களிப்பு என்பன பற்றியும் சிந்திக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளது. எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் நாட்டின் ஏனைய இனங்களோடும், கட்சிகளோடும், பொது நிறுவனங்களோடும் இணைந்து செயலாற்றும் வழிமுறைகளினூடாகவே இவற்றை நோக்க வேண்டும் என்பது இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## 55 ஆவது இராணுவ மெய்வல்லுனர் போட்டி

# சப்ரினுக்கு வெள்ளி, அஷ்ரபுக்கு வெண்கலம்



நடந்து முடிந்த இவ்வாண்டின் இறுதி மெய்வல்லுனர் நிகழ்வில் நிந்தவூர் அஸாம், ஆசிக் இருவரும் அபார திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். இலங்கை இராணுவத்திலுள்ள படைப்பிரிவுகளுக்கு இடையில் நடத்தப்படுகின்ற 55 ஆவது இராணுவ மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த வாரம் (ஒக் 29-31) சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளிலேயே இவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர்.

ஆண்களுக்கான பரிதி வீசுதல் போட்டியில் 45.21 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்த இஸட்.டி.எம்.ஆஷிக் தங்கப் பதக்கத்தை வென்றார். இராணுவ இயந்திரவியல் மற்றும் பொறியியல் பிரிவின் சார்பில் போட்டியிட்ட இவர், தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் தங்கப் பதக்கம் வென்று சாதனை நிலைநாட்டினார். இராணுவ தொண்டர் படையணி மெய்வல்லுனர் போட்டிகளிலும் இவர் தொடர்ச்சியாக இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். அண்மையில் நடந்து முடிந்த 44 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் இவர் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். இந்த வருடம் இவர் இரண்டு தங்கப்பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பரிதி வீசுதல் போட்டியில் வென்றுள்ளார்.

பத்துப் போட்டிகள் இணைந்த (Decathlon) நிகழ்ச்சியில் பங்குகொண்ட இதே படைப்பிரிவைச் சேர்ந்த மொஹமட் அஸாம் முதற் தடவையாக வெள்ளிப் பதக்கம் வென்றார். குறித்த பத்துப் போட்டிகளில் 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும், நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தையும், குண்டெறிதலில் முதலாம் இடத்தையும், ஈட்டி எறிதலில் ஐந்தாம் இடத்தையும், 1500 மீட்டர் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும், பரிதி வீசுதலில் முதலாவது இடத்தையும், கோலூன்றிப் பாய்தலில் இரண்டாம் இடத்தையும், 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும், 110 மீட்டர் தடை தாண்டி ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும், உயரம் பாய்தலில் முதலாம் இடத்தையும் பெற்று 6706 புள்ளிகளை இவர் பெற்றிருந்தார். ஆண்களுக்கான பத்து அம்சப் போட்டிகளில் இவர் தொடர்ச்சியாக நான்காவது தடவையாக வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கிறார்.

கடந்த மாதம் 44 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு ஆண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் தங்கம் வென்ற (15.80 மீட்டர்) வெலிகம சப்ரின், இம்முறை காலில் ஏற்பட்ட உபாதைகளுடன் போட்டிகளில் கலந்து கொண்டாலும் 15.44 மீட்டர் தூரத்தைப் பதிவு செய்து வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட பொத்துவில் அஷ்ரப், 10.50 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து வெண்கலப் பதக்கம் வென்றார். இவ்வருடம் நடைபெற்ற போட்டிகளில் இராணுவ தொண்டர் படையணி மெய்வல்லுனர் போட்டித் தொடரில் கலந்து கொண்டு 03 ஆவது இடத்தையும், தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் 05 ஆவது இடத்தையும், பாதுகாப்புச் சேவைகள் மெய்வல்லுனர் போட்டித் தொடரில் 03 ஆவது இடத்தையும் பெற்றிருந்தார். இந்தப் போட்டியில் கலந்து கொண்ட திருகோணமலை பாசில் உடையார் 06 ஆவது இடத்தைப் பெற்றார்.

ஆண்களுக்கான 1500 மீட்டர் ஓட்டப் போட்டியில் முதற் தடவையாகக் கலந்து கொண்ட மூதூர் ஆர்.எம். நிப்ராஸ், 3 மூன்று நிமிடங்கள் 56.38 செக்கனில் போட்டியை நிறைவு செய்து வெண்கலப் பதக்கம் வென்றார். மூதூர் அல்ஹிலால், கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் முதலாம் ஆண்டில் கற்கும் இவர், 2016 ஆம் ஆண்டின் இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் 03 ஆவது இடத்தையும், 2017 தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் முதலாவது இடத்தையும் இவர் பெற்றிருந்தார். 2018 முதல் இலங்கை இராணுவத்தில் இணைந்த இவர், பல்கலைக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டித் தொடரில் 1500 மற்றும் 800 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றார்.

# கிக் பொக்ஸிங்:

## உலக அரங்கில் தங்கம் வென்ற அர்ஷான் உவைஸ்



இங்கிலாந்தின் வூர்ஸ்டர்ஷெயாரில் நடைபெற்ற உலக தற்காப்புக் கலைப் போட்டியில் கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த அர்ஷான் உவைஸ் முதலிடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவானார். உலக ஐக்கிய தற்காப்புக் கலை (WUMA) சம்மேளனம் நடத்திய இப்போட்டியில் 45 நாடுகளின் வீரர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டிகளின் ஒ1 எனும் கிக் பொக்ஸிங் பிரிவிலேயே அர்ஷான் தங்கப் பதக்கம் வென்றார்.

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவரான 28 வயது அர்ஷான், கண்டி ரக்பி கழகத்துக்காக விளையாடியவர். 19 வயதுக்குட்பட்ட தேசிய ரக்பி அணியிலும் இவர் இடம் பிடித்திருந்தார்.





மீலாதுன் நபி தினத்தினை முன்னிட்டு தம்பலகாமம் முள்ளிப்பொத்தானை ஹிஜ்ரா நகர் பகுதியில் ஹலீம் நற்பணி மன்றத்தினால் 20-11-2018 அன்று பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்வுகள் ஊடகவியலாளரும், சமூக சேவையாளருமான எம்.எச் அப்துல் ஹலீம் தலைமையில் நடைபெற்றன. இதன் போது முள்ளிப்பொத்தானை பகுதியிலுள்ள சிறுவர்களுக்கிடையேயான போட்டி நிகழ்சிகளின் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தம்பலகாமம் பிரதேச மோட்டார் போக்குவரத்து பொலீஸ் அதிகாரிகளான ஏ.எம். முஸம்மில், ஏ.எச். சுகத் மற்றும் ஹிஜ்ரா கிராம அபிவிருத்தி சங்கத்தின் உபதலைவர் ஏ.சீ. நஜீமுதின் உட்பட நலன் விரும்பிகள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (முள்ளிப்பொத்தானை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.